SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
Colombo £170 + Taxes
We accept all major credit cards
Visa Service to Srilanka, Australia, India & USA
119, Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 11 ♦ ISSUE - 242 ♦ FRIDAY 15 MAY 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




Ontime Tours.co.uk
தமிழர் நிறுவனம் London - Hayes
- Wales Temple போய்வர தனி நபருக்கு £35
- Balaji Temple போய்வர தனி நபருக்கு £30
- Walsingnham Church தனி நபருக்கு £30
8 Days Trip (17-24 August) (சாப்பாடு மற்றும் தங்குமிடம்) France, Spain, Portugal
8 Days Trip (03-10 August) (சாப்பாடு மற்றும் தங்குமிடம்) Swiss, Italy, France
PCO Drivers Required
@ ontime tours
www.ontimetours.co.uk | Tel - 020 8573 7258
info@ontimetours.co.uk | Mob - 07899 925 958

VEZARTO Legal Consultants
Dual Citizenship in Sri Lanka
The Wait is finally over!!
Put your top business Legal Consultants to work for you! Our responsive experts will help you to assert your legal rights in SRILANKA in obtaining Dual Citizenship.
Vezarto Legal Consultants
Sabichi House, Wadsworth Road, Perivale, UB6 7JD
020 8799 7441 / 07459 417 836
www.vezartolegal.com

Accountants & Tax Consultants
- Accounting and taxation services
- Bookkeeping and payroll
- VAT and Tax enquiry Specialists
- Mortgages
Trainee accounting staffs required. Should live locally. Send CVs to info@aceaccountants.co.uk
ACE ACCOUNTANTS & TAX CONSULTANTS LTD
5 The Parade, Monarch Way, Ilford, IG2 7HT
T: 0208 554 0002 | M: 0753 5555 001

End of season sale
30% OFF
on exclusive silk sarees
Royal Sarees
Call now on 07852944188 (By appointment only)
14 Northumberland Road, New Barnet, EN5 1ED
royal-sarees | royalsarees@hotmail.com | 07852 944 188

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors | 115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

SERENDIB LANKA TRAVELS LTD.
22A, Woodford Avenue, Gants Hill, Ilford IG2 6XG
Tel: 02031510310
info@serendib-lanka.co.uk www.serendib-lanka.co.uk
Flights To Sri Lanka
OMAN AIR fr £414 Inclusive of taxes
ETIHAD fr £454 Inclusive of taxes
TURKISH AIRLINES fr £447 Inclusive of taxes
QATAR fr £463 Inclusive of taxes
CALL US NOW ON 0203 151 0310
Also Fly On JET AIRWAYS, SriLankan, Gulf Air, Emirates, Kuwait Airways
*The above fares all include taxes and are subject to availability.

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

**Our Services**

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884

accounts@a-accountants.com - www.a-accountants.com

## Life in the UK / B1- Exam Preparation Classes

**Individuals seeking British naturalization or settlement will be required to do both ESOL Entry 3 (B1 Intermediate) and Life in the UK Test.**






- Practice more than 2000+ Questions
- Language support for all our students
- Practice on Real Test Simulations
- Practice till you Pass
- Practice on Real Test Simulations

**We also Offer**

- Childcare and Preschool Training - CACHE
- Accounting and Payroll with AAT Qualification
- Food Hygiene Training
- IELTS Exam Preparation
- Personal Licence (Off Licence)

For more Information Call **020 8903 9580**

FCL College - Hazel House, 1-3 Lancelot Road, Wembley, Middlesex HA0 2AL

newlife

Home of Fertility, Immunology & Women's Health

## Newlife Fertility Clinic

20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்

Access Fertility

நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்





We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)

www.newlifeclinic.org.uk

T : 01372 738 932

The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

# WANT TO BE A DOCTOR?

**Didn't get a place?**
**Don't worry you haven't missed out..**

**We will help you to find the right place**

**STUDENT LOANS ARRANGED**

- Lowest Tuition Fees
- Guaranteed Entry
- No Entrance Exam

For more details

TEL: 020 8863 4684

Web : www.mashaconsultants.co.uk








REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL AND SHOPFITTING Ltd.






168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk






## Summer Offer





**New and Used Fridge for Sale**
**New Fridge 3.75 Meter**
**£3900 + VAT**

**UK COOL & SHOPFITTING**

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**MOVING & DEVILERY**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

7 Days 24 HRS Services & Repair

# தூவானம்




## தேர்தல் முடிவுகள்..

ஐக்கிய ராச்சியத்தில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் ஐயம் திரிபெற பழமைவாதக் கட்சியினருக்குக் கிடைத்த பெரும்பான்மை ஆதரவென்பதை அறிவித்தாலும், ஐக்கிய இராச்சியத்தின் அங்கமான ஸ்கொட்லாந்து மக்கள் தமது பிரிவினைவாதக் கட்சியான ஸ்கொட்லாந்துதேசியக்கட்சிக்கு அளித்த ஏகோபித்த ஆதரவு, ஐக்கிய இராச்சியத்தின் ஐக்கியத்தை உடைத்துவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளதை அவதானிக்கலாம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

*- உமா மகாலிங்கம்*

## விடுதலைப்போராட்டம் பயங்கரவாதமா?

சுமந்திரன் ஜயாவே, ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவானது ”The country may not have been confronted with a violent separatist agenda, if the political consensus at the time of independence had been sustained and if policies had been implemented to build up and strengthen the confidence of the minorities around the system which had gained a reasonable measure of acceptance” இதனூடாக நல்லிணக்க ஆணைக்குழுவானது தமிழர்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தினை நியாயப்படுத்தியுள்ளது. ஆனால், நீங்களும், உங்களது கட்சியும் எதிர்மாறான நிலைப்பாட்டில் உள்ளீர்களே? இது எப்படி?

*- சித்தாவத்தை உதயகுமார்*

## இதுதான் ஜனநாயகமா?

‘தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை குறித்தோ, தமிழ்த் தலைமைகளின் அரசியல் பயணம் குறித்தோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிய வேண்டும் என்றோ, தமிழ் ஊடகத்துறை சார்ந்தோர் பேச முற்படின் அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள் என்ற முத்திரை குத்தப்படுகின்றது. குடிநீரில் எண்ணெய் கலந்துள்ளது என்று எழுத முற்படும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் இதே முத்திரைதான் குத்தப்படுகின்றது? இவ்வாறு மட்டக்களப்பில் நடைபெற்ற சிவராம் நினைவு நாளில் கூறியிருக்கிறார் வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் தேவராஜ் அவர் பெயர் குறிப்பிட்டு கூறாவிட்டாலும். இந்திய தூதரகத்திற்கு தன்னைப்பற்றி அள்ளிவைத்த கூட்டமைப்பின் தலைமையைத்தான் இவ்வாறு கூறியிருக்கிறார் என்பது தெரிகிறது.

*- கயல்விழி*

## இனவழிப்பு செய்தவர்களுக்கு சம்பந்தனும் ஆதரவு

மே 18 ஐ தமிழ்மக்கள் இன அழிப்பு நாளாக நினைவேந்தல் நிகழ்ச்சிகளை நடாத்த, சிங்களம் போர் வெற்றி நாளாக கொண்டாடி மகிழ்ந்தது. இப்போது புதிய அரசாங்கம் அந்த நிகழ்ச்சிக்கு ‘பிரிவினை வாதத்திலிருந்து காத்த தினம்’ என்று பெயர் மாற்றி கொண்டாடவுள்ளது. இந்த அறிவிப்பு சிறப்பானது என பி.பி.சி. தமிழ்ச் சேவைக்கு செவ்வி வழங்கியிருக்கிறார் அறளை பெயர்ந்த இரா. சம்பந்தன். 1977ம் ஆண்டுத் தேர்தலில் வாக்கு பொறுக்குவதற்காக தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வெற்றி பெற்று பாராளுமன்ற அரசியலுக்கு வந்தவர்தான் இந்த அற்ப பிறவி சம்பந்தன்.

*- ரோனி பிரான்சிஸ்*

## மறுபடியும் அம்மா

ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுகள் அத்தனையும் ஆதாரமற்றவை என நிராகரிக்கப்பட்டு அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த தண்டனையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டில் நீதித்துறையில் இது போன்ற விசித்திரமான சம்பவங்கள் வேறெங்கும் நடந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. நீதியரசர் குமாரசாமி இருக்கிற திசையில் விழுந்து கும்பிடுங்கள். ஏனெனில் இந்திய நீதித்துறை ஒரு ‘கொமெடி பீஸ்’ என்பதனை உணர்த்தியிருக்கிறார்.

*ஜோசப் அருமைநாயகம்*

## யாழ்ப்பாணத்தில் போதைப் பொருட்கள்

யாழ்ப்பாணம் போதை பொருள் விற்பனை செய்யும் மையமாக மாறி வருவதனை அறிய கவலையாக இருக்கிறது. அண்மையில் மல்லாகத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவிகள் போதைப் பொருள் பாவித்து பிடிபட்டுள்ளனர். தாராளவாத ஜனநாயகம் தமிழர்களுக்கு தாராளமாகத் தருவது போதைபொருட்களும், பாலியல் சீர்கேடுகளுமாகத்தானிருக்கிறது. சிறுவர்களை போருக்கு பயன்படுத்துகிறார்கள் என்று கூக்குரலிட்டவர்கள் எங்கே போய்விட்டார்கள்?

*- இணுவை சி. இரங்கன்*

## ஏன் கேவலப்படுத்துகிறீர்கள்?

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு காசியில் ஆத்மசாந்தி பூசை நடாத்துவதற்கு பணம் சேர்க்கிறார்கள். இதற்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் பூசாரியின் பெயரும் பாவிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் இப்படித்தான் ஏதாவது செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மறுப்பவர்கள் உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி பூசை நடாத்தற்கு வேறு ஏதும் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை.

*- தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர்*

## எதிர்காலமிருக்கிறது உமாவிற்கு

ஹரோ கிழக்குத் தொகுதியில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட உமா குமரன் 19 ஆயிரத்திற்கு அதிகமான வாக்குகளை பெற்றிருக்கிறார். வெற்றி பெற்றவரை விட 5 ஆயிரம் வாக்குகள் அவர் குறைவாகப் பெற்றிருந்தாலும், இளையவரான உமா அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

ஆகவே அவர் சளைக்காமல் பணியாற்ற வேண்டும். வாழ்த்துகள் உமா.

*- ஜெகதீஸ்வரன்*

## ஏன் பேப்பரடிக்கிறியள்?

கடந்த முறை ***ஒரு பேப்பர்*** ஐ எடுக்கச் சென்ற எனக்கு பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது. அதி காலையிலே ஈஸ்ட்ஹாமில் ஒரு கடையில் எல்லா பேப்பர்களுமே வாழையிலை சுற்றி விற்பனைக்கு இருந்தது. அந்த ஓர் கடையில் மட்டுமல்ல இன்னும் சில கடைகளிலும் இதே நிலமை தான் !

*- அகிலன்*

## கூட்டமைப்பின் பத்திரிகையா?

கிங்ஸ்ரன் கவுன்சிலில் நிதியுதவி பெற்று நடாத்தப்படும் ஒரு தமிழ்ப் பத்திரிகை கூட்டமைப்பின் பரப்புரைக்கு பயன்படுத்தப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளையினைச் சேர்ந்தவர்களே இந்தப் பத்திரிகையின் எழுத்தாளர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விதம் அரசியல் கட்சிகளின் பரப்புரைக்கு பயன்படும் பத்திரிகைகளுக்கு கிங்ஸ்ரன் கவுன்சில் நிதியுதவி வழங்குகிறதா? அல்லது சமூகத்தின் மீட்சிக்காக நடாத்துவதாகக் கூறிக்கொண்டு கவுன்சில் நிதியை அரசியல் கட்சிக்கு பயன்படுத்துகிறார்களா?

*- சேர்பிற்றன் பாலா*

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு

“தமிழர்களின் தனிமனித மற்றும் கூட்டு ஆற்றுப்படுத்தலுக்கும் ஒரு தேசமாக எமக்குரிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான எமது பயணத்தின் தொடர்ச்சிக்கும் நாம் எமது இழப்புகளை நினைவு கூர்வதும் நினைவுகளைப் தொடர்ச்சியாக பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது கடமையும் உரிமையுமாகும். ” என தமிழ் முள்ளிவாய்கால் நினைவேந்தல் தொடர்பாக சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் விபரம் பின்வருமாறு:

இலங்கைத்தீவு காலனித்துவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது முதல் இன்றுவரை தொடரும் தமிழ் மக்களுக்கெதிரான தொடர்ச்சியான இனப்படுகொலை நடவடிக்கைகளின் அதிமூர்க்கமான ஒரு காலகட்டம் கிழக்கே 2006 இல் மாவிலாறில் ஆரம்பித்து வடக்கே 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதிப் போரின் காலமாகும்.

இக்காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இழப்பு தனிநபர்களாக இறந்தவர்களது உறவினர் நண்பர்கள் மீதும் அவர்களது குடும்பங்கள் மீதும் ஒட்டுமொத்தமாக தமிழர்களாக எமது கூட்டிருப்பின் மீதும் ஆறாத மனவடுவை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

இந்நிலையில் எமது தனிமனித மற்றும் கூட்டுக் குணப்படுத்தலுக்கும் ஒரு தேசமாக எமக்குரிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான எமது பயணத்தின் தொடர்ச்சிக்கும் நாம் எமது இழப்புகளை நினைவுகூர்வதும் நினைவுகளைப் தொடர்ச்சியாக பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது கடமையும் உரிமையுமாகும்.

இதயம் நிறைந்த வேதனைகளோடு தமிழ்மக்களாகிய நாம் மே 18ஐ அண்மித்து வரும் இவ்வேளையில் உணர்வுபூர்வமாக இத்தினத்தை அனுசரிக்க தமிழ் சிவில் சமூக அமையம் அனைவரையும் வேண்டி நிற்கிறது.

பொருள்பொதிந்த ஒரு நினைவுகூரலை உறுதிப்படுத்த பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கிறோம்.

- அஞ்சலி நிகழ்வுகள் கூட்டு ஒழுங்கு செய்யப்படும் இடங்களுக்கு மக்கள் ஆர்வத்துடன் சென்று கலந்து கொள்ள வேண்டும்.
- அன்றைய தினத்தில் அனைத்து ஆலயங்களிலும் உணர்வுபூர்வமான நினைவேந்தல் வழிபாடுகளை மேற்கொள்ளல்.
- பாடசாலைகளில் காலை ஒன்றுகூடலின்போது நினவுச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தலும் அஞ்சலி உரை ஒன்றை நிகழ்த்தலும்.
- அரச அரசு சார்பற்ற நிறுவனங்களில் பொருத்தமான நேரத்தில் ஒன்றுகூடி நினைவுச்சுடரேற்றி அஞ்சலி செலுத்துதல்.
- தமது நிர்வாகத்திற்கு உட்பட்ட திணைக்களங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனையை வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் விடுக்கவேண்டும்.
- சனசமூக நிலையங்கள், இளைஞர்கழகங்கள் போன்ற பொது அமைப்புக்கள் அன்றைய தினத்தில் மாலைப்பொழுதில் கிராமமட்ட அஞ்சலி நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.
- மரணித்தவர்களுக்கான நினைவுச்சின்னம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொல்லப்பட்டவை போன்ற முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உணர்வு பூர்வமான நினைவேந்தல் ஒன்றை மேற்கொள்ள அனைத்து தமிழ் மக்களையும் அழைத்து நிற்கிறோம்.

***ஒரு பேப்பர்*** *தொடர்பான கருத்துக்களுக்கு*
*facebook.com/orupaper* *Email: info@orupaper.com*
**Tel : 020 7043 4314** **Fax : 020 7043 4312**

one-stop-shop
for all of your
Telecoms needs
Saving you
Time & Money





Our Products and Services:
- Landlines & Broadband
- SIP Trunks (Free Inclusive Minutes)

Office Phone Systems
- ✔ Easy to control
- ✔ Lower call costs
- ✔ No need for a costly PBX
- ✔ No maintenance charges
- ✔ Lines from £6.75

FREE
FIBRE / ETHERNET
INSTALLATION *

MONEX TELECOM
Exclusively for Businesses

Telephone;
0207 402 2900
website;
www.monextelecom.co.uk
24 / 7 Technical Support

ஒரு பேப்பர்
ORU PAPER
THURSDAY, MAY 15, 2015, ISSUE 242

## நினைவுகூரலையும் தடுக்கும் அதிகாரங்கள்

முள்ளிவாயக்கால் இனவழிப்பின் கொடுரங்கள் உலகத்தமிழ் மக்களின் கூட்டு ஆன்மாவில் ஏற்படுத்திய காயம் காலத்தால் ஆற்ற முடியாதது. அர்ப்பணிப்புடன் போராடிய விடுதலை வீரர்கள், அவர்களுக்கு துணையாக நின்றவர்கள், குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட ஆயிரம் ஆயிரம் பொதுமக்கள் அழிக்கப்பட்டமை ஒரு சாதாரண சம்பவமல்ல. அத்துயரையும் பகிரங்கமாக நினைவு கொள்ள முடியாமல் தடுக்கும் அதிகாரங்களின் அரசியலை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது.

ஒரு புறத்தில், நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்த முற்படுவோர் சிறிலங்காவின் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மறுபுறத்தில் அரசியல், மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் மேற்கத்தைய இராஜதந்திரிகள் பாரியளவில் நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்யாதிருக்குமாறு அவர்களை வலியுறுத்துவதாகத் தெரிய வருகிறது. இவ்வாரம் முல்லைத்தீவிற்குச் சென்ற கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வடமாகாணசபைக்குத் தெரிவான உறுப்பினர் இரவிகரனைச் சந்தித்து அவரால் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல் முயற்சிகள் பற்றி பேசியிருக்கிறார்கள்.

இராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஈழத்திலிருந்த இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை செய்ய விடாது தடுக்கப்பட்டமை ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல. ஆனால் 'நல்லாட்சிக்கும், இனநல்லிணக்கத்துக்குமான' ஆட்சி என்று சொல்லப்படுகிற ஒரு அரசாங்கத்தின் காலத்திலும் அதே நடைமுறையே கடைப்பிடிக்கப்பட்டு வருவதும், இவ்வியடத்தில் மேற்கத்தைய தரப்புகள் உதவி வருவதும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுதலிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்விடயத்தில் மௌனம் காத்து வரும் நிலையில், அவ்வமைப்பில் தீர்மானம் எடுக்கும் நிலையில் இல்லாத இரண்டாம், மூன்றாம் நிலை பிரமுகர்கள் சிறியளவில் நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்து பரபரப்புக்காட்டி வருகிறார்கள். வெளித்தரப்பு அழுத்தங்களை தட்ட முடியாத நிலையில் வடமாகாண சபையும் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரிவில்லை.

தமிழ் மக்கள் தமது இழப்புகளையிட்டு நினைவு கூரலை மறுப்பதன் மூலம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதனை இதனைத் தடுப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்களது நெஞ்சக்கனலை எந்த அதிகாரத்தினாலும் அணைத்து விட முடியாது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*முதலிலை போனமுறை வந்த பேப்பருக்கு நடந்த ஒரு விசயத்தை சொல்ல வேண்டியிருக்கு. தெற்கு லண்டனிலை பேப்பர் விநியோகம் செய்த அடுத்த நாளே, சில இடங்களில் அந்த பேப்பர்கள் வாழையிலை சுற்றுவதற்கு பாவிக்கப்பட்டதாக படங்களுடன் எங்களுக்கு தகவல்கள் அனுப்பியிருக்கிறார்கள். இப்பிடியான கடைகளில் பேப்பர் வைப்பதனை நாங்கள் நிப்பாட்டிக் கொண்டுவந்தாலும், இந்தப் பிரச்சனையை தீர்க்கிறது அவ்வளவு இலேசான விசயமாகத் தெரியேல்லை.*

*வாழையிலையை சுத்திறவருக்கு அல்லது சுத்தச் சொல்லி கட்டளையிடுகிறவருக்கு பேப்பர் வாசிக்கத் தெரியுமோ அல்லது வாசித்தாலும் விளங்குமோ எண்டது எங்களுக்குத் தெரியேல்லை.*
*அதனாலை அதைத் தடுக்கிறதுக்கு நீங்கள் தான் உதவ வேண்டும். அதுக்காக அந்தக் கடைகளிலை சாமான் வாங்க வேண்டாம் எண்டு நாங்கள் கேக்கேல்லை. ஆனால் எங்கை எங்கை இப்பிடி நடக்குது எண்டதை உங்கடை மொபைல் போனிலை படமெடுத்து அனுப்பினால் பெரிய உதவியாய் இருக்கும். நாங்கள் அந்தப்படங்களை பிரசுரிச்சு அவர்களை அடையாளம் காட்டியேனும் இதைத்தடுக்க முயற்சிப்பம். வேணுமெண்டால் பழைய பேப்பர்கள் ஏதும் மிஞ்சியிருந்தால் அதுகளை அவையளுக்கு கொடுக்கலாம். இப்பிடி விழுந்தடிச்சுக்கொண்டு புதுப் பேப்பரை குடுக்கோணும் எண்டில்லை. நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன எண்டது போலை வாழையிலை சுத்திறவைக்கு என்ன பேப்பர்தான் வேணும் எண்டில்லை.*

*இந்த வாழையிலை விவகாரம் பகிடியானது மட்டுமில்லை. ஒரு சமூகத்தின் வங்குரோத்து நிலமையை காட்டுகிறது எண்டு நாங்கள் ஒரு மூத்தவருக்குச் சொல்ல அவர் சொன்னார் தம்பி உதென்ன பெரிய விசயம் ஊரிலை பாடப்புத்தகங்களையே கடலைக் கொட்டை விக்கிறவைக்கு வித்த ஆக்களும் இருக்கினம். அவை தரவளி வெளிநாட்டுக்கு வந்தால் இப்பிடித்தானிருக்கும் எண்டு அவர் புறணி பாடத் தொடங்கியிட்டார்.*

*முள்ளிவாய்க்கால் பேரவலங்களுக்கு பிறகு, தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் அழிக்கப்பட்ட பின்னரான நிலமை இப்பிடித்தானிருக்கிறது. முன்னர் வந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் பல இப்போது வாறதில்லை. ஒரு அரசியல் கூட்டம், இலக்கியக் கூட்டம் எண்டால் ஆட்களைக் காண முடியிறதில்லை. ஆனால் கொண்டாட்டங்களில் சனம் நிரம்பி வழியுது.*

***ஒரு பேப்பர்** ல் பிரசுரிக்கப்படும் கட்டுரைகள் முதல் பூராயம் பகுதியிலை வாற கருத்துகள் தவறாக இருந்தால் அல்லது அதற்கு மாற்றுக் கருத்து இருந்தால் உங்களது கருத்துகளை அனுப்பி வைத்தால் அதனை பிரசுரிக்கிறதுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைவிட்டுட்டு ஏதோ ஒரு ஊடகத்திலை போட்டிருக்கு, அவதூறு செய்திருக்கு என்று பூடகமாகப் பேசுவதனால் உங்களது கருத்து சேரவேண்டியவர்களுக்கு சென்றடையாது.*

*முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவில்கொள்ளும் இந்நாட்களில், களப்பலியான விடுதலை வேங்கைகளையும், கொல்லப்பட்ட மக்களையும் நெஞ்சில் நிறுத்தி எங்கள் செயற்பாடுகளைத் தொடருவோம்.*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Gajendrakumar rejects 'domestic investigations' upheld by USA



The fact that the United States and the US Secretary of State John Kerry would consider the post January 08th 2015 situation in Sri Lanka, with the new government favourable, is understandable. But, for him to suggest that there is a favourable condition for the Tamils, is stretching too far, said Tamil National Peoples Front (TNPF) Leader Gajendrakumar Ponnambalam, responding to a question from TamilNet on the subject on Tuesday.

Pointing out that the new regime is not only maintaining the status quo of the occupying military, which is primarily being accused in the crimes, but both the major parties in the South have claimed complete allegiance to the military and have in fact vouched that the military would be protected, the former parliamentarian said.

"As far as the TNPF is concerned, an internal investigation is out of the question," he said.

"Internal inquiry with international experts advising is also out of the question because it is the local administrative structure, which is going to be carrying out the investigation. This is the real problem," Mr Ponnambalam told TamilNet.

*Further excerpts from the interview follow:*

The new regime is also having the same policy as that of Mahinda Rajapaksa, he said citing the positions expressed by the three leaders Maithiripala Sirisena, Ranil Wickramasinghe and Chandrika Kumarautanga, before and after the elections.

The trio have gone on record, publicly stating that a political solution has to be within the unitary State, which is a complete rejection of federalism.

On the question of accountability, they are refusing to have an international investigation. They are in fact boasting the Sri Lankan military by coming openly and saying that the fact that Mr Maithiripala Sirisena was someone who was the acting defence minister in the last stages of the war and that it was he – along with Sarath Fonseka – who is a co-party member, as those who actually won the war. And, the former SL President Chandrika Kumaratunga was also coming out openly and claiming that it was she who had won 75% of the war.

There is not a word in the 100-day programme about the Tamil issues.

These are the sorts of positions that were put before the Sinhalese people. This was done in a deliberate fashion to make sure that the Sinhalese people understood that there was not going to be any difference between the way the Rajapaksa handled the Tamil national question and the way President Maithiripala Sirisena and the UNP coalition government would handle the Tamil national question.

Therefore, to expect that this government would create a favourable conducive condition for the Tamil national question to be addressed in a meaningful way, is stretching it a little too far.

The very fact that they will not do a thing before the [forthcoming] elections, I think is a very clear indicator that this government is going to try to re-establish its credentials vis-a-vis the Sinhala nationalist vote-bank that it is not only the former president Rajapaksa who is trying to claim more ownership of winning the war — that it is not only 'him', but it is also 'them' — [to project] that this government is the rightful Sinhala nationalist leadership.

Generally, the notion of internal inquiry could be considered where there has been a real change of regime, especially if the regime, which is primarily accused of the sort of crimes that are to be investigated, is no longer in power and if the new regime is distancing itself completely from the previous regime's actions — and, if the new regime has stood for accountability by calling very clearly for proper punishments against those who have been suspected of committing heinous crimes.

But, the reality you have in Sri Lanka is that although it is true that a new regime has come to power, if you look deeper, apart from Rajapaksa and his family members and a few others, it is the very same people who were in power with him in his own government holding very high positions, who have crossed over and now formed the government.

President Maithiripala Sirisena, during his campaign, actually boasted the fact that he was the deputy or acting defence minister particularly during the last stages of the war. He has also been boasting that the war was actually won not by Rajapaksas, but by Fonseka and him.

To expect that this government would carry out an internal investigation is as good as asking President Rajapaksa to investigate himself in the first place.

Secondly, An internal inquiry, even if you want international standards applied, is not possible in Sri Lanka for the simple reason because we are talking about the military, which is primarily being accused here. Both the major parties in the South have claimed complete allegiance to the military and have in fact vouched that the military would be protected.

The other issue is, even if there is to be an internal inquiry with international standards or observers or experts being involved, as long as it is the local mechanisms that are going to be used for evidence gathering — which is essentially the military, the police or the local administrative arms of governance that are to be used for evidence gathering — then it is the very same administrative structures that are being accused of the sort of crimes that have been committed. The safety of the victims and the witnesses is going to be called into question.

No amount of guarantee in the form of witness protection is going to work for the simple reason of the local administration being completely one-sided.

*Courtesy: tamilnet.com*

# Kerry visits Colombo to deepen US ties with Sri Lanka



By K. Ratnayake

US Secretary of State John Kerry's two-day visit to Sri Lanka last weekend was a further step to reset US ties with Colombo as part of military preparations against China.

Relations between the US and Sri Lanka were strained under former President Mahinda Rajapakse, who tilted toward China and tried to balance between Washington and Beijing. A regime-change operation backed by the US resulted in Maithripala Sirisena winning a presidential election in January.

Kerry met with President Sirisena, Prime Minister Ranil Wickremesinghe, Foreign Minister Mangala Samaraweera and Tamil National Alliance (TNA) leaders. He praised Sirisena, Wickremesinghe and Samaraweera for taking "difficult decisions" and announced "an annual partnership dialogue between our two governments" to "deepen our partnership with you."

Significantly, this was the first visit by one of the highest-ranking US officials to Sri Lanka since 2005, when Secretary of State Colin Powell travelled to the island after the devastating December 2004 Asian tsunami. Powell visited a number of affected countries, using the catastrophe to advance US strategic interests.

Kerry made hypocritical lectures during his visit about human rights, democracy and reconciliation. None of these was his real agenda. His trip was aimed at placing Sri Lanka firmly in line with the Obama administration's "pivot" to Asia, which is directed at encircling China and subordinating it to US hegemony. Kerry's visit also sent a wider message that US imperialism is aggressively pursuing its drive against China.

For almost half a decade, Washington backed the Rajapakse government's war against the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) to the hilt. But it was concerned when China emerged as the principal supplier of military hardware and funds to the cash-strapped government. The Obama administration then cynically raised human rights violations committed during the final months of the war, when tens of thousands of civilians were killed, to press Colombo to distance itself from Beijing. Last year, Washington backed a UN Human Rights Council (UNHRC) resolution, threatening an international war crimes probe.

When Rajapakse called an early presidential election for January 8, State Department officials utilised long-established connections with pro-US United National Party (UNP) leader Wickremesinghe and former President Chandrika Kumaratunga to bring forward Sirisena, one of Rajapakse's senior ministers, as a candidate to oust Rajapakse. Kerry personally telephoned Rajapakse on election day, advising him to "respect the election outcome."

Relations between the US and Sri Lanka were strained under former President Mahinda Rajapakse, who tilted toward China and tried to balance between Washington and Beijing. A regime-change operation backed by the US resulted in Maithripala Sirisena winning a presidential election in January.

Sirisena and his minority government, led by Wickremesinghe, swiftly shifted in favour of the Western powers, particularly Washington and its regional ally, India. It also declared a review of Chinese-funded projects, with the $US1.4 billion Colombo City Port City project still to be approved. The message to China is that relations will continue, but not at the same level as before.

Kerry spelled out Washington's strategic interests in a lecture at the Kadirgamar Centre in Colombo. He explained that the US had no problem with Rajapakse's war to crush the LTTE. Speaking in terms that also sought to justify Washington's ruthless wars around the globe, Kerry said: "It is sometimes necessary to go to war, despite the pain it brings. For all of my country's disagreements with the previous government in Sri Lanka over how it fought the LTTE, we clearly understood the necessity of ridding this country of a murderous terrorist group."

Without mentioning Rajapakse's relations with China, Kerry pointed to Sri Lanka as a geo-strategic asset located near vital trade routes, on which China depends heavily. He declared: "Your country sits at the crossroads of Africa, South Asia and East Asia... The Indian Ocean is the world's most important commercial highway."

Kerry noted that 40 percent of all seaborne oil passes through the Strait of Hormuz and half the world's merchant fleet capacity sails through the Straits of Malacca. He stated: [W]ith its strategic location near deep-water ports in India and Myanmar, Sri Lanka could serve as the fulcrum of a modern and dynamic Indo-Pacific region."

Kerry asserted that the US was already providing leadership on maritime security in the Indian Ocean in association with "close friends and allies across the region, including India, Australia, Indonesia and Japan."

The secretary of state said the US and Sri Lanka "are also working together to oppose the use of intimidation or force to assert a territorial or maritime claim by anyone." He asserted the need to defend "freedom of navigation and over-flight and other lawful uses of the sea and airspace." Freedom of navigation is a slogan with which the US is fomenting provocations against China, while encouraging Japanese imperialism's claims in the East China Sea and claims by the Philippines and Vietnam in the South China Sea.

The Pentagon is already boosting relations with the Sri Lankan military. On April 19, US Seventh Fleet commanders invited Samaraweera, State Minister of Defence Ruwan Wijewardena and a delegation to the USS Carl Vinson Carrier Strike Group, where they had discussions and viewed its military might.

Kerry was keen to ensure that the TNA, the main Tamil bourgeois alliance, backed the government. Washington wants to stop any agitation over the repression of the island's Tamil minority that could deepen the political instability in Sri Lanka, as well as southern India, affecting Washington's strategic interests.

In his meeting with TNA delegates, Kerry supported "devolving powers"—a formula for power-sharing between the Colombo and the Tamil elites in the island's north and east. However, he urged the TNA to cooperate with "the new government's initiative towards an amicable solution," TNA spokesman Suresh Premachandran said.

Kerry's visit also sent a wider message that US imperialism is aggressively pursuing its drive against China.

A considerable section of the Sri Lankan elite is enthusiastic about the new relations with the US. The Colombo media featured articles on the importance of Kerry's visit. A Sunday Times editorial stated: "The dialogue [between the US and Sri Lanka] completely broke down. It had to take an election in Sri Lanka to turn the tide—and Secretary Kerry's visit is, largely, to pay tribute to the voters of Sri Lanka who helped oust the Rajapakse regime, and put back on track US-SL relations."

Kerry said a US Treasury and Commerce department team would work with the government on economic measures to achieve "greater investment and greater growth." That means deeper attacks on working-class conditions in the name of economic reform, as well as exposing workers across the region to the danger of war against China.

Sri Lankan capitalists were dismayed about losing business with the US, the country's largest single destination of exports, worth about $2.5 billion in 2013. Sirisena's government hopes to attract more investment, using its close relations with the US, the international finance capital. Speaking alongside Kerry, Foreign Minister Samaraweera declared: "Sri Lanka has been considered a paradise for tourists for many years but our government is now also keen to make Sri Lanka an investor's paradise."

Kerry said a US Treasury and Commerce department team would work with the government on economic measures to achieve "greater investment and greater growth." That means deeper attacks on working-class conditions in the name of economic reform, as well as exposing workers across the region to the danger of war against China.

*Courtesy: World Socialist Web*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

விளம்பரம்
**அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூரன் - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**அஜந்தா**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**



**உங்கள் தொடர்புகளுக்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகளுக்கு:

**பணிமனை முகவரி**
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# மீண்டும் No10இல் டேவிட் கமரன்



2015 மே 7ஆம் திகதி நடந்து முடிந்த ஐக்கிய இராச்சியத்திற்கான பாராளுமன்றத் தேர்தலில் 46,425,386 வாக்காளர்கள் வாக்களித்து 650 பாரா ளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்துள்ளனர். விகிதாசாரத்தில் பார்க்கும் போது 66.1விழுக்காடு மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

650 தேர்தல் தொகுதியை கொண்ட ஐக்கிய இராச்சியத்திற்கான (England 533, Scotland-59, Wales-40, Northern Ireland-18) தேர்தலில் 1834ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பழமைவாத கட்சி (conservative) டேவிட் கமரன் தலைமையில் 647 தேர்தல் தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி 11, 334,926 (ஒரு கோடியே பதின் மூன்று லட்சத்தி முப்பத்தி நான்காயிரத்து தொள ளாயிரத்து இருபது) அதாவது 36.91விழுக்காடு வாக்குகளைப் பெற்று 331 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

தனித்து ஆட்சி அமைப்பதற்குரிய (650/2= 325+1=326) 326 ஆசனங்களை விட மேலதி கமாக 5 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத் தில் 50.9 விழுக்காடு பலத்துடன் தனித்து ஆட்சிய மைக்கும் பெரும்பலம்கொண்ட அதன் தலைவர் டேவிட் கமரன மீண்டும் No 10 Downing Street கதவுகளை திறந்து உள்ளே சென்றுள்ளார்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 306 தொகுதிகளில் வெற்றி பெற்ற conservative கட்சி Nick Clegg இன் தலைமையிலான லிபரல் டெமோக்ரட் (Liberal Democrat) கட்சியின் 57 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கூட்டாட்சி செய்தது. உலக அரசியல் சாதக பாதக நிலைகள் உள்நாட்டில் பல நெருக்கடிகள் என பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த மிடுக்கு மனிதர் டேவிட் கமரன 2015இல் அரசியல் அவதா னிகள், ஊடகங்கள் என பலரின் எதிர்வு கூறல்க ளையும் பொய்யாக்கி மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் வியப்பாக பார்க்கும் பல விடயங்கள் நடைபெற்றுள்ளன. பழமைவாதக் கட்சி (Conservative Party) இங்கிலாந்தில் 319, வேல்ஸ் இல் 11, ஸ்கொட்லாந்தில் 1 என வெற்றியீட்டியபோதிலும் 1,236,683 வாக்காளர் களைக் கொண்டதும் 18 தேர்தல் தொகுதிக ளையும் கொண்டதுமான Nothern Ireland இல் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை வெறும் 9,055 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது.

ஒரே ஒரு தொகுதியில் மட்டும் வெற்றி பெற் றுள்ள UKIP (United Kingdom Independence Party) கட்சியினர் மொத்த வாக்களித்தோரின் விகிதா சாரத்தில் 12.6விழுக்காடுவாக்குகளை (3,881,129) பெற்று மூன்றாவது அரசியல் அணியாக வளர்ந் துள்ளனர். இவர்களின் கொள்கை, நடைமுறை அரசியல் நோக்கு என்பன பலராலும் ஆச்சரிய மாக பார்க்கப்படுகின்றது. இவர்கள் குடியேற்ற வாசிகளுக்கு சாதகமான பார்வையுடையவர் களாக தெரியவில்லை.

4,094,784வாக்காளரகளையும் 59தேர்தல்தொகுதி யையும் கொண்ட ஸ்கொட்லாந்தில் 56 தொகுதி களில் Scottish National Party அதன் தலைவியும் எதிர்காலத்தில், இன்னுமொரு இரும்பு சீமாட்டியாகவும் வரவுள்ள Nicola Storgeon இன் தலைமையில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. 2014ஆம் ஆண்டு'Should Scotland be an independent country? Yes or No என நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பில் 2,001,926 வாக்குகளை அளித்து No என 55.3% விகித வாக்குகளை அளித்த மக்கள் தான் இன்று 56 பாராளுமன்ற உறுப்பினர் களை 1977 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலை மைக்கு வாக்களித்து தனித் தமிழீழ அரசினை அங்கீகரித்தது போன்று தமது விடுதலை வேட் கையினை வெளிக்காட்டியுள்ளனர். இந்த சமிக்ஞை பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு பெரும் சவாலா கவே இருக்கப் போகின்றது இவர்கள் பாராளு மன்றத்தில் 4.7 விகிதம் உள்ளனர்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் உள்ளது Nick Clegg இன் தலைமையிலான Liberal Democraft கட்சி வெறும் 8 பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவாகியுள்ளனர். 2005 ஆம் ஆண்டு தேர்தலில் 22 விழுக்காடு வாக்குகளைப் பெற்று 62 உறுப்பினர்களை கொண்டிருந்த கட்சி இன்று 7.8 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்று நான்காவது நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

Labour கட்சியின் வாக்கு வங்கி அதிகரித்துள்ள போதும் இக்கட்சி ஸ்கொட்லாந்தில் தூக்கி வீசப் பட்டது தான் பரிதாப நிலையாகும். 2005ஆம் ஆண்டு 349 ஆசனங்களைப் பெற்று பெரும்பான் மைப் பலத்துடன் இருந்த கட்சி இன்று பலம் இழந்துபோயுள்ளது. Harrow East இல் இக்கட்சி சார்பில் போட்டியிட்ட ஈழத்தமிழரான உமா குமாரன் 19911 வாக்குகளை பெற்ற போதும் 4757 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியை தழுவியுள்ளார். இவரின் தோல்வி பல ஈழத்தமி ழர்களுக்கு மிகவும் கவலை தருவதாகவுள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் 33.9 விழுக்காடு மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை இவ்விகிதாசாரம் கிட்டத்தட்ட தொழிற்கட்சி பெற்ற வாக்குவிகிதத்திற்கு சமமானதாகும். Harrow East இல் மட்டுமே 70 விழுக்காடுக்கு மேற்பட்ட மக்கள் வாக்களித்துள்ளனர்.

ஒரு Spider-man போல் David Cameron இன் வருகை அமைகின்றபோதும் பொருளாதாரம், வட்டி வீதம், கல்வி, வேலைவாய்ப்பு, பொது சுகாதாரம் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட வெளி விவகாரக் கொள்கை, வீட்டு வசதி உட்பட சமூக கொடுப்பனவுகள், சட்டம், ஒழுங்கு என முழு ஐக்கிய இராச்சியத்திற்கும் அவரும் அவருடைய அரசும் எந்த வகையான தீர்வுகளை முன்வைத்து அரசை கொண்டு செல்லப் போகின்றார் என்ப தையும் பிராந்திய கட்சிகளின் அபரித வளர்ச் சியை கண்டு அடுத்த நகர்வுகளை எப்படி முன் னெடுக்கப் போகின்றார் என்பதையும் பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.

*- துரை சிவபாலன்.*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## நாவினால் சுட்டு நட்டப்படாதீர்கள்!

எதைக் காக்கா விட்டாலும் பரவாயில்லை நாக் கையாவது காக்கச் சொன்னார் திருவள்ளுவர். ஏனென்றால் எத்தனையோ சோகங்களுக்கு நாக்கு தான் மூல காரணமாக இருக்கின்றது. எத்த னையோ குடும்பங்களில் நாக்கினால் தான் நிம்மதி காணாமல் போகின்றது.

நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி நான்கு வார்த்தைகள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் பல நேரங்களில் மேலோங்குவது இயற்கை. சரியான சந்தர்ப்பம் கிடைக்கிற போது அப்படி மற்றவர் களைக் கேட்காமல் இருக்க பலராலும் முடிவ தில்லை. அப்படிக் கேட்டு விடும் போது அந்த நேரத்தில் கிடைக்கின்ற திருப்தியே அலாதி என்றா லும் அப்படிக் கேட்டு விட்டு என்றென்றுமாய் சம் பந்தப்பட்ட மனிதர்களைப் பகைத்துக் கொள்கி றோம் என்பதைப் பலரும் மறந்து விடுகிறோம்.

யாருமே குற்றமற்றவர்கள் அல்ல. எல்லோரும் ஏதாவது சில சமயங்களில் பலவீனர்களாகவே இருந்து விடுகிறோம். பலரும் ஒருசில விஷயங் களில் எப்போதுமே பலவீனர்களாகவே இருக்கி றோம். சிலவற்றை காலப் போக்கில் திருத்திக் கொள்கிறோம். சிலவற்றை காலம் கூட நம்மிடம் மாற்ற முடிவதில்லை. அப்படி இருக்கையில் கடு மையான கூர்மையான வார்த்தைகளால் சிலரின் சில குறைகளையும், குற்றங்களையும் சாடுவது சரியல்ல. யாரை அப்படிச் சாடுகிறோமோ அவர் களும் நம்மை அப்படியே சாடுவதற்கு சரியான சந்தர்ப்பத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இன்றில்லா விட்டாலும் என்றாவது அந்த சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்தியும் தரக் கூடும். "அன்று என்னைப் பெரிதாகக் கேட்டாயே நீ மட்டும் ஒழுங்கா?" என்கிற ரீதியில் அவர்கள் கேட்க, நாம் ஆத்திரப்பட விளைவாக ஒரு நீண்ட பகை உருவாகி விடுகிறது. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பார்கள். ஒவ்வொரு குற்றத் திற்காக ஒவ்வொருவரை நம் நாக்கால் பதம் பார்க்க ஆரம்பித்தால் பின் சுற்றம் என்பதே நம்மைச் சுற்றி இருக்காது. நாம் தனியராகி விடுவோம். சுற்றம் மட்டு மல்ல நண்பர்களும் நமக்கு மிஞ்ச மாட்டார்கள்.

இன்றைய குடும்பங்களில் விவாகரத்துகள் அதி கரிக்க மிக முக்கியக் காரணம் கட்டுப்படுத் தாத நாக்கு தான். உப்புசப்பில்லாத விஷயங்களுக் கெல்லாம் கூர்மையான கடுமையான வார்த்தை களை உபயோகப்படுத்தி விடுவது தான். ஒரு காலத்தில் வேறு வழியில்லை என்று சேர்ந்திருந் தார்கள். பொறுமையாக இருந்தார்கள். இன்று அந்த நிலை இல்லை.

இன்றைய விவாகரத்து வழக்குகளில் இரு தரப்பினரும் சொல்கின்ற காரணங்களில் உண் மையான சித்திரவதை, பெரிய குறை பாடுகள் போன்ற காரணங்கள் குறைவு என்றும் பெரும்பாலான காரணங்கள் சிறுபிள்ளைத் தனமானவை ஆகத்தான் இருக்கின்றன என்கிறார் ஒரு மூத்த வக்கீல். பள்ளி செல்லும் பிள்ளைகள் போட்டுக் கொள்ளும் சண்டைகளுக்கான காரணங் கள் போலத் தான் அவை இருக்கின்றன என்கிறார். குடும்பம் இரண்டாய் பிரிகிற போது அந்தக் குழந் தைகள் நிலை பரிதாபகரமானது என்பது கூட கவனிக்கப்படுவதில்லை என்கிறார் அவர். பெரும்பாலான தம்பதிகள் கடைசியாகச் சொல் கிற காரணம் இது தானாம். "அந்த அளவு பேசிவிட்ட பிறகு அந்த மனிதருடன் /மனுஷியுடன் இனியும் கூட வாழ்வது சாத்தியமில்லை".

*தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.*

என்கிறார் வள்ளுவர். நாவினால் சுட்ட வடுக்கள் ஆறுவதில்லை. நினைக்க நினைக்க காயங்கள் மேலும் மேலும் ஆழப்படத்தான் செய்கின்றன. சம் பந்தப்பட்ட தவறுகள் கூட பல சந்தர்ப்பங்களில் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் சொல் லப்பட்ட வார்த்தைகள் மன்னிக்கப்படுவதில்லை, மறக்கப்படுவதுமில்லை.

ஒருவர் எத்தனையோ விஷயங்களில் நல்லவராக இருக்கக் கூடும். அவர் மற்றவர்களுக்கு எத்த னையோ உதவிகள் செய்திருக்கவும் கூடும் ஆனால் கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளால் மற்றவர் களை அவர் வேதனைப்படுத்துவாரேயானால் அத் தனை நன்மைகளும், உதவிகளும் மங்கிப் போகும். பேசிய அந்த கடுஞ்சொல் மட்டுமே பிரதானமாக நிற்கும்.

சிலர் பேசுவதை எல்லாம் பேசி விட்டுப் பின்னர் "ஏதோ ஒரு கோபத்தில் சொன்னதை எல்லாம் பெரிது படுத்துவதா?" என்று இறங்கி வரக்கூடும். ஆனால் கேட்டு வேதனைப்பட்டவர்கள் அதில் சமாதானமாக முடிவது கஷ்டம் தான். கோபம் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமா னாலும் பேசலாம் என்பதற்கான அங்கீகாரம் அல்ல.

எல்லோரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நமக்கு உதவக்கூடிய நிலையில் இருக்கக் கூடும். அல்லது நம்மை பிரச்சினைக்குள்ளாக்க முடிந்த நிலையில் கூட இருக்கக் கூடும். அந்த நேரத்தில் நாம் பேசிய கடுமையான வார்த்தைகள் மட்டுமே அவர்களுக்கு நினைவு வரக்கூடுமானால் நமக்கு அவர்களால் பெரும் நஷ்டமே நேரக்கூடும். எனவே வார்த்தைகளால் ஜெயித்து விட்டு வாழ்க்கையில் தோற்றுப் போகாதீர்கள். வார்த்தைகளைத் தீட்டுவ தற்குப் பதிலாகப் புத்தியைத் தீட்டுங்கள். குத்தல் பேச்சும், கிண்டல் பேச்சும் அந்த நேரத்தில் நன்றாகத் தெரியலாம். கூட இருப்பவர் களிடம் 'சபாஷ்' கூடப் பெறலாம். ஆனால் அந்தப் பேச்சால் முக்கியமான மனிதர்களை இழந்து விட்டால், இடையே உள்ள அன்பு முறிந்து விட்டால் உண் மையில் நமக்கு நஷ்டமே.

*- என்.கணேசன்*

# ஜோன் கெரியின் உரையும் பிரித்தானியத் தேர்தல் முடிவுகளும்



**கோபி**
*ஒரு பேப்பர்*

அண்மையில் கொழும்பிற்கு குறுகிய பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜங்கச் செயலர் ஜோன் கெரி, சிறிலங்காவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தின் ஏற்பாட்டில் தாஜ்சமுத்திரா நட்சத்திர விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு நீண்ட உரையொன்றை வழங்கியிருந்தார். 'மனித வுரிமை மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துதல் விடயத்தில் அமெரிக்காவிற்கும் - சிறிலங்காவிற்கும் இடையிலான உறவினை வலுப்படுத்துதல்' என்ற தலைப்பில் அமைந்த இவ்வுரையானது இலங்கைத் தீவு தொடர்பில் அமெரிக்காவின் நிலைப்பாட்டினை இலங்கை மக்களுக்கு, குறிப்பாக சிங்கள மக்களுக்கு விளக்கும் வகையிலான கொள்கை விளக்க உரையாக அமைந்திருந்தது. ஜோன் கெரியின் பயணம் சிறிலங்காவின் புதிய அரசாங்கத்திற்கான தமது ஆதரவினை வெளிப்படுத்துவதனையும், சிங்கள மக்களுக்கு மேற்குலகம் பற்றிய அச்சத்தை அகற்றி புதிய அரசாங்கம் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இன்னொரு புறத்தில், பத்தொன்பதாம் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் சில ஜனநாயகப்படுத்தல் முயற்சிகளை புதிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்பதனை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் இப்பயணம் திட்டமிடப்பட்டிருந்தது.

தலைப்பில் உள்ளது போலன்றி, ஜோன் கெரியின் மேற்படி உரை பிரித்தானியத் தேர்தலுடன் எதுவிதத்திலும் தொடர்புபட்டிருக்கவிலை. இருப்பினும், இலங்கைத் தீவில் உள்ள தேசிய இனங்கள் தொடர்பில் மேற்குலகத்தினர் வெளியிட்டு வரும் கருத்துகள் கெரியின் உரையிலும் வெளிப்பட்டதனால், அவை எவ்வாறு வளர்ச்சியுற்ற ஜனநாயக நாடுகளின் அரசியல் நிலவரத்திலிருந்து வேறுபடுகின்றன என்பதனை விளக்குவதாகவே இப்பத்தி அமைந்திருக்கிறது. எண்ணிக்கையில் குறைவான தேசிய இனங்களை அவர்கள் வாழும் நாட்டினத் தவராக பொதுமைப்படுத்த முனையும் மேற்கின் நடவடிக்கைகளை கெரி தனதுரையில் நியாயப்படுத்தியிருக்கிறார். வர்த்தக மற்றும் கேந்திர மூலோபாய நலன்களுக்காக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கிற அல்லது அது பற்றி பேச மறுக்கிற போக்கு காணப்படும் நிலையில், மேற்குலகத்தில் நிலமை வேறுவிதமாக அமைந்துள்ளது என்பதனை கடந்தவாரம் நடந்து முடிந்த பிரித்தானியப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்நிலையில் இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தமிழ்த் தேசிய இனம் கெரியின் கருத்துகளை மறுதலிப்பது அவசியமானது என்பதனையே இப்பத்தி வலியுறுத்த விழைகிறது.

215 ஆண்டு கால வரலாறு கொண்ட பிரித்தானியப் பாராளுமன்றம், அதன் 55வது பாராளுமன்றத்திற்கான தேர்தலில், வரலாற்றுத் திருப்புமுனையான ஒரு மாற்றத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. ஐக்கிய இராட்சியத்தினுள் ஒரு இராட்சியமாக இணைக்கப்பட்ட ஸ்கொற்லாந்து பிரித்தானியத் தீவின் ஏனைய பிரதேசங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டியிருக்கிறது. ஐம்பத்தொன்பது தேர்தல் தொகுதிகள் கொண்ட ஸ்கொற்லாந்தில் பிரித்தானியாவில் இருந்து பிரிந்து சென்று தனிநாடாகவேண்டும் என்ற கொள்கையுடன் செயற்பட்டு வரும் தேசியவாதக் கட்சியான ஸ்கொற்லாந்து தேசியக் கட்சி ஐம்பத்தியாறு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது. இது பிரித்தானியாவின் ஒற்றையாட்சி முறையான அரசியலமைப்பை (Unitary Constitution) ஆட்டம் காண வைத்திருக்கிறது. கடந்த வருடம் நடைபெற்ற, தனிநாட்டுக்கான பொது வாக்கெடுப்பு தோல்வியுற்ற நிலையில், ஆறுமாத காலத்தில் அக்கட்சி பெற்றிருக்கும் அபரிதமான வளர்ச்சி, ஸ்கொற்லாந்து மக்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்டுவதில் காட்டும் அக்கறையின் வெளிப்பாடகவே அமைந்துள்ளது. இகட்சியானது தனிநாட்டுக் கோரிக்கையை தமது கொள்கையாகத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது என்பது கவனத்திற்குரியது.



Photo courtesy Lava mel

தேர்தல் முடிவுகள் முற்றாக வெளிவர முன்னரே, ஸ்கொற்லாந்து தேசியக் கட்சி பெறவிருந்த வெற்றி பற்றிய அனுமானங்களை வைத்துக் கருத்து வெளியிட்ட லண்டன் மேயரும், அக்ஸ்பிறிட்ஜ் தொகுதியில் வெற்றி பெற்றவருமான பொறிஸ் ஜோன்சன், பிரித்தானியா ஒரு சமஸ்டி முறைக்குச் செல்ல வேண்டியுள்ளது என்ற கருத்தினை வெளியிட்டார். தேர்தல் முடிவுகள் வெளியான மே எட்டாம் திகதி காலையில் முடிவுகள் பற்றி Finacial Times இல் கட்டுரை ஒன்றை எழுதிய அதன் அரசியல் விமர்சகரான ஜனன் கணேஸ் 'இன்று காலையில் ஸ்கொற்லாந்து இன்னொரு நாடாகத் தெரிகிறது' எனக் குறிப்பிட்டிருந்தார். தாராண்மைவாத ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் பிரித்தானியாவில், இது வரை மறைமுகமாக இருந்து வந்த ஆங்கில, மற்றும் ஸ்கொற்றிஸ் தேசியவாதம் மீளவும் தலைதூக்கியுள்ளமையை 2015ம் ஆண்டின் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. கம்ரனின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அரச செலவீனக் குறைப்பு நடவடிக்கைகளினால் (austerity measures) ஸ்கொற்லாந்து மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் அதற்கெதிராகக் குரல் கொடுக்கவே தாம் பாராளுமன்றத் தேர்தலை பயன்படுத்தியதாகக் கூறும் ஸ்கொற்லாந்து பாராளுமன்றத்தின் முதன் மந்திரியும் ஸ்கொற்லாந்து தேசியக் கட்சியின் தலைவியுமான நிக்கொலா ஸ்ரோஜன் ஸ்கொற்லாந்து பிரிந்து செல்வதற்கான தமது விருப்பினை எவ்விடத்திலும் மறைக்கவில்லை.

1706 ம் ஆண்டு தாமாக விரும்பி இங்கிலாந்துடன் ஐக்கிய இராட்சியமாக ஸ்கொற்லாந்து இணைந்து கொண்டபோதிலும் (Union with Scotland Act 1706), கடந்துபோன மூன்னூற்றொன்பது வருடகாலத்தில் பிரித்தானிய தேசியத்தில் கரைந்து விடாமல் ஒரு தேசமாக தம்மை தக்க வைத்திருக்கிறார்கள் என்பதனாலேயே ஸ்கொற்லாந்தின் தனிநாட்டுக் கோரிக்கை மீளெழுச்சி பெற வைப்பதில் அவர்களுக்கு சிரமருக்கவில்லை. இதனை 1607ம் ஆண்டில் தமது (யாழ்ப்பாண) இராட்சியத்தை போர்த்துகேயரிடம் இழந்த தமிழ் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். தாமாக விரும்பி இணைந்து கொண்ட ஸ்கொற்லாந்து, பொருளாதார விடயங்களில் தாம் புறக்கணிக்கப்படுவதாகவும், தமது அன்றாட விடயங்களைக்கூட தீர்மானிக்கும் சக்தியாக வெஸ்ற்மின்ஸ்ரர் பாராளுமன்றமே இருப்பதாகவும், தம்மைத் தாமே ஆளும் வகையில் சுயாட்சியை வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இனப்படுகொலைக்கு உள்ளாகிற ஈழத் தமிழ் மக்களை 'சிறிலங்கன்' என்ற அடையாளத்துடன் சிறிலங்காவின் தேசியத்திற்குள் கரைந்து விடுமாறு (assimilate) மேற்குலகம் ஆலோசனை கூறுகிறது. ஜோன் கெரியின் கொழும்பு உரையும் சிறிலங்கன் அடையாளத்தை வலியுறுத்துவதாகவே அமைந்திருந்தது.

கெரி தனதுரையில் லக்ஸ்மன் கதிர்காமரைப் புகழ்ந்து பேசியதுடன், கதிர்காமர் மற்ற இனங்களின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்காமல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயன்றதாகவும், அவர் இன்றிருந்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்களையிட்டு மகிழ்ச்சியடைந்திருப்பார் எனவும் கூறியுள்ளார். "நாம் இலங்கையர்களாக இங்குள்ள எல்லா இனங்களையிட்டும், மதங்களையிட்டும் சகிப்புத் தன்மையுடையவர்களாக வாழவேண்டும்" என கதிர்காமர் கூறியிருந்தாகவும் கெரி தனது உரையில் நினைவு படுத்தினார். உண்மையில் இது கதிர்காமரின் சொந்தக் கருத்தல்ல, தாராண்மை வாதம் இதனையே வலியுறுத்துகிறது. தன்னளவில் தமது ஆட்சி இயந்திரங்களைப் பலப்படுத்திக் கொண்டு பல்லின கலாச்சாரம் பற்றி பேசும் நவதாராண்மைவாதத்தின் கருத்துகளையே கதிர்காமரின் கருத்தாக கெரி காட்ட முனைந்துள்ளார்.

மேற்படி கருத்துகளின் அடிப்படையில், கெரி எடின்பரோவிற்கோ அல்லது கிளாஸ்கௌவிற்கோ சென்று ஸ்கொற்லாந்து மக்களை பிரித்தானிய மக்களாக வாழுமாறு ஆலோசனை வழங்குவாரா? அவ்வாறு அவரால் முடியாதெனில் முதலாம் உலக நாடுகளுக்கு ஒரு நீதி மூன்றாம் உலக நாடுகளுக்கு இன்னொரு நீதி என்பதா மேற்குலகத்தின் நிலைப்பாடு?

விடுதலைப்புலிகளை கொலைகார பயங்கரவாத அமைப்பாகக் குறிப்பிட்ட கெரி, அவர்கள் அழிக்கப்பட்டதனை அவசியமான நடவடிக்கையாக நியாயப்படுத்தினார். ஆனால் யுத்தத்தின் இறுதி நாட்களில் நடைபெற்ற மீறல்களையிட்டே தமது நாடு விசனமடைந்தாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கப்பற் போக்குவரத்தில் சிறிலங்காவின் அமைவிடத்தின் கேந்திர முக்கியத்துவம் பற்றியும் கெரி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அத்தகைய முக்கியத்துவமே தமது நாடு சிறிலங்கா மீது அக்கறை கொள்வதற்கான காரணம் என்பதனை அவர் கூறவில்லை. அதுபோல் சிறிலங்காவின் உள்விவகாரங்களில் தமது நாடு தலையிடுவதில்லை என்று வழமையாக எல்லா இராஜதந்திரிகளும் கூறும் கலப்படமற்ற பொய்யையும் அவர் கூறத்தவறவில்லை.

சிறிலங்காவின் ஆட்சி மாற்ற முயற்சியில் வெற்றி பெற்றுள்ள அமெரிக்கா புதிய அரசாங்கத்தையிட்டு திருப்தியடைந்துள்ளமை அதனது செயற்பாடுகளில் தெரிகிறது. இது தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை வெகுவாகக் குறைத்திருக்கிறது. மேற்குலக சக்திகளின் நெருக்குவாரங்களுக்கு உட்பட்டு அடக்கி வாசிக்கும் நிலைக்கு தாயகத்தில் செயற்படும் தமிழ் கட்சிகளும், ஏறக்குறைய எல்லா புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் வந்துள்ளன.

இந்நிலையில மேற்கின் இழுப்பிற்கேற்ப இழுபட்டுச் செல்வதா அல்லது ஸ்கொற்லாந்து மக்களை முன்னுதாரணமாகக் கொண்டு தங்களை ஒரு தேசம் என நிலைநிறுத்தும் வகையில் செயற்படுவதா என்பதனை என்பதனை தீர்மானிக்க வேண்டியவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ................. 020 8540 8192

**Croydon**
Best Foods.............. 020 8684 6269
Haran Bros.............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land.............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket.... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans................... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................ 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas.................... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C.. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C.......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

Eatin' good in the neighbourhood

SINCE 1964
PIONEERS IN CHETTINAD CUISINE WITH

# ANJAPPAR
Chettinad A/C Restaurant

FOOD HYGIENE RATING 5 VERY GOOD

HALAL INDIA

Quality and Service is our Motto

*High Class Indian Veg & Non Veg Restaurant*

## @ EAST HAM, LONDON



**233-235 High Street North, East Ham, London, E6 1JG**
**Email : anjapparlondon@hotmail.com**

## Tel : 0208 552 1155

Opening Hours : 12.00 to 23.00





INDIA ◆ SINGAPORE ◆ MALAYSIA ◆ DUBAI ◆ ABUDHABI ◆ QATAR ◆ KUWAIT ◆ AUSTRALIA ◆ USA ◆ CANADA

## PLEASE COLLECT DISCOUNT VOUCHER IN A SHOP

# முள்ளிவாய்க்கால்: வீழ்ந்த இடத்தில் இருந்து தொடரும் விடுதலைப்பயணம்..



**ஈழத்து நிலவன்**

முள்ளிவாய்க்கால் படுகொலை - தமிழர் தாயகமெங்கும் ஈழத்தமிழர்களின் இரத்தச் சகதியால் வரையப்பட்ட ஈழத்துக் காவியம் அது. தமிழர் வரலாற்றிலே மறக்க முடியாத நாட்கள் நீண்ட பெரு வலியுடன் ஈழத்தமிழர்களின் இறுதி மூச்சுக்காற்று தாயக மண்ணிலே புதையுண்டு, எரியுண்டு, கதறக் கதற படுகொலை செய்யப்பட்ட இந்த முள்ளிவாய்க்கால் படுகொலை தினம் என்றும் எமது நெஞ்சில் அணையாது எரியும் பெரு நெருப்பு. எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும் இந்த நெருப்பை எவராலும் அணைத்து விடமுடியாது.

பொது மக்கள் செறிவாக வாழ்ந்த இடங்களை எறிகணைத் தாக்குதல்களாலும் ஷெல் வீச்சுக்களாலும் கோரத் தாண்டவமாடி கொலைக்களமாக்கியது சிங்களப்படை. துண்டாடப்பட்ட நிலங்களில் திண்டாடிய மக்கள் பாதுகாப்புத் தேடி அலைய, பாதுகாப்பு வலயமென புதுமாத்தளன் முதல் அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வெள்ளாமுள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளை பாதுகாப்பு வலயமாக சிங்கள அரசாங்கம் அறிவித்த இப்பகுதிகளில் மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் பயங்கர வாத்தினைத் தோற்கடித்தல் என்ற பரப்புரையின் கீழ் வரலாறு காணாத தமிழின படுகொலையை நிகழ்த்திவிட்டு தெற்கில் சிங்கள அரசும் அதன் படைகளும் கோலாகலமாக வெற்றி விழாவாகக் கொண்டாடுகிறது. தமிழர் தாயகப்பகுதிகளில் உயிரிழந்த எமது உறவுகளை நினைவு கூர அனுதியில்லை. இது கொடிய இன ஒடுக்கு முறையன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

பாலையும் நெய்தலும் கலந்த அந்த வறண்ட மண்ணில் மண்ணின் மைந்தர்கள் நிகழ்த்திய தனிச்சமர் தமிழர்களின் மன உறுதிக்குச் தக்க சான்று. அந்த மண்ணில் ஊனுமின்றி உறக்கமுமின்றி ஈழமக்கள் பூவும் பிஞ்சும் காயும் கனியுமாகவல்லவா இறுதிவரை போராடினார்கள். முள்ளிவாய்க்கால் என்கின்ற போது ஒவ்வொரு ஈழத்தமினது நரம்புகளும் முறுக்கேறும். இதயத்துடிப்பு அதிகரிக்கும் நெஞ்சம் கனக்கும் தமிழீழம் என்ற இலட்சியக்கனவு உயிர் பெற்று எம்மை வழிநடத்தும்.

உலக வரலாற்றில் மனிதகுலம் பல்லாயிரம் போர்க்களங்களைக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு போர்களங்களும் ஒவ்வொருவகையான செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கிறது. போர்வெறிபிடித்த மொங்கொலியன் செங்கிஸ்கான் மத்திய ஆசிய நாடுகள் மீது மேற்கொண்ட போர்வெறி பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்தது. மதவெறி பிடித்த முடவன் தைமூர் வட இந்தியாவைச் சிதைத்தபோது மடிந்த மக்கள் லட்சத்தைத் தாண்டினர். நவீன உலகின் இனவெறியன் நாசிச ஹிட்லர் யூதர்கள் மீது திணித்த போர் பல இலட்சம் யூதர்களைச் சாம்பலாக்கியது. ஆனால் இவற்றையெல்லாவற்றையும் தாண்டி புதிய உலக ஒழுங்கிங்கிலும் ஆர்மேனிய, கொசோவா, அல்பேனியா, சூடான், எரித்திரியா, கிழக்குத் தீமோர் என போர் வெறியர்கள் நிகழ்த்திய மனிதப் படுகொலைகள் மானிட வரலாற்றின் அழியாச் சுவடுகளை பதித்திருந்தாலும் இந்த 21ஆம் நூற்றாண்டில் மிகப்பெரும் மனித குலத்திற்கெதிரான இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நிகழ்ந்த்து.

உலகத்தமிழினமே முள்ளிவாய்க்காலில் போரின் பிடியில் சிக்குண்ட எமதுறவுகள் இட்ட அவலக்குரல் உன் காதுகளில் கேட்கிறதா? மானிடம் பேசும் மான்புமிகு மானிடவாதிகளுக்கும் எம்முறவுகளின் அவலக்குரல் கேட்கவில்லையே!! உலகத் தலைநகரங்களின் வீதிகளில் புலம்பெயர் தமிழர்கள் இறங்கி நீதி கேட்டபோது ராஜதந்திரிகள் சிட்டாகப் பறந்தார்கள். பறந்தவர்கள் பஞ்சாகத் திரிம்பி வந்தனர். கட்டுக்கட்டாய் அறிக்கைகள் வேறு விட்டனர்.

அப்போதும் முள்ளிவாய்க்காலில் மக்கள் மடிந்து கொண்டுதான் இருந்தார்கள். உணவின்றி பட்டினியால் மடிந்தார்கள் குண்டுபட்டு மடிந்தார்கள் படுகாயமடைந்து மருத்துவ சிகிச்சையின்றி மடிந்தார்கள். இரசாயணக் குண்டிற்கு இரையாகி மடிந்தார்கள். இவையெல்லாம் உலகின் கண்களுக்குத் தெரியவில்லையே. இப்பெருங்கொடுமையை இந்த உலகம் ஏன் கேட்கவில்லை பார்க்கவில்லை. அல்லது பார்த்தும் பாராமுகமாக நடந்து கொண்டது. எம்மினத்திற்கு ஏன் இந்தக் கொடுமை நிகழ்ந்த்து. எம்மினம் என்னதான் தவறிழைத்த்து ? கேட்கக் கூடாத எதையாவது எம்மினம் கேட்டுவிட்டதா? மனிதப்பிறவியின் பிறப்புரிமையான சுதந்திரத்தைத் தானே கேட்டது. சுதந்திரத்தை கேட்டதற்கா இப்பெருந் தண்டணை.

நாற்புறமும் பல்லாயிரம் எதிரிகள் சூழ்ந்து கொண்டு சர்வதேச நாடுகளின் ஆயுத தொழில் நுட்ப உதவியோடு நிகழ்த்திய கொடும் போரை எதிர்கொண்டு பல்லாயிரம் எதிரிகளை வீழ்த்திய சிலநூறு புலிவீரர்களின் வீரஉடல்கள் அந்த மண்ணிலே வீழ்ந்ததைத்தான் எப்படி மறப்போம். தம் இறுதி மூச்சுவரை தமிழீழ இலட்சியத்திற்காக அவர்கள் சிந்திய குருதிதான் வீண் போகுமா அந்த இறுக்கமான போரினுள்ளே சிங்களத்தின் சேனைகளைச் சிதைக்க எம் வீரர்கள் மனிதக் குண்டுகளாக எதிரிகளினுள்ளே வெடித்துச் சிதறிய அளப்பரிய தியாகங்களைத்தான் எண்ணிப்பார்க்க முடியுமா?

முள்ளிவாய்க்கால் ஜநா வரலாற்றில் படுமோசமான இருள் சூழ்ந்த அத்தியாயமாக அமைகிறது. முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடைபெற்ற போது சர்வதேச சமூகத்திற்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் லோறன்ஸ் திலகர் பாதுகாக்கும் பொறுப்பு (Responsibility to Protect – R2P) என்ற கோட்பாட்டின் கீழ் இனப்படுகொலையை தடுத்து நிறுத்தும் படி சர்வதேச சமூகத்தை கேட்டார். ஆனால் போருக்கு எல்லா வகையிலும் உதவிய சர்வதேச சமூகத்தால் அவருடைய கோரிக்கைக்கு செவி சாய்க்க முடியவில்லை.

ஒன்றா இரண்டா மூன்று நாளில் 46.000க்கு மேல் ஈழத்தமிழர்களையல்லவா முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தது சிங்களப் பேரினவாதம். தாயின் மடியிலிருந்த குழந்தை குண்டுபட்டு இறந்தது தெரியாமல் இருந்தாள் ஒரு தாய். மறுபுறத்தே தாயிறந்தது தெரியாத மகவு பாலூட்டியதே தாய் மடியில். குழந்தையின் இரண்டு கைகளும் இழந்ததையிட்டுத் துடித்தாள் ஒரு தாய். கருவுற்ற தாயின் வயிற்றில் குண்டு பட்டு வயிற்றின் படுகாயத்தினூடே சிசு வெளித் தொங்கியதை இவ்வையகம் எங்கும் பார்த்ததுண்டா?

உலக இராணுவ வரலாற்றில் எந்தவொரு இராணுவமும் செய்யாத மிகக் கீழ்த்தரமான மிருகத்தனமான ஈனச்செயல்களை அங்கே எம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்ததல்லவா. அங்கே களத்திலே வீழ்ந்த பெண்களின் துயிலுரிந்த சிங்கள படைவீரர்களையும் பிணத்துடன் புணர்ந்த காமுகர்களையும் இறந்த பெண்களின் மார்பினை அறுத்த சிங்களத்தில் கொடுமையை யாரும் அறிந்துண்டா மனித மொழிகளில் சொல்லக் கூடிய இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் உள்ளதோ அத்தனை கொடுமைகளும் அந்த முள்ளிவாக்கால் மண்ணிலே நடந்தேறியது.

- சிறிய மீனை பெரிய மீன் விழுங்கும் : சாணக்கியர்
- தகுதியுள்ளவை உயிர்வாழும் : டார்வின்
- தற்காப்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு என்பதுடன் நீடித்த வாழ்க்கைக்கு அது அவசியமுமாகும் : சிக்மன்ட் ப்ராய்ட்

இதை புரியாததன் விளைவுதான் தாயகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இனஅழிப்புக்குள் சிக்கி நாம் இரையாகவேண்டியுள்ளது. எனவே அபிவிருத்தி, நல்லிணக்கம், ஐக்கிய இலங்கை என்ற நுண்மையான இன அழிப்பு மாய வலைகளை அறுத்தெறிந்துவிட்டு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம். தமிழீழம் ஒன்றே இன அழிப்பில் இருந்து எம்மை முழுமையாக பாதுகாக்கும் என்பதை புரிந்து கொள்வோம்.

**முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல. அது தமிழீழத்தின் கருத்தரிப்பு. சிங்களம் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதியதாக எக்காளமிடலாம் அது எம்மின எழுச்சியின் ஆரம்பம்.**

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழீழத்தின் இராணுவபலம் உடைக்கப்பட்டு தமிழீழ அரசு தற்காலிகமாக வீழ்த்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல. அது தமிழீழத்தின் கருத்தரிப்பு. சிங்களம் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதியதாக எக்காளமிடலாம் அது எம்மின எழுச்சியின் ஆரம்பம். சர்வதேசம் எங்கும் தமிழர்களால் பாரிய எழுச்சியாக நினைவு கூரப்படும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாள் தாயக மக்களின் விடுதலைக்கான பாதையை திறந்து விடும்

ஈழத் தமிழர்களுக்கு முள்ளிவாய்க்கால் தொடர்பான சில முக்கிய கடமைகள் இருக்கின்றன.

1. முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பான முழு விபரங்களும் திரட்டப்பட்டு ஆவணப் படுத்தப் படவேண்டும். நீதி விசாரணைக்கான பிரசார முயற்சிகளை எடுக்க வேண்டும்.
2. முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டோர், காணமற் போனோரின் பெயர், முகவரி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். ஒரு ஈழத் தமிழனாவது பெயர் முகவரி இல்லாமல் சாகக் கூடாது.
3. முள்ளிவாய்க்காலில் வீழ்ந்தோரின் சடலங்களுக்கு என்ன நடந்தது என்று கண்டறியப்பட வேண்டும்.

தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையை முள்ளிவாய்க்கால் நிறுத்தப் போவதில்லை. சுய நிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழீழத் தனி நாட்டின் தோற்றம் சாத்தியமே. இதற்கான உழைப்பை உலகத் தமிழினம் சிரமம் பாராது மேற்கொள்ள வேண்டும்.

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
IATA
இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்
price match guarantee
Hundreds of airlines and thousands of destinations worldwide
Book online@
www.carltonleisure.com
SPECIAL FARES to Colombo
Emirates £469 INCLUDING TAXES
QATAR £472 INCLUDING TAXES
SriLankan £469 INCLUDING TAXES
JULY & AUGUST SPECIAL
From £675 INCLUDING TAXES
Valid 01 – 15 Jul
11 Aug – 10 Dec
ETIHAD £515 INCLUDING TAXES
JET AIRWAYS £425 INCLUDING TAXES
OMAN AIR £413 INCLUDING TAXES
Low season fare includes taxes, subject to availability and terms & conditions apply.
RAYNERS LANE 020 8426 1266
ILFORD 020 8554 4200
EAST HAM 020 8552 6125
TOOTING 020 8672 5757

# அவர்கள் உயிரோடுள்ளனரா?

**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

இது ஆரம்பிக்கப்பட்டுள்ள பரப்புரைப் போராட்டத்தின் தலைப்பு. அது மக்களிடம் சரியாக போய் சேரவேண்டும் என்று, அப் போராட்டத்திற்கான விளக்கமும் பின்வருமாறு கொடுக்கப்பட்டிருக்கிறது. 2009ம் ஆண்டு போரின் இறுதியில் 18000க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டார்கள் அல்லது சிறிலங்கா அரசிடம் தம்மை விசாரணைக்கு இணங்கி ஒப்படைத்தார்கள். அவர்களின் கதி என்னவென்று இதுவரை யாரும் அறியவில்லை. சிறிலங்கா அரசின் தகவல்களின் அடிப்படையில் 146.679 பேரின் கதி என்ன வென்று இன்னமும் தகவல் இல்லை என மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் அவர்கள் ஆதாரத்தோடு சிறிலங்கா அரசினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு தெரிவித்தார்.

இலங்கையில் இனப்படுகொலையின் கோரப் பிடியிலிருந்து உயிர் பிழைத்தோர் தமது அன்புக்குரிய உறவுகளைத் தேடித் தவிக்கிறார்கள். தாய்மார்கள் பிள்ளைகளுக்காக தவிக்கிறார்கள். கணவன்மார்களும், மனைவிமாரர்களும் தமது வாழ்க்கைத் துணைகள் என்ன ஆனார்கள் என்று இன்னமும் தேடி அலைகிறார்கள். பெற்றோரோடு இணைய குழந்தைகள் காத்துக் கிடக்கின்றார்கள். தமிழ் தேசம் ஒட்டு மொத்தமாக உறவுகளைத் தேடி அலைகிறது, அழுகின்றது.

ஐ.நா அதிகாரியின் ஆலோசனையின் பேரில் இலங்கை அரசிடம் விடுதலைப்புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் திரு.நடேசன், திரு. புலித்தேவன் ஆகியோர் அடங்கலாகப் பலர் சரணடைந்தார்கள் என்ற தகவல்கள் வெளிவந்துள்ளது. பின்னர் அவர்கள் கொடூரமாக கொல்லப்பட்டதை காண்பிக்கும் நிழல் படங்கள் ஊடகங்களில் வெளியாகி இருந்தது. இது ‘வெள்ளை கொடிச்சம்பவம்’ என பெயரிடப்பட்டு அறியப்படுகின்றது.

இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. வணக்கத்திற்குரிய பிதா. பிராண்ஸிஸ் ஜோசப் அவர்களின் தலைமையில் பலர் சரணடைந்தார்கள். அவர்கள் இராணுவத்தினரால் ஒரு பேரூந்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் தற்போது காணாமல் போனோர் பட்டியலில் இருக்கிறார்கள். இவர்களில் பலர் இன்னமும் இரகசிய முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என அஞ்சப்படுகின்றது.

கிடைக்கப்பெறும் சாட்சிகளை ஆராய்ந்து பார்த்தால் விடுதலைப்புலிகளின் நிர்வாக மற்றும் அரசியல் துறை தலைவர்களின் சரணடைதலை சிறிலங்கா அரசின் உயர் மட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் அவர்களை சரணடைய வைத்து கொலை செய்யவே திட்டமிட்டிருந்தது என்பது புலனாகின்றது. இந்த சரணடைவின் பின்னர் சிறிலங்கா அரசானது, அரசியல் தலைவர்களின் கொலை குறிந்து முன்னுக்கு பின் முரணான தகவல்கனை வெளியிட்டு வருகின்றது. ஆனால் அவர்களோடு சரணடைந்தவர்களைப் பற்றிய தகவலை இன்னமும் இலங்கை அரசு மூடி மறைக்கின்றது.

ஆறு ஆண்டு காலம் கடந்த நிலையில், காணாமல் போனவர்கள், மற்றும் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது, ஏன் நடந்தது என்ற உண்மையை அறிய இன்னமும் காத்து நிற்கின்றார்கள். குறிப்பாக வெள்ளைக் கொடிச் சம்பவம் இலங்கை அரசின் அதி உயர் தலைமைகளின் ஆணைப்படியே நடந்துள்ளது.

இலங்கையின் முன்னாள் அதிபரின் சகோதரரான பசில் ராஜபக்சாவின் முழு ஆதரவோடு சரணடைதல் விடயத்தை கையாண்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது. போரின் போது இலங்கை அரசின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் மக்கள் செல்ல வேண்டுமென சர்வதேச தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். ஐ.நாவும் சர்வதேச சமூகமும் தம்மை காக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்றார்கள். ஆனால் அது அவர்களை ஒரு மரணப்பிடிக்குள் செல்வது போல் ஆக்கிவிட்டது.

இவ்வாறான பின்னனியில் இலங்கையில் புதிய அரசு பொறுப்பேற்று. 100 நாட்களுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும் தமது அன்புக்குரியவர்களை தேடி இன்னமும் எமது மக்கள் அலைகின்றார்கள். அவர்களது கோரிக்கைக்கும் தவிப்புக்கும் இலங்கை அரசு ஏதுவும் கூறவில்லை. புதிய அரசு கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த அனைவரும் உயிரோடு உள்ளார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? ஏன் அப்படி நடந்ததென்ற உண்மையை உலகறிய கூற வேண்டும்.

2008-2009 காலப்பகுதியில் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள், மற்றும் இதுவரை காலமும் விடுதலை செய்யப்பட்டவர்களினது பெயர்கள் வெளியிட வேண்டும், அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்கள் எப்போது, எங்கே விடுவிக்கப்பட்டார்கள், யாரிடம் ஒப்படைக்கப்பட்டாார் என்ற விபரத்தை வெளியிட வேண்டும். இன்னமும் இலங்கை அரசில் வெளிப்படையான அல்லது மறைமுகமான முகாம்களில் உள்ளவர்களது பெயர்களை வெளியிட வேண்டும். அத்தோடு தடுத்து வைக்கப்பட்டவர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

உலக தலைவர்களினது சர்வதேச சமூகத்தினதும் கோரிக்கையினால் சரணடைந்து காணாமல் போனோர் மற்றும் வதைபட்டு வெளிநாட்டுக்கு வந்தோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்தை நாம் தொடர்ச்சி யாக வியுறுத்த வேண்டும். எம் மக்களை மீட்டெடுப்பதும் அவர்களைக் காப்பதுவும் அனைத்து தமிழ் மக்களினதும் மற்றும் மானிடத்தை நேசிக்கும் உலக மக்களினதும் கடமையாகும். ஒன்றல்ல இரண்டல்ல பல்லாயிரக்கனகான உயிர்களுக்கு என்ன நடந்து என்பதைக் கண்டறிவது எங்கள் கைகளில்தான் உள்ளது.



## உதிர்ந்த கடற்கரை...

காலமும் கடல்மணலும் பொறியும்
கடற்சாலை நெடுக
காகம் தின்னக்கிடந்தவொரு
பிணமாகியது வாழ்க்கை

நரகத்தின்
ஊற்றுக்கண் திறந்து
இலையான்களும் சன்னங்களும்
சூழ்ந்தன பகலை

காலாவதியானது
பதுங்குகுழி.
கண்ணீர்ப் படலமாகியது
சிற்றரசு.

பெருங்கடலில்
மலத்தைக்கரைத்தோம்
சிறுகடலில்
அஸ்த்தியைக் கரைத்தோம்
கைகளை உயரத்தூக்கினோம்

நிமிர்ந்து விறைத்துநின்ற
ஆண்குறிகளையும்
பீரங்கிகளையும்
நோக்கி நடந்தோம்
நிர்வாணமாக.

– நிலாந்தன் [ஆனி 2012]

WANTED
Mitcham and surrounding areas
Office Administrator

* Good written & communication skill in English
* Computer knowledge
* Basic accounting knowledge
Drivers
* Full UK Driving Licence
* Work 5/7 Days in a week

மிட்சம் மற்றும் அருகாமையில் இருப்பவர்கள் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
Easyshipping
Unit 15, Liongate Enterprise Park
80 Morden Road, Mitcham, Surrey, CR4 4NY
Call us : 020 8648 9092

New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs please call or visit our show room for a free quote and see how we can help

Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets
Shelving4Shops.co.uk
01455 221512
New and refurbished refrigeration
Cold freeze specialise in the installation of new and refurbished refrigeration

Bottle fridges
Dairy cabinets
Multideck chillers
coldfreeze.co.uk refrigeration
with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG

# இறந்தவர்களை நினைவுகூர்தல்



**நிலாந்தன்**

சில ஆண்டுகளுக்கு முன் ஜே.வி.பி.யின் முன்னாள் மூத்த உறுப்பினர் ஒருவரோடு உரையாடும்போது அவர் சொன்னார், 'ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி நசுக்கப்பட்டபின் அதில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்வது என்பது உடனடுத்து வந்த ஆண்டுகளில் மிகவும் ஆபத்தாக இருந்தது. ஆனால் சந்திரிக்காவின் வருகைக்குப் பின் நிலமை மாறத் தொடங்கியது. 90 களின் முன்கூறில் ஓரளவுக்கு இரகசியமாக இறந்தவர்களை நினைவுகூரக் கூடியதாக இருந்தது. அப்பொழுது அது மிகவும் புனிதமானதாகவும் ஒரு வழிபாடாகவும் இருந்தது. அந்த வழிபாட்டிற்கு ஓர் ஆத்மா இருந்தது. பின் வந்த ஆண்டுகளில் நிலமைகள் மேலும் இறுக்கம் குறைந்தன. இதனால் இறந்தவர்களை நினைவு கூர்வது ஆபத்தற்ற ஓர் அரசியல் நிகழ்வாக மாறியது. அந்நாட்களில் பெருந்திரளானோர் அந்நிகழ்வுகளில் உணர்வெழுச்சியோடு கலந்துகொண்டார்கள். அதன் பின் பகிரங்கமாகவே அந்நிகழ்வு நடாத்தப்பட்டது. பெருந்திரளானோர் அதில் கலந்துகொண்டார்கள். ஆனால் அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில் படிப்படியாக பங்கு பற்றுவோரின் தொகை குறையத் தொடங்கியது. இப்பொழுது அது ஓர் சடங்கைப் போலாகிவிட்டது. அது அதன் ஆன்மாவை இழுந்துவிட்டது. அது ஏறக்குறைய நாட்காட்டிக்குள் வரும் ஒரு திகதி போல் ஆகிவிட்டது...' என்று.

ஜே.வி.பியின் தியாகிகள் நாள் அதன் ஆன்மாவை இழந்ததற்கு முக்கிய காரணம் அதற்கிருந்த தடைகள் அகற்றப்பட்டதல்ல. மாறாக மிதவாத அரசியலில் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் அவற்றின் அரசியல் ஆன்மாவை எப்பொழுதோ இழந்துவிட்டது. ஓர் அமைப்பின் அரசியலானது புனிதமிழக்கும்போது அதன் தியாகிகள் வழிபாடும் ஆன்மாவை இழக்கிறது. இது சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய ஓர் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்ட பின்னரான நிலை. ஆனால் தமிழ் மக்களின் நிலை?

இறந்தவர்களை நினைவு கூரும் விவகாரத்திலும் இச் சிறிய தீவு இனரீதியாக இரண்டாகப் பிளவுண்டே இருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய ஓர் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே அதன் தியாகிகளை நினைவுகூரக்கூடிய சூழல் உருவாகியது. குறிப்பாக ஆட்சிமாற்றத்தோடு அப்படியொரு நிலமை தோன்றியது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளாக அவர்களால் இறந்தவர்களை நினைவு கூர முடியவில்லை. இப்பொழுது ஆட்சி மாறிவிட்டது. இனி மேலாவது தமிழர்கள் இறந்தவர்களை நினைவு கூரக் கூடியதாக இருக்குமா?

கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் மக்களால் இறந்தவர்களை நினைவுகூர முடியவில்லை என்பது மட்டுமல்ல, இறந்தவர்களையும் காணாமற்போனவர்களையும் எண்ணிக் கணக்கெடுக்கவும் முடியவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இறந்தவர்களை நினைவுகூர்தல், இறந்தவர்களையும் காணாமல் போனவர்களையும் கணக்கெடுத்தல் ஆகியவை எல்லாமும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையின் பாற்பட்டவை. அவ்வாறு நினைவு கூர்வதற்கும் கண்கெடுப்பதற்கும் உரிய அரசியற் சூழல் நிலவவேண்டும். அப்படிப்பட்ட அரசியல் சூழலை உருவாக்குவது முழுக்க முழுக்க ஓர் அரசியற் தீர்மானம் தான். அப்படியொரு தீர்மானத்தை எடுப்பதற்கான அரசியற் திடசித்தம் மைத்திரி அரசாங்கத்திடம் உண்டா?

சில மாதங்களுக்கு முன்பு ஒரு மேற்கத்தேய தூதுவரோடு உரையாடும் போது அவர் சொன்னார், 'போரில் இறந்தவர்கள், காணாமற் போனவர்கள் தொடர்பில் எந்தவொரு நாடும் மிகச் சரியான கணக்கு விபரத்தை வைத்திருப்பதில்லை' என்று. இங்கு பிரச்சினை, எது சரியான கணக்கு விபரம் என்பதல்ல. தமிழ் மக்களால் இன்னமும் சுதந்திரமாக கணக்கெடுக்க முடியவில்லை என்பதுதான். நம்பகத்தன்மை மிக்க, சுயாதீனமான, அனைத்துலக நியமங்களுக்கு ஏற்புடைய எந்தவொரு அமைப்பும் அப்படியொரு கணக்கெடுப்பை இன்னமும் செய்யத் தொடங்கவில்லை என்பதுதான்.

ஆட்சி மாற்றத்தின் பின் வடக்குக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் ஒரு வடமாகாணசபை உறுப்பினர், காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து கதைத்திருக்கிறார். அப்பொழுது அமெரிக்கப் பிரதானிகள் இது தொடர்பான புள்ளிவிபரங்களைத் கேட்டிருக்கிறார்கள். ஆனால், மாகாணசபையிடம் அப்படியொரு புள்ளிவிபரமும் இருக்கவில்லையாம். அமெரிக்கப் பிரதிநிதிகள் கேட்ட போது புள்ளிவிபரங்ளைக் கொடுக்கமுடியவில்லை என்பது இணையத் தளங்களில் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது.

ஆனால் இங்கு விவகாரம் எதுவெனில் எந்தவொரு தமிழ்த்தரப்பினாலும் திருத்தமான புள்ளிவிபரங்களைக் கணக்கெடுக்கத் தேவையான ஓர் அரசியல் சூழல் உருவாகவில்லை என்பதுதான். அதைத்தான் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும் அவ்வாறு கணக்கெடுப்பது என்பதையே ஒரு சிவில் போராட்டமாக, ஒரு சிவில் செயற்பாட்டியக்கமாக முன்னெடுக்க முடியும். ஆட்சிமாற்றத்தின் பின் கிடைத்திருக்கும் ஒப்பீட்டளவில் அதிகளவிலான சிவில் வெளிக்குள் மேற்சொன்ன போராட்டத்தை ஒரு பரிசோதனையாக தமிழ்க்கட்சிகளோ அல்லது செயற்பாட்டியக்கங்களோ முன்னெடுத்திருக்கலாம். இது விடயத்தில் அனைத்துலக மனித உரிமை நிறுவனங்களிடமும் மனிதநேய நிறுவனங்களிடமும் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கலாம். தமிழ் கட்சிகள் கிராமங்கள் தோறும் தமது வலையமைப்பை விஸ்தரிப்பதற்கும் தமது ஆதரவாளர்களோடு உயிர்த்தொடர்பை பேணுவதற்கும் இது உதவக் கூடும். ஆனால் எந்தவொரு தமிழ்க்கட்சியிடமும் அப்படியொரு அரசியல் தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை.

இத்தகையதோர் பின்னணியில் ஆட்சி மாற்றத்தின் பின்னரான முதலாவது நினைவுநாள் அடுத்த கிழமை வருகிறது. தமிழ்க்கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் செயற்பாட்டியக்கங்களும் என்ன செய்யப்போகின்றன? வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் கடந்த 5 ஆண்டுகளாகக் கடந்து சென்றது போல இம்முறையும் மே 18ஐ கடந்து செல்லப்போகின்றனவா? சில மக்கள் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் நினைவு கூர்வது வேறு. அதைக் கட்சிகள் தமது கொள்கைத் தீர்மானமாக நிறைவேற்றி கட்சிச் செயற்பாடாக முன்னெடுப்பது என்பது வேறு. அவ்வாறு முன்னெடுப்பதில் சட்டச் சிக்கல்களும் பாதுகாப்புப் பிரச்சினைகளும் இருப்பதாக ஒருவிளக்கம் கூறப்படுகிறது. ஏனெனில் 2009 மே மாதமளவில் கொல்லப்பட்டவர்களில் பொதுமக்களும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதானிகளும் அடங்குவர். அந்த இயக்கத்தின் உயர் மட்டத்தினர் கூட்டாக இல்லாமற் செய்யப்பட்ட ஒரு காலகட்டம் அது. எனவே இறந்தவர்களை நினைவுகூர்தல் என்பது புலிகள் இயக்கத் தலைவர்களையும் நினைவு கூர்வதாக அமைந்துவிடலாம் என்பதே கடந்த 5 ஆண்டுகளாக அதைத் தடுப்பவர்கள் கூறும் காரணமாக இருந்து வந்துள்ளது.

புலிகள் இயக்கத்திலிருந்து இறந்தவர்களை நினைவு கூருமிடத்து அது அந்த இயக்கத்தை மகிமைப்படுத்துவதாகவும் அதை மீள உயிர்ப்பிப்பதாகவும் அமைந்துவிடும் என்றுமோர் விளக்கம் கூறப்படுகிறது. இந்த இடத்தில் சில கேள்விகளைக் கேட்கலாம்.

- கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதால் ஒரு குறிப்பிட்ட அமைப்பின் அரசியலானது மீளத் துளிர்க்கலாம் என்ற ஓர் அச்சம் உண்டெனில் குறிப்பிட்ட அந்த அமைப்பை அழித்ததன் மூலம் அதன் அரசியலை அழிக்க முடியவில்லை என்றா பொருள்?
- ஆயின் மே.19 ஆம் திகதி முடிவுக்குள் கொண்டுவரப்பட்டது ஓர் இயக்கமா? அல்லது அது முன்னெடுத்த அரசியலா?
- அந்த அரசியல் அப்படியே நீறு பூத்திருக்கின்றதென்றால் இனப்பிரச்சினையின் மூல காரணங்கள் தீர்க்கப்படவில்லை என்பது தானே பொருள்?
- இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது ஒரு கூட்டுரிமை. அக்கூட்டுரிமையானது இலங்கைத்தீவில் இரண்டு இனங்களுக்கும் சமமானது இல்லையா?

ஆட்சி மாற்றத்தின் பின்னரான ஓர் அரசியற் சூழலில் இக்கேள்விகளின் மீதான வாதப்பிரதிவாதங்கள் மாற்றத்தின் உண்மையான உள்ளடக்கத்தையும் மாற்றத்தின் பின் தமிழ் மக்களின் நிலமைகளையும் விளங்கிக்கொள்ள உதவக் கூடும்.

**கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் மக்களால் இறந்தவர்களை நினைவுகூர முடியவில்லை என்பது மட்டுமல்ல, இறந்தவர்களையும் காணாமற் போனவர்களையும் எண்ணிக் கணக்கெடுக்கவும் முடியவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.**

தமிழ்ப்பெரும்பரப்பில் நவீன வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிர் இழப்பை கடந்த 5 ஆண்டுகளாக நாட்டுக்குள் வாழும் ஈழத் தமிழர்களால் நினைவு கூர முடியவில்லை. இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது மனித நாகரிகத்தின் மிக ஆதித் தொடக்கங்களில் ஒன்றாகும். இறந்தவர்களுக்கு மரியாதை செய்தல். மூதாதையரை வழிபடுதல், பூதவுடலுக்கு மரியாதை செய்தல் போன்றவை மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் பிரதான குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. மிருகங்களிடமிருந்து மனிதர்கள் துலக்கமாக வேறுபடும் இடங்களில் இதுவும் ஒன்று. சில மிருகங்கள், பறவைகளின் மத்தியில் இறந்த தமது இனத்தவரைச் சுற்றியிருந்து துக்கம் கொண்டாடும் சில நடைமுறைகளைக் காணமுடியும். ஆனால் மனிதர்களோ அதனைச் சடங்காகவோ வழமையாகவோ பேணி வருகிறார்கள். மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் ஒரு முக்கிய குறிகாட்டியாக அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அப்படிப் பார்த்தால் அது ஓர் அரசியல் உரிமை மட்டுமல்ல அது ஒரு பண்பாட்டுரிமையும் கூட.

மனித நாகரிகத்தின் ஆதித்தடங்களைத் தேடிச் சென்றால்,

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# பிரித்தானியத் தேர்தலின் பின்னர் ?



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

பிரித்தானியப் பொதுத் தேர்தல் முடிவுகள் எப்படி அமையப் போகின்றது என்பது பெரும் கேள்விக் குறியாக இருந்தது. தேர்தல் முடிந்த பின்னர் பிரித்தானியாவிற்கு என்ன நடக்கப் போகின்றது என்பது அதிலும் பெரிய கேள்விக் குறியாக அமைந்து விட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியாவின் எதிர்காலம் என்ன ? இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய 'தேசங்களின்' ஒன்றியமான ஐக்கிய இராச்சியத்தின் எதிர்காலம் என்ன? என்பவை பிரித்தானியாவை அதிர வைக்கின்றன. அத்துடன் தொழிற் கட்சி மீண்டும் ரொனி பிளேயரின் 'புதிய தொழிற்கட்சியாக' மீள் உருப் பெறுமா? தொழிற்கட்சியின் அடுத்த தலைமை எப்படி இருக்கும்? என்பவை தொழிற்கட்சியை அதிர வைக்கின்றன.

### ◆ ஆண்டியான அரசு உருவாக்குனர்கள்

தேர்தலுக்கு முன்னர் என்.என்.பி எனப்படும் ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சிதான் அடுத்த பிரித்தானிய அரசை உருவாக்கும் கிங் மேக் கேர்ஸாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சி தொழிற்கட்சியை ஸ்கொட்லாந்தில் ஒரு தொகுதியைத் தவிர மற்ற எல்லாத் தொகுதிகளிலும் தோல்வியடையச் செய்தது. 59 தொகுதிகளில் ஒரு தொகுதியில் கொன்சர்வேர்டிவ் கட்சியும் ஒரு தொகுதியில் தொழிற் கட்சியும் ஒரு தொகுதியில் தாராண்மைவாத மக்களாட்சிக் கட்சியும் வெற்றி பெற மிகுதி 56 தொகுதிகளிலும் ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் கொன்சர்வேர்டிவ் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற படியால் ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சி தனது பேரம் பேசும் வலுவை இழந்து விட்டது.

### ◆ பிரித்தானியாவில் இணைப்பாட்சி?

ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சி தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும் அது ஸ்கொட்லாந்து தனிநாடாக வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டது. ஸ்கொட்லாந்தின் சுதந்திர தாகம் தேர்தல் முடிவில் நன்கு வெளிவிடப்பட்டுள்ளது. அதை கொன்சர்வேர்டிவ் கட்சியும் உணர்ந்துள்ளது. அதை எப்படி புதிய அரசு கையாளப் போகின்றது என்பதில்தான் ஐக்கிய இராச்சியத்தின் ஐக்கியம் தங்கியுள்ளது. ஸ்கொட்லாந்திற்கு அதிகாரப் பரவலாக்கல் தற்போது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ஸ்கொட்லாந்திற்கு அரச நிதி தொடர்பான முழு அதிகாரத்தை தாம் கோரவில்லை என்கின்றது ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சி. வருமான வரி, ஊழியர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம், தேசியக்காப்புறுதி, வீட்டு வசதி உதவி, அதிக கடன்படுதல் போன்றவை தொடர்பாக தமக்கு அதிகாரம் வேண்டும் என்கின்றார் ஸ்கொட்லாந்தின் தேசியக் கட்சித் தலைவி நிக்கொலா ஸ்ரேர்ஜன். இலண்டன் நகர பிதா பொறிஸ் ஜோன்சன் ஐக்கிய இராச்சியத்தின் ஐக்கியத்தைக் காப்பாற்ற ஸ்கொட்லாந்திற்கு இணைப்பாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்றார்.

### ◆ ஐரோப்பிய ஒன்றியத்தில் ஐக்கிய இராச்சியம்

ஐக்கிய இராச்சியம் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்க வேண்டுமா என்பது தொடர்பாக ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பிரித்தானியாவில் நடை பெற உள்ளது. முதலில் இது தொடர்பாக ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடக்கும். கொன்சர்வேர்டிவ் கட்சியின் ஒரு பிரிவினர் வெளியேற வேண்டும் எனப் பரப்புரை செய்வர். தொழிற் கட்சியில் இருந்தும் சிலர் இந்தக் கருத்தை ஆதரிக்கலாம். யூகேஜபி எனப்படும் ஐக்கிய இராச்சிய சுதந்திரக் கட்சி முழுமையான வெளியேற வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவை வழங்கும். தாராண்மைவாத மக்களாட்சிக் கட்சி தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை ஆதரிக்கும். ஐ.ஒன்றியத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்தே வெற்றி பெறும்.

### ◆ மீள் பேச்சு வார்த்தை

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியாவின் நிலை தொடர்பாக ஒரு மீள் பேச்சு வார்த்தை செய்யப் பட வேண்டும் என்பது டேவிட் கமரூன் தலைமையிலான கொன்சர்வேர்டிவ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட ஒன்று. குடிவரவு, அதிக அதிகாரம் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை தொடர்பாக ஒரு மீள் பேச்சு வார்த்தை நடாத்தப் பட வேண்டும் என்பவை தொடர்பாக வே மீள் பேச்சு வார்த்தை நடாத்தப் படும். இதற்கு ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தில் எதிர்ப்புக் கிளம்பி விட்டது. டேவி கமரூன் ஐரோப்பிய ஒன்றியத்தில் பல நண்பர்களை இழந்து விட்டார். மொத்தம் 766 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் எட்டுக்கு மேற்பட்ட கட்சிகள் உண்டு. இதில் ஐரோப்பிய மக்கள் கட்சிக்கு 274 உறுப்பினர்களும் மக்களுடமை மற்றும் மக்களாட்சிக்கான முற்போக்குக் கூட்டணியில் 194 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இதில் முன்பு கொன்சர்வேர்டிவ் கட்சியினர் ஐரோப்பிய மக்கள் கட்சியின் ஆதரவு இருந்தது. ஆனால் டேவிட் கமரூனின் ஆட்சியில் அந்த ஆதரவு தொலைக்கப்பட்டு விட்டது. டேவிட் கமரூன் தனது மீள் பேச்சு வார்த்தையில் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும்.

### ◆ இரு விற்பன்னர்களின் மோதல்

பிரித்தானியாவில் நடந்து முடிந்த தேர்தல் பிரித்தானியா மக்களுடன் சம்பந்தமில்லாத இரு விற்பன்னர்களின் மோதலாக அமைந்தது. ஒருவர் பராக் ஒபாமாவை இரு தடவை வெற்றி பெறச் செய்த டேவிட் அக்ஸெல்றொட் மற்றவர் ஒஸ்ரேலியாவில் ஜொன் ஹோவார்டை நான்கு தடவைகள் வெற்றி பெறச் செய்த லிண்டன் குறொஸ்பி. இந்த லிண்டன் குறொஸ்பியே கொன்சர்வேர்டிவ் கட்சியின் பொறிஸ் ஜோன்ஸனை இரண்டு தடவைகள் இலண்டன் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தவர். இவர்கள் தேர்தல் பரப்புரைகளை நடாத்துவது தொடர்பாக தந்திரோபாயங்களை வகுத்துக் கொடுப்பார்கள். பரப்புரை உத்திகளை வகுப்பார்கள். இவர்கள் இருவருக்கும் ஆளுக்கு ஐந்து இலட்சம் பவுண் கட்டணமாகச் செலுத்தப்பட்டது. கொன்சர்வேர்டிவ் கட்சிக்கு ஆலோசனை வழங்கிய லிண்டன் குறொஸ்பி தனிமனித நிந்தனைகள் செய்யத் தூண்டுவதில் பெயர் போனவர். கொன்சர்வேர்டிக் கட்சிக்கு லிண்டன் குறொஸ்பி வகுத்த உபாயங்கள்:

1. தொழிற்கட்சித் தலைவர் எட்வர்ட் மில்லிபாண்ட் கொன்சர்வேர்டிவ் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான டேவிட் கமரூனுக்குச் சரியானதும் நம்பகத் தன்மை வாய்ந்ததுமான மாற்றீடு அல்லர் எனப் பரப்புரை செய்வது. இதை ஒட்டி எட்வர்ட் மில்லிபாண்டிடம் நாட்டை ஒப்படைப்பது ஜிம்மி சவைலிடம் சிறுவர் பராமரிப்பு வேலையை ஒப்படைப்பது போன்ற கட்டுரைகள் ஊடகங்களில் வெளிவிடப்பட்டன. காலம் சென்ற ஜிம்மி சவைல் பிபிசியில் பணிபுரியும் போது பல சிறுவர்களை பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கியவர்.

2. தொழிற்கட்சியுடன் தோழமையாக நடந்து கொண்ட தாராண்மைவாதக் கட்சிக்கு எதிராக தீவிர சந்தைப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி செல்வாக்கிழக்கச் செய்தல்.

3. டேவிட் கமரூன் ஆட்சியில் இருபது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்தமை, அரச பாதீட்டில் துண்டுவிழும் தொகைகளைக் குறைத்தமை, வருமான வரிகளைக் குறைத்தமை தொடர்பாக மிகைப்படுத்தப்பட்ட பரப்புரைகளைச் செய்தல்.

4. டேவிட் மில்லிபாண்டின் பலவீனங்கள் மீது தாக்குதல் நடாத்துதல். இதற்காக அவர் அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட படத்தை பத்திரிகைகளில் பிரசுரித்து வருங்கால பிரித்தானியத் தலைமை அமைச்சர் இப்படியா அசிங்கமாகச் சாப்பிடுவது என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது. கொன்சர்வேர்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்களே இந்தப் பரப்புரைகள் சில்லறைத்தனமானது என இரகசியமாக ஒப்புக் கொண்டார்கள். தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புக்கள் கொன்சர்வேர்டிவ் கட்சியினருக்குத் திருப்தி அளிக்காத நிலையில் லிண்டன் குறொஸ்பி எல்லாம் எமக்குச் சாதகமாகவே நகர்ந்து கொண்டிருக்கின்றது என ஊக்கமளித்தார். பின்னர் கடைசித் துருப்பாக தொழிற் கட்சி ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் அது ஆங்கிலேயர்களுக்கு பெரும் பாதகமாக அமையும் என்ற பரப்புரையும் தீவிரமாகச் செய்யச் சொன்னார். ஆனால் பாவம் தொழிற் கட்சிக்கு ஆலோசனை வழங்க வந்த டேவிட் அக்ஸெல்றொட்டின் உபாயங்களை நிறைவேற்றப் போதிய பணம் தொழிற்கட்சியிடம் இல்லை. இவரை அழைப்பது என்றவுடன் பணத் தட்டுப்பாட்டில் இருக்கும் எமது கட்சிக்கு இந்த அளவு பணம் செலவழித்து ஒரு ஆலோசகரைப் பெற வேண்டுமா என்ற கேள்வி தொழிற் கட்சியில் உள்ள சிலரிடமிருந்து எழுந்தது. அத்துடன் எமது ஊர்ப் பிரச்சனைகளைப்பற்றி இந்த அமெரிக்கர் எப்படி அறிவார் அவர் எப்படி எமக்கு ஆலோசனை சொல்வார் என்ற கேள்விகள் தொழிற்கட்சியினரிடம் எழுந்தது. டேவிட் அக்ஸெல்றொட்டின் கருத்துப் படி பிரித்தானிய ஊடகங்கள் எல்லாம் மிகவும் கட்சி சார்பானவை. அமெரிக்க ஊடகத்தை விட மோசமானது பிரித்தானியஊடகங்கள்.

### ◆ தொழிற்கட்சி - இடம் வலம்

தொழிற்கட்சியின் அடுத்த தலைவர் எட் மிலிபாண்டிலும் பார்க்கத் தீவிரமான இடது சாரியாக இருக்க வேண்டும் என்கின்றன தொழிற் சங்கங்கள். தொழிற் கட்சி இடப்பக்கத்தில் இருந்து விலகி மத்திய நிலைக்குச் சென்று எல்லாத் தரப்பு மக்களையும் அணைத்து அரசியல் நடாத்த வேண்டும் என்கின்றனர் ரொனி பிளேயரும் அவரது ஆலோசகரான மண்டெல்சனும். அமெரிக்காவில் நேற்று நடந்தது பிரித்தானியாவில் இன்று நடக்கும் அப்படி அமெரிக்கர்களை 'காப்பி அடிப்பதில்' பிரித்தானியர்கள் விருப்பமானவர்கள். அமெரிக்காவில் ஒரு கறுப்பினத்தவரை ஆளச் செய்தது போல் தொழிற்கட்சியும் தனக்குத் தலைவராக ஆபிரிக்கப் பரம்பரையில் வந்த சுக்க உம்முன்னாவைத் தலைவராக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவர் இடது சாரி அல்ல என்பதனால் தொழிற் சங்கங்கள் அதை எதிர்க்கின்றன.

### ◆ கமரூன் காட்டில் மழை

உலகின் முன்னணி நாடுகளில் பிரித்தானியா உலக பொருளாதார நெருக்கடியில் இருந்து முதலில் மீளும் நாடாக இருக்கின்றது. வர்த்தக சுழற்ச்சியில் பிரித்தானியப் பொருளாதாரம் கீழ்ப்புள்ளியில் இருந்து மீண்டு விட்டது. அத்துடன் புற இலண்டனில் கண்டறியப்பட்டுள்ள எரிபொருள் வளமும் பிரித்தானியாவிற்குப் பொருளாதார ரீதியில் பெரும் நன்மையைக் கொடுக்க விருக்கின்றது. கொன்சர்வேர்டிவ் கட்சியினர் பிரிவினை வாதங்களை வளர்த்து பெரிய பிரித்தானியாவைச் சிறிய இங்கிலாந்து ஆக்கக் கூடாது.


கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN
BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES
Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# India v. China in Sri Lanka: Lessons for Rising Powers



By Kadira Pethiyagoda

John Kerry's visit to Sri Lanka, the first by a U.S. Secretary of State in 11 years, recognizes country's geopolitical importance. It also highlights the outcome of the recent tussle over the island state by two emerging global powers. This is a contest in which India has now gained the upper hand over China, offering important lessons for rising powers as they begin a "Great Game" in Asia.

Sri Lanka sits at the heart of the Indian Ocean, adjacent to major shipping routes, within the world's most strategically and economically dynamic region – the Indo-Pacific. Long described as the "pearl of the Indian Ocean," Sri Lanka was, until the January election defeat of President Mahinda Rajapaksa, drifting out of India's orbit and increasingly seen as part of China's "string of pearls." But while increasingly solid economic links correlating with China's rise will change little regardless of who leads Sri Lanka, politically, the Indian government of Prime Minister Narendra Modi was able to snatch back this pearl from Beijing's string.

While Sri Lanka's people voted out a government that happened to be Beijing-friendly, it wasn't a foregone conclusion that its successor should be this pro-Delhi. Of course, this outcome does not necessarily mean that New Delhi is the more astute strategist – India has inherent geographical advantages regarding Sri Lanka – nonetheless the Modi government's deft diplomacy provides important lessons for budding global powers. These are the same lessons that a century ago, the then rising U.S. learned from incumbent superpower Britain. The Modi government demonstrated the importance of sharpening the two main items in one's foreign policy toolkit – insight and influence. This is particularly relevant for Beijing: While it has vastly superior foreign policy resources to India, China's blunt instruments of the trade/ investment carrot and the military force stick cannot succeed alone.

## PR Defeat

Sri Lanka's slide back toward New Delhi began during the 2014 election campaign. The opposition often claimed that it would revoke allegedly corrupt deals made between Rajapaksa and Beijing. The fact that relations with China could be used as a campaign tool by the opposition already suggests a PR defeat for the PRC.

Following its election win in January, the new Sri Lankan government widely touted its strengthening of ties with India, and made little effort to conceal the shift away from China.

This is a particularly acute failure of image management, given that Beijing had a powerful story it could have told the Sri Lankan public. This was namely that China was there when no-one else was. The civil war between the Sri Lankan government and Tamil Tiger rebels was Asia's longest. Governments came and went. The pivotal factor in Colombo's ultimate victory over the LTTE was not domestic (though the 2004 tsunami played a role). It was external. It was the rise of China.

Even hawkish Sri Lankan governments had been hamstrung in pursuing a definitive victory, due to fear of upsetting the West, which insisted upon adherence to human rights and international law in the conduct of the war. If not, trade and aid levers might be pulled, harming Sri Lanka's economy and a government's chance of re-election.

When China emerged as a major economic power willing and able to step into any void left by the West, it allowed Rajapaksa greater freedom in prosecuting the war. Beijing provided the lethal military equipment and the postwar diplomatic support that Delhi would not. The ending of the war remains a major issue in the national psyche, in the eyes of the majority of Sri Lankans, it is the former president's greatest achievement.

In contrast, India's reputation in Sri Lanka ranges from mixed to negative: from those Tamils who have painful memories of the Indian Peace Keeping Force fighting the LTTE, to Sinhalese who blame India for training the Tigers in the first place, preventing their defeat in 1991, and curtailing the war effort subsequently.

Given all this, how did India rehabilitate its image, such that it was seen in a similar or better to China? It may be partly due to Delhi's cultural diplomacy underpinned by "in-country insight," particularly ancient Indo-Lankan ties. This was expressed very publicly post-election in Modi's visit. The Indian PM garnered favor with Sri Lanka's Sinhalese majority by visiting and worshipping at Buddhist holy sites. This continued the "Buddhism diplomacy" employed in his "Act East" approach, reaching out to neighbors with large Buddhist populations and histories.

Publicly emphasizing India's Buddhist history and positioning himself as a representative of "all of Indian culture" is not unexpected from this devoutly Hindu prime minister. The Hindutva movement, from which Modi arose, has long described itself as the vanguard of all that they consider Indian heritage, including Buddhism, Jainism and Sikhism.

Modi also visited the island's Tamil cultural heartland. Showing his commitment to Tamil welfare has helped him to endear himself to both Sri Lankan and Indian Tamils.

Knowing that Sri Lankans often suspect that India's Tamil Nadu state controls Delhi's Sri Lanka policy, Modi has tried to reclaim the narrative of Indo-Lankan relations; to show that the two countries' ties stretch further and deeper than the civil war. This is in addition to actually clawing back control of Sri Lanka policy.

> China could have tapped into its own cultural connections through Buddhism. Beijing could also have considered the words of ancient India's Machiavelli, Kautilya, whose analyses seem to have played out in modern South Asia. Kautilya stated that a state's immediate neighbors are usually enemies, making its neighbors' neighbors natural allies. Consequently many small states surrounding India would welcome a greater Chinese role, just as China's small neighbors like ASEAN welcome Indian engagement.

If Beijing seeks to win influence in smaller states, it needs to develop deep insight into these states within its foreign policy institutions. In Sri Lanka, China could have tapped into its own cultural connections through Buddhism. Beijing could also have considered the words of ancient India's Machiavelli, Kautilya, whose analyses seem to have played out in modern South Asia. Kautilya stated that a state's immediate neighbors are usually enemies, making its neighbors' neighbors natural allies. Consequently many small states surrounding India would welcome a greater Chinese role, just as China's small neighbors like ASEAN welcome Indian engagement.

Beijing also should have been aware of Sri Lanka's long history of civil society and the risks of pursuing deals perceived as corrupt. To mitigate the corruption accusations, Beijing could have helped the Rajapaksa government emphasize that China invested in projects which India declined, and promoted the evidence of investments in infrastructure, which were visible to ordinary Sri Lankans.

Delhi's ability to attract Colombo was also a result of its ability to influence, beyond overt public diplomacy. There are claims by Rajapaksa that India's spy agency helped organize opposition groups at the last election. Delhi has denied this. Whether true or not, India seems to have trumped China in cultivating stronger ties with key power nodes within Sri Lankan society. Interfering in domestic politics, though unethical, is something that Great Powers have always done. Beijing could have used its investments to strengthen links with the business elite in Colombo. It could have supported rural nationalists in leveraging suspicion of India to paint the opposition as "traitors" – a tag that was pivotal in earlier opposition defeats.

Both tools of insight and influence require tapping into a diverse domestic foreign policy community. India and China have growing pools of expertise across government departments, think tanks and universities. To take full advantage however, leaders must use the best advice that the pool provides, not just advice from those most loyal. There should be a competitive environment where the best evidence-based analyses and predictive capabilities are rewarded. In the past, this meritocracy was utilized more effectively by the country that is the only remaining superpower than by its now vanquished opponent. This is something that should be noted by the rising powers.

*Courtesy: brookings.edu*



# At Home and Abroad: Accountability, Reconciliation and Sinhala Buddhism

Sri Lanka announced recently that it would launch a domestic probe to investigate war time mass atrocities in time for the release of the UN mandated investigation due in September. The announcement, made in the wake of a high profile visit to the island by the US Secretary of State John Kerry late last month, suggests that Sri Lanka is responding to international demands. However, it is not clear that this new international engagement necessarily translates to real changes on the ground. The government's behaviour is notably contradictory. While it reassures international audiences that it is taking accountability seriously and is committed to reform and reconciliation, it says quite another to domestic Sinhala Buddhist constituencies. This duplicity is worrying and suggests that the government is intent on continuing with business as normal rather than committing to the deep changes in governance that are needed to secure a just and lasting peace.

While abroad or speaking to international audiences, both the President and Foreign Minister have made pious sounding commitments to power-sharing, reconciliation and the need for accountability. At home however, things are different. When speaking to domestic audiences the new government has rejected 'foreign intervention,' including the findings of the UN investigation and made clear its commitment to keep the Tamil speaking areas under tight military control. Having announced a domestic probe into war time atrocities, the Foreign Minister quickly explained that it was primarily a patriotic exercise designed to 'salvage the name of our country and our armed forces.' The new probe is therefore likely to be identical to previous ones that have been dismissed by human rights organisations as exercises in 'make believe,' farcical attempts to deflect international criticism. Furthermore far from moving towards reconciliation, the new government has reacted with hostility to popular Tamil demands. When the Northern Provincial Council passed a resolution describing Sri Lankan state repression as genocide – a resolution the Chief Minister hoped would also be an 'epistle' to his Sinhalese 'brothers and sisters' - the Prime Minister responded by denouncing it as 'racist' before going on to gloat over the UN's decision to defer the publication of its' report as a 'slap in the face' for the Council.

This duplicity cannot, however, be dismissed as mere populist rhetoric that conceals more honourable purposes. The new government's failure to translate now pressing international demands to domestic audiences is sending the Sinhala electorate the wrong signals. During his recent visit, John Kerry stressed the need for Sri Lanka to co-operate with the UN inquiry whilst taking concrete steps towards a political solution to the Tamil question. The British and Indian Prime Ministers have given similar messages in their meetings with President Sirisena. Yet, when speaking to Sinhala audiences the President insists that he is not under international pressure whilst the Foreign Minister heralds Sri Lanka's 'return to the international stage' without explaining what Sri Lanka is expected to do in return.

In the absence of a countervailing explanation, Sinhalese voters can be forgiven for thinking that the international community's renewed enthusiasm for Sri Lanka's is simply a matter of the new government's more skilful diplomacy and high profile diplomatic visits can be read as an endorsement of the Sinhala majoritarian status quo. Certainly John Kerry's visit to a Buddhist temple, abstracted from the overarching messages on accountability and reconciliation, and the new government's trumpeting of its international successes, will be read in this light. Buddhism in Sri Lanka is after all not just a religion but asserted as the 'rightful' and 'national' religion of the entire island, and one that is guaranteed the 'foremost' place in the constitution and which the state has a responsibility to 'protect and foster.'

The privileging of Buddhism moreover regularly requires the subordination of other identities. Just days before Mr. Kerry's visit, a government appointed commission ordered the destruction of the long established Kuragala mosque claiming that it sat on Buddhist archaeological site. Meanwhile across the occupied north-east the military builds Buddhist temples and conducts elaborate Buddhist festivals amongst the overwhelmingly non-Buddhist population whilst also preventing locals from culturally and economically rebuilding in the aftermath of devastating war. The government's duplicity – saying one thing abroad and another at home - appears to secure international legitimacy for this reality and makes the transformations that will be needed for a more inclusive order to emerge that much more difficult to secure.

Continued international engagement will be crucial to establishing credible accountability in Sri Lanka as well as a lasting political settlement. However, Sinhala leaders also need to step up to the plate and make clear to their electorate that the status quo of ethnic hierarchy and ongoing militarised repression in the Tamil speaking areas is internationally unsustainable, quite apart from it being ethically un-defendable . The end of apartheid in South Africa was presaged by F. W De Klerk's campaign amongst white South Africans that spelt out the necessity of political reform to ward off the threat of further international cultural and economic isolation that was imminent in a post-Cold War world where apartheid could no longer be justified on the basis of its alleged centrality to the global anti-communist campaign.

If the new government is serious about its international pledges, it must start doing the hard talk with the Sinhala electorate. If instead it continues on its current course of pledging accountability, political reform and an inclusive multi-ethnic order to international audiences whilst pandering to the Sinhala Buddhist majoritarianism of domestic ones, this current set of pledges will simply be washed away by the next tide of Sinhala nationalist mobilisation as have all previous ones. Most recently the Norwegian mediated talks were cut adrift by a surge of Sinhala nationalist mobilisation that balked at any compromise with the Tamils; a dynamic that rehearsed the failure of the most distant compromise between Bandaranaike and Chelvanayagam in 1957 undone by Sinhala Buddhist mobilisation including a now infamous march to the Buddhist temple in Kandy by the uncle of the present Prime Minister. Sinhala leaders need to make the case for the urgent necessity of change before Sinhala audiences – not Tamil or international ones who do not need convincing. But this is precisely what they are not doing.

*Courtesy: Tamil Guardian*



# KIDS பேப்பர்




## Amazon Rainforest

- The Amazon is the world's largest tropical rain forest. Covering over 5.5 million square kilometres
- The Amazon is found in South America, spanning across Brazil, Bolivia, Peru, Ecuador, Colombia, Venezuela, Guyana, Suriname and French Guiana.
- Running through the north of the rainforest is the Amazon river. Flowing a length of around 6,400km, it is the second longest river in the world. The longest is the river Nile, stretching an even longer 6,650km!
- The Amazon has an incredibly rich ecosystem - there are around 40,000 plant species, 1,300 bird species, 3,000 types of fish, 430 mammals and a whopping 2.5 million different insects.
- 10% of the world's known species live in the Amazon rainforest.
- 20% of the world's bird species live in the Amazon rainforest.

## Colouring - 242






## Find The Answers







**Issue 241 Winner**
**Mithun Mayuran**

**Dear Kids...**

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

***Visit our Web: www.facebook.com/ orupaper***



## Word of the week



**hiccups**

"Hick! Uh-oh, I've got hiccups!" "I know how to stop hiccups." "Just get a glass of water and drink it upside down." "I'll go and get some!"





Mithun (Age 9)



Keyura, 8 Years Old

## நாள் ஒரு குறள்

செய்தக்க அல்ல செயக்கெடும்
செய்தக்க செய்யாமை யானும்
கெடும்.

விளக்கம்:

செய்ய வேண்டாதன செய்வதாலும் கேடு வரும்? செய்ய வேண்டியனவற்றைச் செய்யா விட்டாலும் கேடு வரும்.

Taking upon acts that do not benefit one, or failing to perform bounden duties both lead to ruin.

## Riddle

Q1: How do you make the number one disappear?
Q2; What goes up but never comes down?
Q3: They come out at night without being called, and are lost in the day without being stolen. What are they?
Q4: How many months have 28 days?



Q5: What has one eye but cannot see?
Q6: What kind of tree can you carry in your hand?

A1: Add the letter G and it's "GONE."
A2: Your age!
A3: Stars!
A4: All 12 months!
A5: A needle
A6: A palm!


Jenitha Clarindas



Shanthuriya Siva


CELEBRATIONS by
SHREE VENILALS UK
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
மங்கையர்
மனங்கவர்
ஆடைகளின்
சங்கமம்!
ராசியான
கூறைப்புடவைகள்
அனைத்து
வகையான
சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான
உடைகளைத் தரமாக
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
Introducing For The First Time..
Shree Venilal's
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144
Celebrations
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051
Warehouse by
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!
உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...


AGILOGIX
connecting the world
CALL – 02033711272
மறைமுக கட்டணம் இல்லை
எமது சேவைகள்: களஞ்சியம் - காப்புறுதி -
திறந்த வெளி இட வசதி - பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்
தனிநபர் கவனிப்பு - அதிகப்படியான பொதி - இடமாற்றம்
- இலவச பெட்டிகள்
- பொறுப்பேற்றல் - விநியோகித்தல்
- தொழில்முறை ஆலோசனை
கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்
- பணியக உதவிகள்
- கடன் கடிதங்கள்
- சுமை அகற்றல் - ஏற்றல்
from £ 1.90*
வீட்டுக்கு வீடு சேவை
இலங்கையிலுள்ள உடன்பாட்டாளர்
பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்
வாணிப சரக்கு நிலையம்
இயந்திரங்கள் - உபகரணங்கள்
- உதிரிப்பாகங்கள்
- விசேட விலைகள் - தகர்த்தல் மற்றும் தயாரித்தல்
£ 15.00 limited offer
20′
24′
15′
T/CHEST
- சுங்க ஏற்றுமதி
- ஆவணங்கள்
- செயலாக்கம்
- இறுதி வரை கையாளுதல்
from £ 685*
Office: 46, Mead Court, Buck Lane,
Kingsbury, London, NW9 0XN
Tel: 0203311272 Mob: 07913842265
Email: sales@agologix.co.uk
Warehouse & Yard
Unit1 & 2, Renwick Industrial Estate, Renwick
Road, Barking, IG110SD
Tel: 0203311272 Mob: 07913842265


MERLYN
KUDOS
hansgrohe
Hudson Reed
JSN HEAT SUPPLIES LTD
KUDOS
GROHE
GRUNDFOS
WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS
EUROSMART BASIN MIXER SMOOTH BODY £45.24 inc. VAT
EUROSMART BASIN MIXER POP UP WASTE £56.00 inc. VAT
EUROSMART BASIN MIXER + BATH SHOWER MIXER PACK £233.20 inc. VAT
COSMO SHOWER BUNDLE £432 inc. VAT
SINGLE LEVER BASIN MIXER LIMITED OFFER £14.99 inc. VAT
SINGLE LEVER BATH/SHOWER LIMITED OFFER £32.00 inc. VAT
KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILABLE.
SPECIAL OFFER Thermostatic 2 way outlet
LIMITED OFFER £169 inc. VAT
£149 inc. VAT
G1000 COSMO BSM WITH NEW TEMPESTA £201.00 inc. VAT
EUPHORIA SYSTEM 180 SHOWER SYSTEM £298.00 inc. VAT
COMPACT FURNITURE PACK
550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat.
£249 inc. VAT
1200mm 6MM SAFETY GLASS CLEAR SEALED LIFETIME GUARANTEE SLIDING DOOR
£189 inc. VAT
LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from £14 inc. VAT
ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES
Vaillant
Roca
MAIN
Armitage Shanks
Glow-worm
Ideal Standard
AQUALISA
AQUALUX
mira
ARISTON
KESTON
saneux
• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES
162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553

# சொற்சோர்வு படேல்



இயற்கையின் படைப்பில் மனிதருக்கு கிடைத்த கொடைகளில் ஒருவர் இன்னொருவருடன் பேசும் திறன் மிகப் பெரிது. இத்திறமையை நன்கு பயன்படுத்தினால் எவ்வளவோ சாதனைகளை அடைய முடியும். எனினும் பேசும்போது ஒவ்வொருத்தரும் கையாளும் சொற்களில் மிக அவதானம் தேவை என்பதே ஔவையாரின் சொற்சோர்வு படேல் எனும் உபதேசம்.

சிலர் வாய் திறந்தாலே எதைப் பேசுவது, எப்படிப் பேசுவது என்று சிந்திக்காமல் வாயில் வந்ததையெல்லாம் உளறிவிட்டு, பின்னர் அதன் விளைவுகளையிட்டு வருந்துவது காணக் கூடியதாக இருக்கிறது. குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி, தொழில் செய்யும் இடங்களிலும் சரி பேசும்போது கையாளும் சொற்களில் மிகவும் அவதானமாக இருந்தால் அனேக குழப்பங்கள் தவிர்க்கப்படும் எதை இழந்தாலும் வாய் தவறிவிட்ட சொற்களை திரும்பவும் பெறமுடியாது. வள்ளுவர் கூட, தீயினால் சுட்ட புண் உள் ளாறும் ஆறாதே, நாவினால் சுட்ட வடு என நாசுக்காக எச்சரித்துள்ளார்.

பேச்சுக்கு துணை போவது சிந்தனை. எதைத்தான் சிந்தனையில் பதிவு செய்தாலும் அதை மறந்துவிடாமல் சொற்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டுமாயின், சொற்சோர்வடையாமல் இருப்பது அத்தியாவசியம். ஆகவே தான் சிந்திக்கும் எண்ணங்களை கோர்வையாக நெறிப்படுத்தி மறந்து விடாமல் பேசுவது புத்திசாலிகளுக்கு கிடைத்த அரிய பொக்கிசம்.

ஆழ்ந்த அனுபவமுள்ள அறிஞர்கள், அரசியல் வாதிகள் கூட தாங்கள் சொல்ல நினைத்ததைச் சொல்லாமல், வாய் தவறி விடுக்கும் சில செய்திகள், விபரீதமான விளைவுகளை உண்டுபண்ணுவது அடிக்கடி கிடைக்கும் அனுபவங்களாகும். இத்தவறுகளுக்காக இவர்கள் பின்னர் மன்னிப்பு கோரினாலும், முதலில் விடுத்த சொற்களின் தாக்கம் விரைவில் மறந்துவிட முடிவதில்லை. ஆகவே தான் ஔவையாரின் சொற்சோர்வு படேல் என்ற அறிவுரை பொருந்துமென நம்பலாம்.

பேசும்மொழி எதுவாக இருந்தாலும், சிந்தனைக்கும் அதை வெளிப்படுத்தும் சொற்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தால் வீணாக உண்டாகும் விரசல்கள் தவிர்க்கப்படும். அன்பு, அன்யோன்யம் தூண்டப்படும். ஔவையாரின் அறிவுரைகள் உலகில் வாழும் எல்லா இனத்தவருக்கும் பொருத்தமாக இருப்பது தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த பெருமை என்பதில் தவறில்லையே.

# ஆரோக்கியத்தை கண்காணிக்க வைட்டல் வானொலி

உயர் இரத்த அழுத்தம், சீரற்ற இதயத் துடிப்பு, சுவாசிப்பதில் தடங்கல் என்ற உடல் ஆரோக்கியத்தில் தத்தளிப்பவர்களை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவுடன் அவர்களின் உடலில் அங்குமிங்கும் ஒட்டப் படும் சென்சர் (sensor) கருவிகளை அனேகர் கண்டிருப்பீர்கள். இதன் மூலம் பதிவு செய்யப் படும் அறிக்கையை வைத்தே சிகிச்சைகள் மேற்கொண்டு ஆரம்பிக்கப்படுவது வழமையான நடைமுறை.

Massachusetts தொழில்நுட்பக் கல்லூரியின் கணனி, விஞ்ஞானப் பிரிவினரால் கற்றபி பரிசோதனைக் கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நூதனமான வானொலியினால், கம்பியில்லாத தொடர்புடன் (wifi) உடலில் எதுவித சென்சர் களைப் பொருத்தாமலே, உடலில் உண்டாகும் ஆரோக்கிய அறிகுறிகளை பதிவு செய்ய முடியுமென ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

வை-பை வசதியுள்ள எந்தக் கட்டிடத்துக்குள் நுழைந்தவுடன் அவரவர் உடல்நிலையைக் கண்காணித்து உடனுக்குடன் தகவல்களைத் தரும் வல்லமை இந்த அதிசய வானொலிக்கு இருப்பதாக ஆராய்ச்சிக் குழுவின் அங்கத்தவரான பேடல் அடிப் என்பவர் தெரிவிக்கிறார். வைட்டல் வானொலி (vital-radio) என அழைக்கப் படும் இந்த வானொலி, ராடர் போன்ற ஒரு கருவியாகச் செயற்படுவதாகவும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் அமர்ந்திருக்கும் இடத்துக்கும், வானொலியின் அன்ரீனா இணைக்கப்பட்டுள்ள இடத்தையும் பொறுத்தே சமிக்ஞைகள் கிடைக்குமென்பதால் வை-பை வழியாக இத்தொழில் நுட்பத்தை புகுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

உடல் சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளை பதிவு செய்யக் கூடிய இந்தக் கருவி வை-பை வழியாக இயக்கப்பட்டால், மடிக் கணனிகளை வைத்தே உடலின் ஆரோக்கியத்தை கண்காணிக்க வழி பிறக்கப்போவது வெகு தூரத்தில் இல்லை.

# சிதைக்கப்படும் கலாசாரம்

இரவில் எந்த நேரமானாலும் எதுவித அச்சமுமின்றி பெண்கள் வீதிகளில் நடமாட முடிந்ததாக ஒரு காலத்தில் கிளிநொச்சி பிரதேசமாக இருந்ததை அறிய முடிந்தது. அந்த நிலமை மாறி இப்பொழுது கசிப்பு வர்த்தகம் தலை விரித்தாடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. கட்டுப்படுத்த முடியாமல் கசிப்பு வர்த்தகம் பெருகிய காரணத்தினால் இதை ஒரு விவாதப் பொருளாக யாழ். ஒளிபரப்பில் கலந்துரையாடியதை அறிகிறோம்.

கசிப்பு வர்த்தகத்திற்கு மூல காரணமாக கூறப்படுவது, தொழில் இல்லாதவர்கள் குடும்ப வருமானத்துக்காக நாடும் இலகுவான தொழிலாகக் கருதப்படுவதால் இவ்வர்த்தகம் நாளுக்கு நாள் பெருகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. விவசாயப் பண்ணைகளாக, வளம் கொழித்த பூமியாக, கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் பச்சைப் பசேலெனக் கண்டு கழித்த கிளிநொச்சியை இந்த நிலைக்கு தள்ளியது 30 வருடப் போராக இருந்தாலும், கசிப்பினால் சீரழியும் கலாசாரத்தை பாதுகாக்க எவரும் முன்வரவில்லையென்பதே ஏக்கமாகும்.

முள்ளிவாய்க்கால் அழிவுகளை, நினைவு கோரும் தாயக மக்களும் சரி, புலம்பெயர்ந்த தமிழர்களும் சரி, ஆண்டுக்கொருதரம் எழுச்சிப் பேரணிகள் நடாத்தியும் உரத்த கோசங்கள் எழுப்புவதோடும் நின்றுவிடுவது தான் வழமையான செயல்பாடுகள். பல்லாயிரக் கணக்கில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்கள் இன்றும் வாழ வழியில்லாது சமூகத்தில் தீண்டதகாதவர்கள் போல ஒதுக்கப்பட்டு கசிப்பு வர்த்தகம் போன்ற துறையிலும், விபச்சார விற்பனைகளிலும் ஈடுபடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கமும் முன்வரவில்லை. தரும ஸ்தாபனங்களும் முழுமையாக கைகொடுக்க வில்லை என்பதே துயரமான செய்திகள்.

உயிர் நீத்தவர்கள் சார்பில் இரங்கல் தெரிவிப்பதிலும் மேலாக அவர்கள் கைவிட்டு சென்ற குடும்பத்தினருக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் என்பதே சமீபத்தில் பரவலாக எழுந்துள்ள கரிசனையாகும். போராளிக் குடும்பங்களை தூரவே தள்ளி வைக்கும் மனப்பான்மை மாற வேண்டும். மனிதாபிமானத்துடன் அவர்களை அணுக வேண்டும். தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் வசதி செய்ய வேண்டும். அதுவே முள்ளிவாய்க்காலில் உயிர் இழந்தவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான நன்றிக் கடனாகவும், ஞாபகார்த்தமாகவும் அமையுமென ஆறு ஆண்டுகள் நிறைவுபெறும் இத் தருணத்தில் திடசங்கற்பம் எடுப்போம்.



# போர் நினைவு நாளில் போருக்குத் தயார் நிலையைக் காட்டிய இரசியா




**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியப் படைகளுக்கு எதிரான வெற்றியின் 70வது ஆண்டு நிறைவு நாளை என்றுமே இல்லாத பெரும்படை அணிவகுப்புடன் இரசியா நினைவு கூர்ந்துள்ளது. மே மாதம் 9-ம் திகதி நடந்த அணிவகுப்பில் 16,000படையினரும், 200 தரை ஊர்திகளும், எவுகணை எதிர்ப்பு முறைமைகளும், கண்டம் விட்டுக் கண்டம்பாயும் ஏவுகணைகளும், 150 வானூர்திகளும் பங்கு பற்றின. உக்ரேன் விவகாரத்தைத் தொடர்ந்து மேற்கு நாடுகளுடன் பெருமளவு முரண்பட்டுக் கொண்டிருக்கும் இரசியாவின் இந்த அணிவகுப்பு மேற்கு நாடுகளுக்கு சவால் விட்டதுடன் இரசியர்களுக்கு நம்பிக்கையும் தேசப்பற்றையும் ஊட்ட முயன்றது.

### ◆ புறக்கணித்த மேற்கும் பங்குபற்றிய கிழக்கும்

இரசியாவின் இரண்டாம் உலகப் போர் வெற்றியின் 70வது ஆண்டு நினைவு நாளை மேற்கு நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் உக்ரேன் விவகாரத்தில் இரசியாவின் நிலைப்பாட்டிற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முககாமப் புறக்கணித்திருந்தார்கள். சீன அதிபர் ஷி ஜின்பிங், இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முஹர்ஜி, வெனிசுவேலாவின் அதிபர் நிக்கொலஸ் மதுரோ ஆகியோர் அங்கு பங்குபற்றியவர்களில் முக்கியமானவர்கள். வட கொரிய அதிபர் கிம் ஜொங் உன் பங்குபற்றுவதாக இருந்தது ஆனால் இறுதிநேரத்தில் அவர் மஸ்கோவின் செஞ் சதுக்கத்திற்குப் போக முடியாமல் போய்விட்டது.

### ◆ அசைய மறுக்கும் புட்டீன்

உக்ரேன் விவகாரத்தின் பின்னர் உருவான நேட்டோவின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் இருக்க 2015-ம் ஆண்டின் ஆரம்பத்தில் இரசியா தனது படைவலுவைக் கூட்டும் திட்டத்தை அதிரடியாக அறிவித்தது. 2020-ம் ஆண்டு இரசியா தனது அணுக்குண்டு இருப்பைப் பெருமளவில் அதிகரிக்கவுள்ளது என்றார் இரசியாவின் முப்படைத் தளபதி வலெரி ஜெரசிமோவ். அத்துடன் இந்த ஆண்டு இரசியா ஐம்பது கண்டம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுக்குண்டு கொண்ட ஏவுகணைகளைத் தனது படைக்கு இரசியா இணைக்கவிருக்கின்றது. அமெரிக்காவின் படைவலு மேலாண்மை இரசியாமீது ஆதிக்கம் செலுத்த முடியாத வகையில் நாம் எமது படைவலுவை அதிகரிப்போம் எனச் சூளுரைத்திருந்தார் இரசியாவின் முப்படைத் தளபதி வலெரி ஜெரசிமோவ். இருபது ரில்லியன் ரூபிள் அதாவது 287 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான படைத்துறை புதுப்பிக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தை இரசியா அறிவித்தது. அத்துடன் அடுத்த பத்து ஆண்டுகளில் இரசியாவின் படைத்துறையில் முழுமையாகப் புதுப்பிக்கப்படும் என்றும் இரசியா அறிவித்தது. இத்திட்டங்களை இரசியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஷேர்கி ஷொய்குவும் உறுதி செய்துள்ளார். இரசியாவிடம் தற்போது 8500 அணுக்குண்டுகள் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது அமெரிக்காவிடம் இருக்கும் குண்டுகளின் எண்ணிக்கையிலும் பார்க்க ஆயிரம் அதிகமானதுமாகும். ஏற்கனவே இரசியாவிடம் 3082 போர் விமானங்கள், 15,550 போர்த் தாங்கிகள். ஒரு விமானம் தாங்கிக் கப்பல், 352 போர்க்கப்பல்கள் இருக்கின்றன. 2015-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி ஐரோப்பாவிற்கான பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தில் உரையாற்றிய இரசியப் பிரதிநிதி உக்ரேனிற்கு மேற்கு நாடுகள் படைத்துறை ரீதியில் ஆதரவு வழங்கினால் அது பெரும் அழிவில் முடியும் என எச்சரித்திருந்தார்.

### ◆ இரசியாவின் பொருளாதாரம்

சரிந்த எரிபொருள் விலையும் பொருளாதாரத் தடைகளும் இரசியப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தின. 2015 ஏப்ரல் மாதம் இரசியாவில் ஊழியர்களுக்கான ஊதியக் கொடுப்பனவு நிலுவை 2.9பில்லியன் ரூபிள் (அதாவது 56பில்லியன் டொலர்கள்) ஆக இருந்தது. இரசியாவின் பல பாகங்களில் இதனால் வேலை நிறுத்தங்களும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. ஐக்கிய அமெரிக்கா, இரசியா, சீனா ஆகிய மூன்றும் உலகின் முன்னணிப் படைக்கலன் ஏற்றுமதி நாடுகளாக இருக்கின்ற போதும் இரசியா படைக்கலன் ஏற்றுமதித் திறனை இழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. படைக்கல ஏற்றுமதியில் சீனா, ஜேர்மனி, உக்ரேன் ஆகிய நாடுகளிடமிருந்து இரசியா கடும் போட்டியை எதிர்நோக்குகின்றது. இரசியாமீது மேற்கு நாடுகள் கொண்டு வந்த பொருளாதாரத் தடையால் இரசியாவின் படைக்கல ஏற்றுமதி ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தது. இரசியாவின் பொருளாதாரம் படைக்கல ஏற்றுமதியிலும் தங்கியிருக்கின்றது. கடந்த 11 ஆண்டுகளில் இரசியாவின் படைக்கல ஏற்றுமதி மூன்று மடங்காக அதிகரித்திருந்தது. 2014-ம் ஆண்டிற்கான இரசியப் படைக்கல ஏற்றுமதி 15.5பில்லியன் டொலர்களாக இருந்தது. தற்போது இரசியாவிடம் 48 பில்லியன் படைக்கல ஏற்றுமதிக்கான உத்தரவு உள்ளது. சரிந்த எரிபொருள் விலை தற்போது ஓரளவிற்கு உறுதியான நிலையை அடைந்தமை இரசியாவிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. 2014-ம் ஆண்டு 5 விழுக்காடு சுருங்கிய இரசியப் பொருளாதாரம் இந்த ஆண்டு 3 விழுக்காடு மட்டும் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விலைவாசி 17 விழுக்காடாக இருக்கின்ற போதும் அதன் அதிகரிப்பு விகிதம் குறைவடைகின்றது. இரசிய ரூபிளின் பெறுமதி டொலருக்கும் யூரோவிற்கும் எதிராக அதிகரிக்கின்றது. இரசியாவின் மைய வங்கி சிறப்பாகச் செயற்பட்டு பொருளாதாரத்தை உறுதிப் படுத்துகின்றது என்பதை மேற்கத்திய பொருளியல் வல்லுனர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

### ◆ சீனாவை நெருங்கும் இரசியா

இரசியாவின் இரண்டாம் உலகப் போர் வெற்றியின் 70வது ஆண்டு நினைவு நாளில் இரசிய அதிபர் விளடிமீர் புட்டீனுக்கு அருகில் சீன அதிபன் சி ஜின்பிங் அமர்ந்திருந்தமை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு வளர்ந்து விட்டது என்பதைக் காட்டுகின்றது. இந்தப் பயணத்தின் போது சீன அதிபர் இரசியாவுடன் 32 இருதரப்பு உடன்படிக்கைகளிள் கையொப்பமிட்டார். ஒரு நாட்டின் இணையவெளிமீது மற்ற நாடு ஊடுருவல் செய்வதில்லை என்பதும் இந்த உடன்படிக்கைகளில் ஒன்றாகும். அத்துடன் இரு நாடுகளும் இணைந்து மத்திய தரைக்கடலில் ஒரு போர் ஒத்திகையையும் நடாத்தின. நாம் ஒன்றுபட்டால் வலுவடைவோம் பிளவு பட்டால் வலுவிழப்போம் என்றார் சீன அதிபர். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை நெருக்கமடையச் செய்வது அமெரிக்காவின் உலக ஆதிக்கம். சீன மக்களிடை எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின் படி சீன மக்கள் பொதுவாக இரசியாவையும் அதன் அதிபரையும் பார்த்து வியக்கிறார்கள். புட்டீன் இரசியாவிற்காகப் பிறந்தவர் என்ற தலைப்பிலான புட்டீனின் வாழ்கை வரலாற்று நூல் சீனாவில் அதிகம் விற்பனையாகின்றது. ஆனால் அவர்கள் அமெரிக்க வாழ்கை முறையை விரும்புகிறார்கள். சீனாவிற்கு தனது பொதுவுடமை ஆட்சியை நிலை நிறுத்த சோவியத் ஒன்றிய ஆதரவு அப்போது தேவைப்பட்டது. சோவியத் ஒன்றியத்திற்கு சீனாவின் உறவு பெரும் புவிசார் அரசியல் வலுவைக் கொடுத்தது. தற்போது அந்த உறவு பொது நலன் சார்ந்ததல்ல. பொது எதிரிக்கானது. இரசியா கிறிமியாவை விழுங்கியது பற்றியோ உக்ரேனைப் பிய்த்துப் பிடுங்குவது பற்றியோ சீனா கவலைப்படப் போவதில்லை. சீனாவின் கிழக்கு மற்றும் தென் சீனக் கடல்களில் ஆதிக்கம் செலுத்துவது இரசியாவைப் பாதிக்கப் போவதுமில்லை. சீனா தனது நாணயத்தை உலக நாணயமாக்கும் திட்டம் இரசியாவிற்கு பெரும் பாதகமாக அமையப் போவதுமில்லை. சீனாவிற்குத் தேவையான எரிபொருள் இரசியாவிடமிருக்கின்றது.

### ◆ ஜோன் ஜெரியின் இரசியப் பயணம்

ஐக்கிய அமெரிக்காவின் வெளியுறவுத் துறைக்குப் பொறுப்பான அரசுச் செயலர் ஜோன் கெரி இரசியாவின் இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியப் படைகளுக்கு எதிரான வெற்றியின் 70வது ஆண்டு நிறைவு நாள் அணிவகுப்பு நடந்து மூன்றாம் நாள் அதாவது மே மாதம் 9-ம் திகதி இரசியாவிற்கு ஒரு பயணத்தை மேற்கொண்டார். இதற்கு முதல் நாள் உலக அரங்கில் இரசியாவைத் தனிமைப்படுத்த அமெரிக்கா முயல்வதாக இரசிய வெளியுறவுத்துறை ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. கெரியின் பயணம் உக்ரேனில் போர் நிறுத்தம், சிரியாவில் அப்பாவி மக்கள் மீது போடுவதாக நம்பப்படும் குளோரின் குண்டுகள், ஈரானுடனான யுரேனியம் பதப்படுத்தல் தொடர்பான பேச்சு வார்த்தை ஆகியவற்றை மையப்படுத்தி அமைந்தது. ஜோன் கெரி இரசிய அதிபர் விளடிமீர் புட்டீனைச் சந்திக்க முன்னர் இரசிய வெளியுறவுத் துறை அமைச்சர் சேர்கி லவ்ரோவுடன் நான்கு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடாத்தினார். இரசியா தனது பத்துப் படையணிகளை உக்ரேன் எல்லைக்கு நகர்த்தி வைத்திருக்கின்றது. அத்துடன் எஸ்.ஏ-22 மற்றும் எஸ்.ஏ-15 ஆகிய விமான எதிர்ப்பு முறைமைகளை உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தினுள் நகர்த்தியுள்ளது. தொடர்ந்தும் உக்ரேன் கிளர்சிக்காரர்களுக்கு பயிற்ச்சி கொடுத்து வருகின்றது. இரசியாவின் இந்த நகர்வுகள் மூலம் அமெரிக்கா குழம்பிப் போயுள்ளது. ஆனால் இரசியாவின் இந்த நடவடிக்கைகள் போர் நிறுத்த உடன்பாட்டை மீறுவதாகும் என்கின்றது அமெரிக்கா. இருதரப்புப் பேச்சு வார்த்தைகளின் போது காத்திரமான எந்த ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை. ஆனால் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக ஒத்துக் கொள்ளப்பட்டது. ஈரானுக்கு இரசியா ஏவுகணை எதிர்ப்பு முறைமையை விற்பது தொடர்பாக ஜோன் கெரி அமெரிக்காவின் ஆட்சேபனையைத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் கெரி அதுபற்றி ஏதும் பேசவில்லை. ஜோன் கெரியின் இரசியப் பயணம் இரசியா மீண்டும் உலக அரங்கில் தனது ஆதிக்கத்தை சோவியத் ஒன்றியக் காலத்திற்கு இணையாக உயர்த்தி வருகின்றது என்பதைக் காட்டுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவும் இரசியா தலைமையிலான சோவியத் ஒன்றியமும் ஹிட்லரின் ஜேர்மனிக்கு எதிராக ஒரு தரப்பில் நின்று போர் செய்தன. அதில் பெற்ற வெற்றியின் பின்னர் இரு நாடுகளும் இரு துருவங்களாகின.

பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா



# மகோற்சவ நிகழ்வுகள்














இலண்டன் டூட்டிங்கில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி பீடம் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவ நிகழ்வுகள் கடந்த 20-04-2015 அன்று ஆரம்பமாகி முதல் 04-05-2015 வரை நடைபெற்றன. நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**MAY 15 FRIDAY**

குமுதினிப் படுகொலை - நினைவு நாள் நிகழ்வுகள்

சிங்களப்படைகளால் கோரமாகக் நிகழ்த்தப்பட்ட குமுதினிப்படகு படுகொலையின் 30வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்.

நேரம்: காலை 11.00 மணி முதல்

இடம்: 02, Salisbury Road, Manor Park, Eastham, London, E12 6AB

**MAY 18 MONDAY**

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள்

முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் ஆறாவது ஆண்டு நினைவேந்தல் கவனயீர்ப்புப் பேரணி மற்றும் பொதுக்கூட்ட நிகழ்வுகள்.

நேரம்: மதியம் 2.00 மணி - பேரணி ஆரம்பம்
மாலை 5.00 மணி - பேரணி நிறைவு

இடம்: பேரணி ஆரம்பம் - Whitehall Place by Northumberland Avenue (WC2N 5AE)
பேரணி நிறைவு - Richmond Terrance (SW1A 2AT)

தொடர்புகளுக்கு : பிரித்தானிய தமிழர் பேரவை

**JUNE 20 SATURDAY**

TRIPURA DIVINE FEMININE

Vani Fine Arts Presents, Tripura Divine Feminine - Bharathanatyam Concert by Bala devi Chandrashekar

நேரம்: மாலை 06.00 மணி முதல்

இடம்: Bhavan Centre, 4A Castletown Road West Kensington, London, W14 9HE

தொடர்புகளுக்கு : 020 7386 0924

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

Email: info@orupaper.com


THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES

Commercial Loans
- Petrol Stations, Social Clubs
- Hotels, Restaurants &
- Takeaways
- Convenience Shops
- Pharmacies, Care Homes,
- Optician, Dentist
- Children Nurseries

Residential Mortgages
- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



Contact:

David Eva
OR
Ernest Sri

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755
Mob: 07803 600 543

Loans can be arranged for leasehold and freehold businesses

Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION

How will a 'YES' make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE

# ஜோன் கெரியின் இலங்கை விஜயம்: அறிக்கைகள் அல்ல, செயலே தேவை



– முத்துக்குமார்

அமெரிக்க அரசுச் செயலர் ஜோன் கெரி தனது இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கின்றார். இவர் இலங்கை வருமுன் இலங்கையின் வெளிநாட்டமைச்சருக்கும் படைத்தளபதிகளுக்கும் இந்து சமுத்திரக் கடலில் தரித்திருந்த இராட்சத விமானம் தாங்கிக் கப்பலை அமெரிக்கப் படையினர் காட்டியிருக்கின்றனர். அவரது பயணத்தின் நோக்கம் ஆட்சிமாற்றத்தைப் பாதுகாப்பதும் தமிழர் எழுச்சியைத் தடுப்பதும்தான். மோடியைப் போலவே அரசாங்கத்திற்குக் கரைச்சல் கொடுக்கவேண்டாம் எனக் கூட்டமைப்பினருக்கு புத்திமதியும் கூறிச் செல்லவும் அவர் தவறவில்லை.

அமெரிக்க இராஜதந்திரிகள் அரசுமுறைப் பயணத்தின்போது கருத்துச் சொல்வதிலும் ஒரு ஒழுங்குமுறை உண்டு. தாம் பயணம் செய்த நாட்டின் செயற்பாடுகளை மெச்சுதல், போதாமைகளைக் கூறுதல், ஆலோசனைகளைக் கூறுதல் என்பதுதான் அந்த ஒழுங்குமுறை. ஜோன் கெரியின் பயணத்திலும் அது பின்பற்றப்பட்டது. அவர் இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் ஜனநாயக மறுசீரமைப்பு முயற்சிகளையும் மெச்சினார். பின்னர் போதாமைகளைக் கூறி சர்வதேச தரத்தில் உள்ளக விசாரணை மேற்கொள்ளுதல், மனிதஉரிமை நிலவரத்தினை முன்னேற்றுதல், அதிகாரப்பகிர்வை வழங்குதல் என ஆலோசனைகளையும் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர் மெச்சிய விடயங்களும் ஆலோசனை கூறிய விடயங்களும்தான் கவனத்தைப் பெறுகின்றன. இவற்றில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

ஜோன் கெரி அவர்கள் முதலில் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது எனக் கூறுகின்றார். இங்கு எது சமாதானம் என்ற ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. சிங்களத் தரப்பிற்கு போரில்லா நிலைமட்டும் சமாதானமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு போரில்லா நிலைமட்டும் சமாதானமல்ல. போரில்லா நிலை, இயல்புநிலையைக் கொண்டுவருதல், அரசியல் தீர்வு ஆகிய மூன்றும் கிடைக்கின்றபோதே சமாதானம் உருவாகும்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை போர் முடிவடைந்துவிட்டது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போர் இன்னோர் வகையில் தொடர்கின்றது என்பதே உண்மை. ஆயுதப் போரின் முடிவின் பின்னரும் கட்டமைப்பு சார் இனப்படுகொலை தொடர்கின்றது. மகிந்தர் அரசாங்கம் மன்னர் ஆட்சிக் காலத்தில் வெற்றியடைந்த மன்னர், தோல்வியடைந்த நாட்டை சூறையாடுவதுபோல் பச்சைச் சூறையாடலில் ஈடுபட்டது. ஆட்சிமாற்றம் வந்த பின்னர் சூறையாடல் நின்றுவிட்டது எனக் கூறமுடியாது. சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பும், சிங்கள வர்த்தகர்களின் ஆக்கிரமிப்பும், சிங்களக் குடியேற்ற முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இயல்பு நிலையைக் கொண்டுவருவதலில் காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரத்திற்கான தீர்வு, இராணுவம் அகலுதல் என்பன உள்ளடங்கும். இவை எவையுமே தீர்க்கப்படவில்லை. காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. முதற்கட்டமாக 1000 ஏக்கர் வலி. வடக்கில் விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் 400 ஏக்கர் வரையே விடுவிக்கப்பட்டுள்ளது. அங்கும் ஏகப்பட்ட இராணுவ கெடுபிடிகள் உண்டு. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதார திட்டங்கள் பெரியளவிற்கு முன்னெடுக்கப்படவில்லை. சம்பூர் மக்கள் நீண்டகாலமாக அகதிமுகாம்களில் வசிக்கின்றனர். அவர்களது காணிகள் விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் எதுவும் நடைபெறவில்லை.

அரசியல் கைதிகள் விடயம் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுபவர்களும் உள்ளனர். இவர்களை விடுவிப்பது கஷ்டமான ஒன்றல்ல. ஒரு அரசியல் தீர்மானம் மூலம் ஒருநாளிலே அனைவரையும் விடுதலை செய்துவிடலாம். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது அவ்வாறான விடுதலை இடம்பெற்றது. ஆட்சியாளர்களுக்கு இது தொடர்பில் பெரிய விருப்பங்கள் இல்லை.

அடுத்தது காணாமல் போனோர் விவகாரம். தங்கள் கணவன்மார்களையும் பிள்ளைகளையும் நேரில் கையளித்த சாட்சியங்கள் பல உண்டு. அவர்கள் தரும் சாட்சியங்களின் அடிப்படையில் உண்மைகளைக் கண்டறிவது கஸ்டமான காரியமல்ல. இங்கு தமது படையினரை குற்றவாளியாக்க அரசாங்கம் தயங்குவதால் பின்னடிக்கின்றது. பெயருக்கு ஆணைக்குழு அமைத்து விசாரிக்கின்றது. அந்த ஆணைக்குழு ஒழுங்காக விசாரணைகளை மேற்கொள்வதில்லை. விசாரணைகளை மேற்கொண்டாலும் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது. வெறும் சிபாரிசுகளைச் செய்யும் அதிகாரம் மட்டுமே உண்டு. சிங்கள உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஆணைக்குழு ஒழுங்கான சிபார்சுகளை முன்வைப்பதுமில்லை. முன்வைத்த சிபார்சுகளை அரசாங்கம் கணக்கெடுப்பதுமில்லை. இந்த ஆணைக்குழுக்கள் எல்லாம் சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்கு மட்டும்தான்.

இராணுவத்தை அகற்றும் விடயத்திலும் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. இராணுவம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்துகொண்டுதான் இருக்கின்றது. ஹோட்டல் நடத்துதல், மக்களின் நிலங்களில் விவசாயம் செய்தல், பண்ணைகளை நடத்துதல் என எவற்றையும் இதுவரை விட்டுவிடவில்லை.

மூன்றாவது அரசியல் தீர்வு விவகாரம். இது விடயத்தில் விருப்பத்திற்கான சைகை எவற்றையும் ஆட்சியாளர்கள் காட்டவில்லை. அமெரிக்க தலைமையிலான மேற்குலகமும், இந்தியாவும்கூட அழுத்தங்கள் எவற்றையும் கொடுக்கவில்லை. இந்தியா தமிழ் மக்களின் அபிலாசைகளை எந்தவகையிலும் தீர்க்காத 13 ஆவது திருத்தத்தையே அரசியல் தீர்வாக முன்வைப்பதில் முனைப்புக்காட்டி வருகின்றது. மேற்குலகமும் அதற்கு ஒத்தூதுகின்றது. வடமாகாண சபை தந்த அனுபவத்தை பரிசீலித்துப் பார்ப்பதற்குக் கூட இந்தச் சக்திகள் தயாராக இல்லை.

இந்நிலையில் சமாதானம் வந்துவிட்டது என ஜோன் கெரி தெரிவிக்கும் கருத்து மிகைப்படுத்தப்பட்ட கருத்தேயாகும். சமாதானம் வந்துவிட்டது. அது முதிர்ச்சியடைய வேண்டும் என ஜோன் கெரி கூறியிருக்கின்றார். கட்டமைப்பு சார் இனப்படுகொலைகள் நிறுத்தப்பட்டு, இயல்புநிலையினைக் கொண்டுவருதல் விவகாரமும் தீர்க்கப்பட்டு, அரசியல் தீர்வு தொடர்பாக இடைக்காலத் தீர்வு ஒன்றினையும் வழங்கியிருந்தால் ஜோன் கெரி கூறிய கருத்தில் உண்மை இருந்திருக்கும். வெறுமனவே சில ஏக்கர் காணிகள் விடுவித்ததையும், ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டதையும் வைத்துக் கொண்டு சமாதானம் வந்துவிட்டது எனக் கூறுவதை ஏற்கமுடியாது. ஜனாதிபதி செயலணிகள் தொடர்பாக நிறையவே அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. தவிர சந்திரிகா தலைமையிலான ஜனாதிபதி செயலணி இதுவரை எதனைச் செய்துள்ளது என்றால் எதுவுமே இல்லை.

மக்கள் எந்தப் பகுதிக்கும் சென்று வரக் கூடிய நிலை உள்ளது என ஜோன் கெரி கூறுகின்றார். மக்கள் சம்பூருக்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் செல்ல விரும்புகின்றனர். ஜோன் கெரி கொண்டுபோய் விடுவாரா? பெரிய பூசணிக்காயை சோற்றில் மறைக்க ஜோன் கெரி முற்படுகின்றார்.

ஜோன் கெரியின் கருத்துக்களில் மிகவும் அபத்தமான விடயம் சர்வதேச தரத்தில் நம்பத் தகுந்த உள்ளக விசாரணை வேண்டும் எனக் கூறப்பட்ட கருத்தாகும். இது சர்வதேச விசாரணை வேண்டும் என்ற தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாட்டினை சமாதானம் செய்வதற்கு கூறப்பட்ட கருத்தாகவே இருக்கலாம்.

உள்ளக விசாரணை என்பது குற்றவாளியே நீதிபதியாகின்ற நிலையைக் குறிக்கின்றது. நீதியான உள்ளக விசாரணை ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. தனது படையினரையே குற்றவாளியாக்க இந்த அரசாங்கம் ஒருபோதும் முன்வரப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு இதில் எந்தவித நம்பிக்கையும் கிடையாது.

**இயல்பு நிலையைக் கொண்டுவருவதில் காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரத்திற்கான தீர்வு, இராணுவம் அகலுதல் என்பன உள்ளடங்கும். இவை எவையுமே தீர்க்கப்படவில்லை. காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.**

இனப்படுகொலைகளுக்கு, உள்ளக விசாரணை, அரசியல் தீர்விற்கு உள்ளக முயற்சிகள் என்பதெல்லாம் இலங்கைக்குள்ளேயே விவகாரத்தை முடக்கும் செயற்பாடுகள். சர்வதேச சமூகம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்கும் செயற்பாடுகளே இவை. தமிழ் மக்களுக்கு இவற்றில் நம்பிக்கை எதுவும் கிடையாது. அவர்கள் இவற்றை அனுமதிக்கவும் போவதில்லை.

சமாதானம் என்பது நல்லிணக்கம், சகல இனங்களையும் சமமாக நடாத்துதல், சம உரிமை வழங்குதல், ஒடுக்குமுறை இன்மை என்பவற்றில் தங்கியுள்ளது என ஜோன் கெரி குறிப்பிடுகின்றார். காணாமல் போனோர் விவகாரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் ஐ.நாவுடனும் இணைந்து செயற்படவேண்டும் என்கிறார். நல்லிணக்கத்திற்கு நீதியும் பதிலளிக்கும் கடமையும் அவசியம் என்கிறார். இவையெல்லாம் வரவேற்கப்படக் கூடிய கருத்துக்கள். ஆனால் இவற்றை அடைவதற்கான வரைபடம் என்ன? இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பங்கு என்ன?

தமிழ் மக்களுக்குவெறும் அறிக்கைகள் தற்போது தேவையில்லை. செயல்களே தேவை.

*நன்றி : பொங்குதமிழ் இணையம்*




# பிரித்தானியப் பொதுத் தேர்தலும் நாமும்

**பாகம் 173**

ஐக்கிய இராச்சியத்தில் நடந்த பொதுத் தேர்தலில் பழமை வாதிகளான கன்சவேட்டிவ் கட்சி வெற்றியடைந்து தனது ஆட்சியைத் தக்க வைத்திருக்கிறது. மொத்த 650 ஆசனங்களில் கன்சவேட்டிவ் கட்சி மூன்றிலிரண்டு பங்கு பெற்று அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றியடையாவிட்டாலும் சென்ற முறையைவிட 24 ஆசனங்களை மேலதிகமாகப் பெற்று ஆட்சியமைத்திருக்கிறது. தொழிற் கட்சியோ தன்னிடமிருந்த 26 ஆசனங்களை இழந்திருக்கிறது. ஒரு தொங்கு பாராளுமன்றமே உருவாகும் என்றிருந்த எதிர்பார்ப்பு மாறி போதிய ஆசனங்களுடன் தனித்த பெரும்பான்மையினராக பழமை வாதிகள் உருவெடுத்திருக்கிறார்கள். இங்கு முக்கியமாக நாம் கருத்திலெடுக்க வேண்டிய விடயம் இந்தத் தேர்தலில் தமிழர்களாகிய நாம் எடுத்த நிலைப்பாடுதான்.

பிரதமர் டேவிட் கமரூன் பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் பங்குபெற, எமது வேண்டுதல்களையும் பொருட்படுத்தாது இலங்கைக்குச் சென்றதால் எம்மில் பலர் கன்சவேட்டிவ் கட்சியுடன் மனத்தாங்கல் கொண்டவர்களாயிருந்தது உண்மை. மேலும் பழமை வாதம் தழுவாத சற்று இடதுசாரிப் போக்கைக் கொண்ட தொழிற் கட்சியுடன் இயல்பாகவே எம்மில் பலர் நட்புறவுடனும், ஆதரவாகவும் இருந்ததால் பெரும்பாலான தமிழர்களின் ஆதரவு தொழிற் கட்சிக்கே இருந்தது. இலங்கை சென்ற பிரித்தானியப் பிரதமர் யாழ்ப்பாணம் வரை சென்றதையும், தமிழர்களின் நலன்களில் அக்கறை செலுத்தியதையும் நாம் அதிகம் கணக்கிலெடுக்கவில்லை. அதனால் நமது ஆதரவு அதிகமில்லாத கட்சியே ஆட்சியில் மீண்டும் அமர்ந்திருக்கிறது.

நாம் எவ்வளவுதான் இங்கு புலம்பெயர் அரசியல் செய்தாலும் சரியான ஸ்தாபனப் படுத்தலின்றியே நாம் வாழும் நாட்டின் அரசியல் விவகாரங்களில் பங்கெடுக்கிறோம். ஈழத்தமிழ் மக்களுக்கான ஒருங்கிணைந்த தலைமைத்துவம் இதுவரை இங்கு உருவாக்கப்படாததால் இங்குள்ள பெரிய கட்சிகளுடனான எங்கள் தொடர்புகள் தனிமனிதத் தொடர்புகளாகவேயுள்ளன. இனி வரும் காலங்களில் இந்த நிலைமையை மாற்றி, புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களுக்கென உறுதியானவோர் ஸ்தாபனமும் தலைமைத்துவமும் உருவாக்கப்படுமாயின், அதனூடாக ஆட்சியமைக்கக்கூடிய கட்சிகளின் ஆதரவை நாம் எமது நலன்களுக்காகப் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக நமது தாயக அரசியலில் பெரும் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய ஐக்கிய இராச்சிய அரசின் கரிசனை எம்மீது எப்போதும் இருக்கக் கூடியவாறு பார்த்துக்கொள்வதே முக்கிய குறிக்கோளாயிருத்தல் வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக அதற்கான அடித்தளங்கள் நமது புலம்பெயர் அரசியலில் போடப்படவில்லை. தனிநபர் அரசியலாகவே போய்க்கொண்டிருக்கிறது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் நம்மவர்கள் பலர் போட்டியிட்டு நமது பொன்னான வாக்குகளை வீணாக்கியிருக்கிறார்கள். நம்மிடையே ஒன்றிணைந்த செயற்பாடு காணப்படாததால் நம்மில் ஒருவரைக்கூட எமது வாக்குகளைப் பிரயோகித்துத் தெரிவு செய்ய முடியவில்லை. லண்டனில் பரவலாகக் கலைந்து வாழும் நாம் இத்தகைய தேர்தல்களில் ஏனைய இனத்தவர்களின் ஆதரவின்றித் தனியே எமது வாக்குகளை மட்டும் நம்பி பொதுத் தேர்தல்களில் பங்கெடுக்க முடியாது. அப்படி ஏனைய இனத்தினரிடம் போதிய செல்வாக்கு இல்லாத பலர் இந்தத் தேர்தலில் போட்டியிட்டு மண் கவ்வியதன் மூலம் முழுத் தமிழினமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைவிட, நாம் கட்சி சாராது நின்று நமது வாக்குகளை உரிய முறையில் பிரயோகித்திருந்தால், தற்போதுள்ள ஆளும் கட்சியின் முகச்சுழிப்பைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் நாமோ வெளிப்படையாகக் கட்சிகளை ஆதரித்து வீணான வெறுப்பைச் சம்பாதித்திருக்கிறோம்.

'நாய்க் கேன் போர்த் தேங்காய்' என்பார்கள். அது போலத்தான் பிரித்தானிய அரசியலில் நமது நிலையும் வந்திருக்கிறது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல நம்மில் சிலரும் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆசைப்பட்டு, வீண் முயற்சியிலிறங்கி தோற்றுப் போய் விட்டார்கள். உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்கெடுப்பது வேறு விடயம். அதனால் பலரும் கவுன்சிலர்களாகவும், மேயர்களாகவும் வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பெரிய தொகுதியில் எவ்வித மக்கள் செல்வாக்குமின்றி தேர்தலில் நிற்பது தமிழர்களுக்கு தற்போதைக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. இதுவரை ஒரு தமிழர் பிரித்தானியப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை. நமது மக்களின் பரவல் அதற்கு உகந்ததாயில்லை. கனடா போன்ற நாடுகளில் ஒரு சில தமிழர்கள் தெரிவாகியிருந்தாலும் ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரை இது முயற்கொம்பாகவே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் எமது இளஞ் சந்ததி தீவிர அரசியலில் ஈடுபாடுகாட்டி பல்லின ஆதரவையும் பெற்றுக்கொண்டாலன்றி எமது அரசியல் பங்களிப்பு இங்கு பூச்சியமாகவேயிருக்கும். அதற்கேற்ற வகையில் எமது தமிழர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலில் நாமும் செல்வாக்குச் செலுத்தத் தக்கதாக எமது பலத்தை விருத்தி செய்ய வேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே..' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க எதிர்காலத்தில் தமிழர்களாகிய நாம் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

## அம்மாவின் மீள் வருகை

தமிழ்நாட்டில் புரட்சித்தலைவி ஜெயலலிதா மீண்டும் ஆட்சிபீடமேறுவது மகிழ்ச்சி தரும் விடயமாகவே தென்படுகிறது. ஏன்ன இருந்தாலும், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகப் பல தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றி இந்திய மத்திய அரசைச் சங்கடத்தில் ஆழ்த்தியவர். ஒரு காலத்தில் நிலைமை சாதகமாயில்லாதிருந்த போது, உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சென்ற ஈழத் தமிழறிஞர்களைத் திருப்பியனுப்பியது போன்ற பல அநியாயங்களைச் செய்திருந்தாலும், பின்னர் நிலைமையைப் புரிந்து கொண்டு எமக்குச் சாதகமாகத் திரும்பிச் செயற்பட்ட ஜெயலலிதா அவர்களின் மீள்வருகையை மகிழ்வோடு வரவேற்க வேண்டியது ஈழத்தமிழர்களாகிய எமது கடமையாகும்.

ஈழத்தில் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும் எமது இருப்பை உறுதிசெய்யவும் எமக்கான அரசியற் தீர்வைப் பெற்றுத்தர இந்திய மத்திய அரசை இடித்துத் தூண்டவும் ஜெயலலிதா போன்ற உறுதிமிக்க தலைவர்களே எமக்குத் துணை நிற்க முடியும். எமது உறவுகள் கொத்துக் கொத்தாகக் குண்டடிபட்டு அழிந்து கொண்டிருந்தபோது, காலைச்சாப்பாட்டிற்கும் மத்தியானச் சாப்பாட்டிற்கு மிடையில் வெறும் பழ ஜூஸை மட்டும் பருகிக்கொண்டு உண்ணாவிரத நாடகமாடிய சிறந்த குடும்பத் தலைவர் (அவர் அரசியற் தலைவரல்ல) எமக்கு ஒரு போதும் உதவப் போவதில்லை.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டிய கண்ணகி அம்மன் சிலையை நடுத்தெருவுக்குக் கொண்டுவந்து இழிவு படுத்திய ஐயாவின் ஆட்சிக்கும், வாய் ஜாலங்களுக்கும் ஓர் முற்றுப் புள்ளிவைத்து வாரிசு அரசியலை அடியோடு துடைத்தெறிந்து விடுவதற்கு ஜெயலலிதா போன்ற தலைவர்களே இன்று தமிழினத்துக்குத் தேவை. இந்திய மத்திய அரசிலும் தமிழ்நாட்டு அரசிலும் வாரிசு அரசியலுக்கு வைக்கப்பட்ட முற்றுப்புள்ளியே, இலங்கையிலும் குடும்ப அரசியல் தூக்கியெறியப்பட்டதற்குத் தூண்டு கோலானது என்பதை மறுக்க முடியாது.

தலைவி ஜெயலலிதாவின் விடுதலையோடு சுப்பிரமணியம் சாமி போன்ற ஈழத்தமிழர்களின் பகைவர்களும் மூக்குடைபட்டு முடங்கி விடுவார்கள். ஆயிரம் செல்வாக்கை அவர் மத்திய அரசுடன் வைத்திருந்தாலும் மக்கள் செல்வாக்கில்லாத அவரைப் போன்றவர்களால் எமக்கு இழைக்கப்படக்கூடிய துன்ப துயரங்கள் ஜெயலலிதாவின் மீள் வருகையால் நிச்சயம் தோற்கடிக்கப்படும். தலைவி ஜெயலலிதாவைச் சிறையில் தள்ள முழு முயற்சியெடுத்த சுப்பிரமணியம் சாமி இனிப் பொது வாழ்விலோ அரசியலிலோ தலையெடுப்பதென்பது முடியாத காரியம். தலைவி ஜெயலலிதா இனிவரும் காலங்களில் சுய நிதானத்தோடு மக்கள் தலைவியாக கறைபடியாப் புகழோடு தமிழினத்துக்குத் தனது சேவையை ஆற்றவேண்டுமென்று அன்புடன் வேண்டி வாழ்த்துவோம்.

## இறக்குமதியாகும் பிராமணியம்

இலங்கையில் இந்து பௌத்த புரிந்துணர்வை மேம்படுத்த இந்தியாவிலிருந்து பிராமணியச் சனாதனம் இறக்குமதியாக விருக்கிறது. இதன்படி, தற்போதைய ஜெயலலிதா அரசுக்கு எட்டிக் கனியாக (கசப்பாக) உள்ளவரும், நிலுவையில் தன்பங்கில் ஒரு கொலைக் குற்றச்சாட்டுக்கு முகம் கொடுப்பவருமான காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதியே இலங்கை வரவிருக்கிறார்.

உண்மையில், இந்து பௌத்த புரிந்துணர்விலும் தமிழ் சிங்கள புரிந்துணர்வே முக்கியமானதாக இருக்கிறது. அது சரிவருமானால் பௌத்தர்களுடனான இந்துக்களின் நட்புணர்வு தானாகவே வளர்ச்சியடைந்துவிடும். இன்னும் விளக்கமாகக் கூறுவதானால்: இலங்கையில் இந்துக் கடவுளர்கள் இல்லாத பௌத்த வீடுகளுமில்லை, புத்தர் சிலையில்லாத இந்து வீடுகளுமில்லை. நிலைமை இப்படியிருக்க எதற்காக இந்த அரசியல் ஸ்ரண்ட் (சாகஸம்) என்று தெரியவில்லை.

**எதிர்காலத்தில் எமது இளஞ் சந்ததி தீவிர அரசியலில் ஈடுபாடுகாட்டி பல்லின ஆதரவையும் பெற்றுக்கொண்டாலன்றி எமது அரசியல் பங்களிப்பு இங்கு பூச்சியமாகவேயிருக்கும். அதற்கேற்ற வகையில் எமது தமிழர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலில் நாமும் செல்வாக்குச் செலுத்தத் தக்கதாக எமது பலத்தை விருத்தி செய்ய வேண்டும்.**

அரசியல் தீர்வென்னும் அவலைப் பற்றிக் கவலைப்படாமல் இத்தகைய சாகஸங்கள் மூலம் தமிழ் மக்களின் அரசியலுணர்வைத் திசைதிருப்பி அவர்களது அதிகாரப் பகிர்விற்கான வேட்கையை அடக்கி வைக்க வழிபார்க்கிறார்கள் போலத்தெரிகிறது.

மகான் இராமக் கிருஷ்ண பரமஹம்சரின் வழிவந்த, சுவாமி விவேகானந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட இராமக் கிருஷ்ண சங்கம் உட்பட பல சமரச சன்மார்க்க நெறிகளைப் பரப்பும் ஸ்தாபனங்கள் இலங்கையில் வெற்றிகரமாக இயங்குகின்றன. இந்துக் கோயில்களில் குருமார்கள் கடமையுணர்வோடு பூஜை வழிபாடுகளை நடத்துகிறார்கள். இந்த ஆள் வந்து எதைச் செய்யப் போகிறார் அல்லது சொல்லப் போகிறாரென்று தெரியவில்லை.

திராவிட பாரம்பரியத்தின் செல்வாக்கிற்குள் இருக்கும் தமிழக மக்களின் அரசியற் போக்கிலிருந்து எம்மை அன்னியப்படுத்தி, தமிழ் இந்து கிறிஸ்தவ புரிந்துணர்வை இல்லாது செய்து, இந்தத்துவாக் கொட்பாடுகளை ஆதரிக்கும் வட இந்திய இந்திய மக்களிடம் செல்வாக்கைப் பெற்று எமது தாயக, தமிழுணர்வுகளை மழுங்கடிக்கத் திட்டமிடுகிறார்களோ தெரியவில்லை.

*தொடருவம்..*

கருத்துக்களுக்கு **www.facebook.com/orupaper**

TrainingConnect
For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013
Home Office Approved Test | City & Guilds Approved Centre
Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

City & Guilds Approved Centre
OUR 100% COMMITMENT
We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT
0207 099 2400
694-712 London Road, Hounslow, TW3 1PG
contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

வெகுவிரைவில் தரணியெங்கும்...

# தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |

| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |

| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |

| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |

| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |

மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : 020 7043 4316

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# மஹிந்தவின் ஆட்சியில் தொலைந்தோரை மைத்திரியின் ஆட்சியிலும் தேடும் தாய்மார்



**ஜெரா**

“மயூரன், 85 ஆம் ஆண்டு, 6 ஆம் மாசம் 21 ஆம் திகதி பிறந்தவன். ஏழாம் ஆண்டோட பள்ளிக்கூடம் போகாமல் விட்டிட்டான். அவனுக்குப் படிக்கப் பிடிக்காமல் போயிற்று”, என்று தன் மகன் பற்றிய அறிமுகத்தைத் தருகின்றார் ரவீந்திரன் றோஸ்மலர் என்கிற 50 வயதுத் தாய்.

தம் பிள்ளைகளைத் தொலைத்துவிட்டு தேடி அலையும் அம்மாக்களில் றோஸ்மலர் ரவீந்திரனும் ஒருவர். இந்தப் பதிவுக்கான கதை தொடங்கும்போது அவர் பிரதேச வைத்திய சாலை ஒன்றின் நோயாளர் பிரிவில், நீண்ட வரிசையின் கடைசி நுனியில் இருக்கிறார். எதேச்சையாகச் சந்தித்துக்கொண்ட இடத்தில்தான் தன் மகன் பற்றிய பேச்சைத் தொடங்கினார். வரிசையும் மெல்ல மெல்ல நகர அவரது மகன் பற்றியகதையும் நகர்ந்தது.

“சரி படிக்காட்டிலும், தொழில் ஏதும் தெரிஞ்சி கொள்ளட்டும் எண்டு மெக்கானிக் கராச் ஒண்டில வேலை பழகச் சேர்த்துவிட்டன். கொஞ்ச நாளையில அதுவும் பிடிக்கேல்ல எண்டு வீட்டுக்கு வந்திட்டான். வந்ததும், தான் தையல் பழகப் போறதாக சொன்னான். சரியெண்டு தையல் பழக அனுப்பினன்”.

அதற்குப் பிறகு சற்று அமைதி காக்கிறார் றோஸ்மலர் அம்மா. அங்குமிங்கும் பார்க்கிறார். அருகில் இருப்பவர்கள் மீது நம்பிக்கை தெரிவதை அவரின் கண்கள் நிதானித்துக் கொள்கின்றன.

“இயக்கத்துக்குப் போயிற்றான். அப்ப அவனுக்குப் பதின் மூன்று வயசுதான். பிறகு நானும், அப்பாவும் போய் கதைச்சி வயசு குறை வெண்டு சொல்லி, பணிஸ்மெண்ட் குடுத்து வீட்டுக்கு அனுப்பீட்டாங்கள். கொஞ்ச நாள் வீட்டில தான் இருந்தவன். கடற்தொழிலுக்குப் போனவன். அதுக்கிடையில ஒரு காதல் வந்திற்று அவருக்கு”.

பேசிக்கொண்டிருந்தவரின் கண்கள் கொஞ்சம் பிரகாசிக்கின்றன. தன் மகனின் காதல் பற்றிக்கதைக்கத் தொடங்குகையில் தன் பால்ய காலத்துக்குத் திரும்பிவிடுவாரோ என்று சந்தேகிக்கும் நொடியில், அவர் மகனின் உலகத்துக்குள்ளேயே பேசத் தொடங்குகின்றார்.

“இப்பிடியே இருக்கேக்குள்ளதான் சண்டையும் வந்தது. அப்ப பிள்ளையள் எல்லாரையும் இயக்கத்துக்குக் கூப்பிட்டுச்சினம். நானும் பயத்தில மயூரன் காதலிச்ச பிள்ளையின்ர வீட்டுக்காரரும் கதைச்சி, கலியாணத்தக் கட்டி வச்சம். சண்டை எங்கட ஊருக்கு வரேக்க மகன் ஒரு குழந்தைக்கு அப்பாவாக இருந்தான்”.

“சண்ட முடிஞ்சதும், வவுனியா முகாமுக்குப் போனம். ஓமந்தையில மகனக் கூட்டிக் கொண்டு போய் ஆமிக்காரர் விசாரிச்சவ. படமும் எடுத்தவையாம். பிறகு விட்டிட்டினம். நாங்கள் முகாமுக்குப் போனதும், அங்க வந்து பிடிச்சிக்கொண்டு போயிற்றாங்கள். முதல் நெளுக்குளத்தில வச்சிருந்தவ. பிறகு, வெலிக்கந்தவில வச்சிருந்திட்டு, விடுறத்துக்கு 15 நாளைக்கு முதல் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில கொண்டுவந்து வச்சிருந்தவ. 2010,11 ஆம் மாசம், 17 ஆம் திகதி விட்டவ”.

அவர் இருந்த வரிசை நகர்கிறது. எழுந்து இடம்மாறச் சொல்கின்றனர் அயலவர்கள். பேச்சை அப்படியே நிறுத்திக்கொண்டு அடுத்த வரிசைக்கு மாறுகின்றார். தொடர்கிறது பேச்சு,

“2010 இல உறவிணைப்பின் மூலமா மருமகளின்ர அம்மாக்கள் இருந்த கதிர்காமம் முகாமுக்கு போனம். அங்கயிருந்து வெளியிடங்களுக்கு வேலைக்குப் போகக்கூடியதாயிருந்தது. நாங்களும், மயூரனையும் கூட்டிக் கொண்டு, பூநகரிக்கு வயல் வேலைக்குப் போனம். அங்க தங்கி நிண்டு அரிவுவெட்டுறது தான் வேலை. கொஞ்சக் காலம் அங்கயே தங்கி நிண்டு வேலைசெய்தம். ஒரு கட்டத்தில அரிவு வெட்டு வேலைகளும் குறைஞ்சிட்டு. மயூரன் தான் கிளிநொச்சி பக்கம் போய், சாப்பாட்டுக் கடை ஏதும் பாத்து வேலைக்குப் போகப் போறதா சொன்னான். எங்கட சொந்தக்காரப் பெடியன் ஒருத்தன், தான் முதல் வேலைசெய்த கடைக்குக் கூட்டிக்கொண்டுபோய், கேட்டு விடுறன் எண்டு சொன்னான். ஆனால் எனக்கு மகன் சாப்பாட்டுக்கடைக்கு வேலைக்குப் போறது பிடிக்கேல்ல. வேறவழியும் இருக்கேல்ல. வயல் வேலையும் குறைஞ்சதால அது நல்லாதாப்பட்டுது. போகச் சொன்னன். 2011 ஆம் ஆண்டு 2 ஆம் மாசம் 28 ஆம் திகதிதான் போனவன்.

“மகனக் கிளிநொச்சிக்கு வேலைக்குக் கூட்டிக்கொண்டு போன பெடியன் பிறகு வந்து சொன்னது, சாப்பாட்டுக் கடைக்காரர், மயூரன் வேலை செய்யிறத பாத்துத்தான் சம்பளம் குடுப்பம் எண்டிட்டாங்கள். அதால மயூரன் அங்க வேலைக்குப்போகேல்ல. முகாமுக்குப்போறான் எண்டு வந்து எங்களிட்ட சொன்னது.

“முகாமுக்குப் போனவன் போன் எடுப்பான் தானே எண்டு காத்திருந்தன். ஆனால் எடுக்கேல்ல. இரவு 7 மணி போல எடுத்துப் பாத்தன், மகனின்ர போன் வேலை செய்யேல்ல. மருமகளுக்கு எடுத்துக்கேட்டால், இங்க வரேல்ல எண்டுறா. அடுத்தநாள் அப்பா, முகாமுக்குப் போய்தேடினவர். செட்டிகுளத்தில பொலிஸிட்ட பதியப் போக, கிளிநொச்சி பொலிஸ்ல பதிய சொல்லி அனுப்பிற்றாங்கள். அங்க பதிவெடுத்துப் போட்டு, மகன் தங்களிட்ட வந்தால் உங்களிட்ட ஒப்படைக்கிறோம் எண்டு சொல்லி அனுப்பீட்டினம். அதுக்குப் பிறகு செஞ்சிலுவை சங்கம், மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்று நிறைய இடங்களில் பதிஞ்சம், எல்லா இடமும் தேடினம். ஆமிக்காரர், சீ.ஐ.டிக்காரர், விசாரைணக்குழு எண்டு கனபேரிட்ட போனன். எல்லாரும் பதிவெடுத்தவ. மகன் ஒரு இடமும் இல்ல”.

இவ்வாறான பேச்சுக்களுக்கிடையில் இயல்பாக எழும் அமைதி இங்கேயும் நிகழ்கிறது. ஆனாலும் பலதரப்பட்ட மனிதர்கள் அடங்கிய வரிசை சலசலப்போடு நகர்கின்றது. அந்த வரிசையினடத்து, இந்த மாதிரியான பேச்சுக்களின் அமைதியின் பெறுமதியை தரிசிக்கவியலாதுதான். ஏனெனில் இந்த நிலத்தில் எல்லா துயரங்களும், கண்ணீரும் அவசரத்தில் கரைந்துபோகின்றன. விரைவாகவே மயூரனின் அம்மா முதல் இருக்கை வரிசைக்குத் தாவிவிடுகின்றார். ஆனால் இந்தத் துயரக் கதை இன்னமும் நகரவேண்டியிருக்கிறது.

“தேடிக் களைச்சிப் போனன். அவரும் படுக்கையில் விழுந்திட்டார். எழும்பி நடக்க முடியாத நிலைக்கு வந்திட்டார். எனக்கும் வருத்தங்கள். 2015 இல,” ஆம் மாசம் 21 ஆம் திகதி இப்ப மீன் யாவாரம் செய்யிற சில பேர் மயூரன கண்டதாக வந்து சொல்லிச்சினம். முல்லைத்தீவுமாஞ்சோலை ஆஸ்பத்திரியில மயூரன கண்டிருக்கினம். வேற ஒருத்தர் மயூரனக் கூட்டிக்கொண்டு வந்திருந்தவராம். இன்னொராள் சொன்னது, மயூரன நடுவில விட்டு முன்னும் பின்னுமா ரெண்டுபேர் கூட்டிக்கொண்டு போனதெண்டு. ஒருத்தர் சொல்றார் கூட்டிக் கொண்டந்தவர் முக்கால் ஜம்பர் போட்டிருந்தவராம். இன்னொருத்தர் சொல்றார் கறுத்த ஜீன்ஸ் போட்டிருந்தவராம். மயூரன் ஊத்த சரமும், சேட்டும் போட்டிருந்ததாம்.

நான் கேட்டன் நீங்கள், யாரும் மயூரனோட கதைக்கேல்லயோ எண்டு. தாங்கள் மெடிக்கல் எடுக்க போனதாம். ஆந்த அவசரத்தில கதைக்கேல்ல எண்டு ஒருத்தன் சொன்னான். இன்னொருத்தன் தான் கதைச்சதாகவும், தான் யூறின் டெஸ்ட் பண்ண வந்ததாம். தடுப்பில இருந்து தன்னை விட்டிட்டு, திரும்ப பிடிச்சிட்டினம் எண்டு சொன்னதாம். தாங்கள் கதைச்சிக் கொண்டு நிக்க, மயூரனோட வந்திருந்தவர் உடன பக்கத்த வந்து நிண்டிட்டாராம். அவர் தமிழரோ, சிங்களவரோ எண்டு தெரியாதாம்”

**இவ்வாறு மஹிந்தவின் ஆட்சியில் தொலைத்த தமது குழந்தைகளை நூற்றுக்கணக்கான தாய்மார் இன்னமும் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஆட்சி மாற்றம் ‘நல்லாட்சி’ ஐ.நா விசாரணை ‘புனர்வாழ்வு’ மீள்குடியேற்றம் என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களே!**

“இவங்களும் கண்டபடி மாறி மாறி கதைக்கிறாங்கள். இதுவும் உண்மைபொய் தெரியேல்ல. இவங்கட கதையைக் கேட்டுத்தான் கிளிநொச்சி ஆர்ப்பாட்டத்தில சொன்னனான்”.

றோஸ்மலர் அம்மாவின் பேச்சு முடிகிறது. மருத்துவரிடம் எழுந்து சென்றுவிடுகிறார். அவர் உள்நுழைந்த அறைக்கதவும் மூடிக் கொள்கிறது. அவர் இருந்த இடத்தை இன்னொரு அம்மா சட்டென நிரப்பிக்கொள்கிறார். அவரிலும் நோய் படர்நிலை ஆழமாகவே தென்படுகிறது. அவரிடம் என்ன கதை இருக்கிறதோ?!

இவ்வாறு மஹிந்தவின் ஆட்சியில் தொலைத்த தமது குழந்தைகளை நூற்றுக்கணக்கான தாய்மார் இன்னமும் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் ஆட்சி மாற்றம் ‘நல்லாட்சி’ ஐ.நா விசாரணை‘புனர்வாழ்வு’.மீள்குடியேற்றம் என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களே!

*நன்றி: கொழும்பு மிரர்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# கோடையிலே கீரிமலை



வைகாசி மாதம் ஊர் சுட்டெரிக்கும் வெயிலைக் காணும் காலம். புளுதி பறக்க வீதிகளில் வாகனங்கள் போவதும் வருவதுமாக இருக்கும் எங்கள் ஊர். குடை-தொப்பி-தலைப்பாகை - சால்வைத் துண்டு என்று தலைக்கு நிழல் கொடுக்கும் அணியோடு தான் வெளியில் நடமாட முடியும். இல்லையேல் வெயில் தாக்கத்தில் மண்டை பிளக்கும். காலுக்கு செருப்பு இல்லாவிட்டால் வீடு வந்ததும் காலில் கொப்பளங்களைத் தான் காண முடியும். வியர்வை வடிய, சைக்கிள் உழக்கி, கூடித் திரிந்த அந்தக் காலம். சாரம் அல்லது ஒரு முழம் அல்லது சேட் என்று சாதாரண உடைகள் தான். ஆனாலும் புளுக்கத்தில் உடம்பு துடிக்கும். ஆலமரம், வேப்பமரம் என்று வீதியோர மரங்களில் ஆறி நிற்க, உடலைத் தழுவி காற்று ஓட வரும் சுகம், இந்தக் கோடையில் ஒரு அலாதி தான்.

தெல்லிப்பளையைச் சார்ந்த கொல்லங்கலட்டி வீதி தான் எங்கள் வீட்டு பிரதான வீதி 768 பஸ் பாதை யாழ்ப்பாணத்திலிருந்து கே.கே.எஸ். வீதி வழியாக வந்து கந்தரோடை மாகியப்பிட்டி, அளவெட்டி, அம்பனை வயல்கள் தோட்டங்களைத் தாண்டி வந்து கீரிமலைக்கு ஆட்களைச் சுமந்து ஆரவாரத்துடன் கோடையில் ஓடித் திரிவதிலும் அந்த பஸ்க்கு ஒரு குஷி தான். அம்பனை வழி, பன்னாலையை ஊடறுத்துச் செல்லும் பஸ் சேவையும், கீரிமலைக்கு உண்டு. கோடை வந்தால், சைக்கிள், கார், பஸ், வண்டில் என்று சாரி சாரியாக கீரிமலையை நோக்கி போவதற்கு குறுக்குப் பாதை கொல்லங்கலட்டி, மடத்தடியால் போவது இன்னும் கிட்ட. தச்சன் காட்டு சந்தியில் இடப்புறம் திரும்பி, ஏற்றத்தில் சைக்கிள் உழக்குவது ஒரு பெரிய சவால். முன்புறம் டபிள் இருந்து வருபவர் எம்பிக் குதித்து பரல் போட்டால் தான் நாரிப் பிடிப்பு இல்லாமல் கீரிமலைக்கு ஏற்றத்தைத் தாண்டி சைக்கிளில் போகலாம்.

வீதியில் பொடியள் பட்டாளம் சனி, ஞாயிறு என்டால் போடும் ஆரவாரத்தில் ஊர் கலகலக்கும். வீட்டிலிருக்க அந்தச் சத்தம் கேட்கும். திரும்பும் போது கூவில் கள்ளு உசார் கொடுக்க பாட்டும் ஆட்டமுமாக போவது வழமை. தம்பித்துரை அண்ணை கடைக்குப் போய் மேலும் உசார் ஏற்றி வருவோரையும் வளவுத் தென்னைக்கு தண்ணீர் இறைக்கும் போது பார்க்க முடியும். வீதியிலே இப்படி கீரிமலைக் கேணியை நோக்கிப் போகும் ஆட்கள் வழமையாக போய் வருவார்கள். இவ்வாறான கேளிக்கை பராபரிப்பு, கேணியடியில் இன்னும் ஆரவாரமாக நடக்கும். கீரிமலை கேணிக்கு அருகே ஒரு குட்டிக் கந்தோர். அதிலே கீரிமலை கேணியைப் பராமரிக்கின்ற வோச்சர் சின்னத்துரை அண்ணர். அவர் பாடு இந்த விடுமுறை காலங்களில் பெரும் பரிதாபத்துக்குரியது தான்.

வண்டியை இறுக்கும் கட்டைக் கை சேட்டும் மடித்துக் கட்டிய வேட்டியுமாக அவர் இங்கும் அங்கும் ஓடித் திரிவார். அதிகாலையில் அடி நில மணல் தெரிய மீன்கள் ஓடித் திரிய பளிங்கு போல் இருக்கும் கேணித் தண்ணி 10 மணி என்றால் கலங்கலாகிவிடும். பக்கத்து பெரும் சுவருக்கு அப்பால் பொம்பிளைக் கேணி, அங்கும் சின்னத்துரை அண்ணனின் மனைவி தான் வோச்சர். கேணியடி பக்கத்து கட்டுகளில் உடுப்புகளை கழைந்து பாதுகாப்பாக காற்றில் பறக்காமல் கல்லை வைத்து விட்டு பெடியள் நாலா பக்கமும் இருந்து குதித்து கும்மாளம் அடிப்பார்கள்.

இதேபோல வெளியே ஓடும் கேணித் தண்ணியை கடலுக்கு திறந்துவிடும் திரிசுல பக்கம் சிறுவர்கள் பாது காப்பாக குளிக்கின்ற பக்கம். கேணியை விட கடலில் தான் அதிகம் ஆரவாரம். அதிக தூரம் யார் கடலுக்குப் போவது என்ற போட்டி பெடியளுக்குள் இருக்கும். கரைப் பக்கமாக கடல் புறம் பாசி வழுக்கும். கடலடிக் கல் காலில் குத்தும். சிறிது தூரம் சென்றால் மணல் பாங்கான தண்ணீருக்குள் முழுகி எழுந்து உல்லாசமாகக் குளிக் கலாம். உப்புத் தண்ணி என்டாலும் முக்கி எழுந்து தலையைக் கோத கடல் காற்று உடம்பில் பட ஒரு தனிச் சுகம் பிறக்கும். கீரிமலை கடல் புறமும் மணல் பாங் கானது தான். யாழ்ப்பாணத்துக்கு கீரிமலை தான் மெரினா பீச். மண்ணைத் தோண்டி காலை உள்ளே விட்டு வாதத்துக்கு நல்லது என்று அமர்ந்திருக்கும் பெரிய வர்கள், மணல் வீடு கட்டி விளையாடும் சிறுவர்கள், உட்கார்ந்து உல்லாசமாக கடல் காற்றை அனுபவிப்பவர்கள், கடலைக் காரர்கள், தும்பு முட்டாஸ் காரர்கள், அவர்களின் கூவல் நடமாட்டம், தூரத்தே தெரியும் மீன் பிடிப் படகுகள், காங்கேசன் துறை துறை முகத்தையொட்டி நிற்கும் பெரும் கப்பல்கள், சிப்பி, சோகி பொறுக்கித் திரியும் பிள்ளைகள், அவித்து உண்ண நல்லது என்று கடல் பூரிகளை பொறுக்கி நிற்கின்ற சில பேர், அப்பால் பற்றைக்கிடையே ஓடித்திரியும் இராண வணன் மீசை, இவற்றைவிட சுடலை மடம் அங்கே அன் றாடம் நடக்கும் அந்திரெட்டிக் கிரியைகள் ஆரவாரமாக ஐயர் மார் வாடிக்கையாளர்களிடம் தட்சணை வாங்க திரிகின்ற கோலம்.

சுற்றுப் புறங்களில் நிற்கின்ற தங்களுடைய வயது 100 ஐ தாண்டும் என்கின்ற பூவரசம் கூடல்கள். அதன் கீழே இளைப்பாறுகின்ற சனங்கள். பூவரசம் மரத்தில் பூத்து நிற்கின்ற மஞ்சள் கிண்ணம் போன்ற அழகான பூக்கள் என்று கீரிமலை கடல் கரை அழகு ததும்பி நிற்கும். இவ் வாறாக கீரிமலையை ரசிக்கின்ற போது பெடி பெட்டை யள் கடற்கரைப் பக்கமாக இருந்து காதல் உல்லாசம் அவ்வப் போது நடக்கின்ற சங்கதிகள் தான்.

தமிழ் நாட்டு மெரினா கடற்கரைக்கு இருக்கின்ற அம்சங் கள் அனைத்தும் அந்த நாட்களிலேயே கீரிமலைக் கடற் பரப்பிலும் அப்பிக் கிடந்தது. கோடை என்றால் குளிப்பு உடம்புக்கு சுகம் தரும் என்பதற்காக அங்கே குவியும் மக்கள் தொகை அதிகம். கோடை என்றால் நேரம் போவது தெரியாது ஆனால் அருகே இருக்கும் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை சங்கு பேரொழி எழுப்பி நேரத்தை அறிவிக்கும். காலை 5.45, 6.00, 7.45, 8.00, 1.45, 2.00, 5.45, 6.00 என்று தொழிற்சாலை வேலை மாற்றங் களுக்காக பேரொழி எழுப்பும் சங்கு சுற்று வட்டத்துக்கே நேரத்தை சொல்லி நிற்கும்.

கடற்கரைக்கு அருகே கீரிமலைக்கு அருகே நல்ல தண்ணி என்பது அதிசயம் தான். நகுலேஸ்வர முனிவரின் கீரிமுகம் நீங்கிய தீர்த்தத் தலம். மாரப் புர வள்ளியின் குதிரை முகம் நீங்கிய மாவிட்டபுரத்தை அண்மித்த புண் ணிய பூமி, புகழ் பெற்ற ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தை கொண்டிருக்கின்ற கீரிமலை, தனிப் பனைக் கள்ளுக்கு பெயர் போன கூவில் என்ற ஊரை அருகாகக் கொண்டிருக்கின்ற இடம், பனங்கட்டி, குட் டான், பனாட்டு, பாய், பெட்டி, கடகம் என்று பனை சார்ந்த வளங்களைக் கொண்ட ஊர். இத்தனை பெருமைகளைக் கொண்ட ஊர் கீரிமலை அந்த கீரிமலைக் கேணி அனைத் துமே யாழ்ப்பாணத்துக்கு கிடைத்த கொடைகள் தான்.

# கோர்த்து விடும் செய்திகள்

## பூ என்றாலும் சரி தம்பி சொல்றதும் சரி

இலண்டனில் ஒரு காணொளி ஊடகத்தில் இரண்டு அக்காக்கள் வந்து ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் தொலைபேசியில் வந்து நடந்தது இனக்கொலை என்று தன்னால் சொல்ல முடியாது என்றார். (இவர் இரண்டு மூண்டு 'வரியமாய்' காணாமல் போய் இருந்தவர்.) அதன் பின்னர் அந்த இரண்டு அக்காக்களும் அவர் சொல்வது போல இனச் சுத்தீகரிப்பு நடக்கிறது என்றார்கள். கலந்துரையாடல் என்றால் இதுதான் ஒருவர் சொல்வதைக் காதில விழுத்தாமல் ஏதாவது சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

## காசிக்குப் போகும் சன்னியாசி

முள்ளிவாய்க்காலில் உயிர் நித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக் காசிக்கு போயினமாம். உண்மையான தமிழின உணர்வாளர்களை இந்தியா திருப்பி அனுப்புவது எமக்குத் தெரியும். மருத்துவ சேவைக்குச் சென்றவர்களையே திருப்பி அனுப்பியிருக்கின்றார்கள். இவர்களுக்கு மட்டும் எப்படி அனுமதி கிடைக்கும் ....றான வரியில பதினோராவது எழுத்துக்காரரோட சேர்ந்து செய்யினமோ?

## ஐ தி சம்பந்தரின் நல்லாட்சி

புங்குடு தீவில ஒரு பெண் கற்பழித்துக் கொலையாம். ஐ தி சம்பந்தர் மைத்திரி மாத்தயா இலண்டன் வந்த போது ஊடகங்களில் தோன்றி இலங் கையில் நல்லாட்சி நடக்குது என்றார். இதுதான் ஐ தி சம்பந்தர் சொன்ன நல்லாட்சியில் நடப்பதோ?

## இருவர் பேரவையா பேயவையா

இருவரைக் கொண்ட் பேரவையில் ஒருவர் சொன்னாராம் உமா குமரன் போட்டியிட்டது பிழை. அவ வெற்றி பெறக்கூடாது. உங்களுக்கெல்லாம் அரசியல் தெரியாது. எங்கட ஆக்களைப் போட்டு வெற்றி பெறாமல் எங்கட வாக்குகளால் வேற்று இனத்தவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அப்பத் தான் எங்கட தேவைகளை நிறைவேற்றலாம். இதுதான் புது டில்லியின் கீதா உபதேசமோ?

## தேர்தல் நிதி தேவைப்படுதோ?

சிறிலங்காவின் அரசாங்கத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் தேர்தல் வரப் போகுது. அது நிதி தேவைபப்டுது போல.

## கணக்கு விடுவார்களோ?

சட்டம் தெரிஞ்சவன் நல்லாக் கணக்கு விடுவான். ஆனல் கணக்கே தெரியாமல் சட்டம் படிச்சு உயர் நீதிமன்ற நீதிபதியளா இருக்கினம். பணம் கர்நாடகா மட்டும் பாயும் பூனூல் புது டில்லி வரைக்கும் பாயும் என்று ஒருத்தர் முக நூலில் எழுதியதுதான் நினைவிற்கு வருது. கர்நாடகாக்காரங்கள் தண்ணி தரமாட்டாங்கள் என்றுதான் இதுவரை தெரியும் இப்போது தண்ணியும் காட்டுவாங்கள் என்று தெரியுது.

*- ஊருளவாளி*






✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# தமிழ் அரசியல் கட்சிகளை விமர்சிப்பது தமிழ் தேசியத்திற்கு எதிரானது அல்ல



## வடிவேல் தேவராஜ்

*(மட்டக்களப்பில் நடைபெற்ற மாமனிதர் சிவராம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சியில் வீரகேசரி வாரவெளியீட்டின் முன்னாள் ஆசிரியர் வடிவேல் தேவராஜ் ஆற்றிய உரையின் முக்கியபகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்)*

ஊடகத்துறைப் பயணம் என்பது எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காதவர்களுக்கு, அதாவது ஊடகத் தர்மத்தை விலை பேச முன்வராத எந்த ஒரு பத்திரிகையாளனுக்கும், அது ஒரு சவால் நிறைந்த களமாகும். நண்பர் சிவராமின் ஊடகப் பயணம் அத்தகையது தான். அவர் தனது ஊடகத்துறைப் பயணத்தில் எந்தச் சக்திகளிடமும் எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காதவராகத் தனது பணியினை மேற்கொண்டார். இதன் விளைவுதான் அவரது உயிர் பறிக்கப்படக் காரணமாகியது.

அவர் எதையும் தனிப்பட்ட ரீதியில் பார்ப்பதில்லை. மனதிலும் அவ்வாறான ஒரு எண்ணத்தைப் பதியவிடுவதும் இல்லை. அதாவது Nothing Personal என்பது தான் அந்தப் பண்பு. அதே வேளையில் தனக்கு சரி எனப் பட்டதை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொண்ட பின் எழுதுவதற்கும் அவர் தயங்கியதில்லை. இந்தப் பண்பு பல எதிரிகளைத் தானாகவே உருவாக்கிவிடும். இதற்கு நண்பர் சிவராமின் ஊடகப் பயணம் விதிவிலக்காக அமைந்துவிட வில்லை. உண்மையில் நண்பர் சிவராம் நினைத்திருந்தால் ஊடகத் துறையில் சமரசத்துடனான ஒரு வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். சுக போகத்தில் திளைத்திருக்கலாம். அல்லது தனக்கு வந்த அச்சுறுத்தல்களைக் காட்டி வெளிநாடுகளில் தஞ்சம் கோரி இருக்கலாம். ஆனால் நண்பர் சிவராம் இந்த நிலைகளுக்கெல்லாம் அப்பால் மக்களுடன் நின்று தனது ஊடகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நண்பர் சிவராமின் ஊடகப்பயணம் போராட்டக் களத்தில் இருந்து அதன் பின்புல அறிவு, தகவல், அனுபவங்களுடனான தளத்தில் இருந்து ஆரம்பமாகியது. குறிப்பாகக் கூறுவதாயின் தமிழ்த் தேசியம் பிரசவித்த அக்கினிக் குழந்தைகளில் அவரும் ஒருவர். போராட்டக் களம் புகுந்த நண்பர் சிவராம் பின்னாளில் ஊடகத் துறைக்குள் பிரவேசிக்கின்றார். இந்தப் பிரவேசமே நண்பர் சிவராமுக்கும் எனக்கும் இடையிலான உறவுக்கு வழி சமைத்தது.

அவரது ஆரம்பகால ஆங்கில எழுத்துக்களால் கவரப்பட்டவன் நான். இனச் சாயல் அற்ற தளத்தில் இருந்து அறிவு சார்ந்தவையாக அவரது எழுத்துக்கள் இருந்தன. அதேவேளையில், ஆங்கிலம் கற்ற உலகிற்கு, குறிப்பாக கொழும்பில் நிலை கொண்டுள்ள வெளிநாட்டுத் தூதகர மட்டத்தினருக்கும் இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஆங்கிலம் கற்ற சிங்களத் தரப்பினருக்கும் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டையும் அரசியல் அபிலாசைகளையும் ஈழப் போர் குறித்த தகவல்களையும் வழங்குவதாகவும் அமைந்தன. சிவராம் அவர்கள் தனது நடு நிலையான தமிழ் இனச் சாயல் அற்ற எழுத்துக்களின் மூலம் தமிழர்கள் அவர்களது உரிமைகள் அரசியல் அபிலாஷைகள் குறித்த பயணத்தின் நீதியை, நியாயத் தன்மையை எடுத்துக் கூறுவதாக அமைந்திருந்தன. இதன் மூலம் இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தென்னிலங்கை அரசியல் சக்திகளின் மனப் போக்கில் மாற்றத்திற்கு வித்திட முடியும் என்று கருதினார். ஆனால் நண்பர் சிவராம் அவர்களின் எழுத்துக்கள் அவரது எதிர்பார்ப்பிற்கு மாறாக எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தின.

அதாவது இவரது ஆங்கில எழுத்துக்கள் இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கும் வெளிநாட்டுத் தூதரக மட்டத்தினருக்கும் தமிழர் தொடர்பான மற்றும் ஈழப் போராட்டம் தொடர்பான தகவல்களைத் திரட்டிக் கொள்ளும் அதேவேளையில் அறிவுபூர்வமான இராணுவ புலனாய்வு குறித்த உள் இரகசியங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்குமான களமாகவே பார்க்கப்பட்டன. குறிப்பாக சிவராம் என்ற மனிதனின் அறிவுசார் இராணுவ ஆய்வுகள் குறித்து தென்னிலங்கையில் சிலாகித்துப் பேசப்பட்டது. மறுபுறம் நண்பர் சிவராமை ஒரு தகவல் பொக்கிஷமாக இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களும் வெளிநாட்டுத் தூதரக மட்டத்தினரும் பார்த்தனர்.

இலங்கையின் ‘சிங்கள தேசிய அரசியல்’ போக்கில் தமிழ் மக்கள் மீதான உரிமை மறுப்பு, அடக்கு முறை, அடாவடித்தனம், கட்டவிழ்த்து விடப்படும் காடைத் தனங்கள் போன்றவற்றைக் கண்டும், அனுபவித்தும், இத்தகைய அனுபவங்களுக்குப் பிறகும், பெரும்பான்மை இன ஆளும் வர்க்கத்துடன் சமரசத்திற்கு இடம் உண்டு என்ற எதிர்பார்ப்புடன் புறப்பட்ட பலருக்கு தென்னிலங்கை சளைக்காது தோல்வியையே கொடுத்துள்ளது.

அதாவது, தமிழ் மக்களுடன் கை கோர்த்து சமரச அரசியல் பயணத்துக்குத் தயார் இல்லை என்பதையும் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலில் அப்படியொரு அத்தியாயமே இல்லையென்பதையும் தென்னிலங்கை மிகத் தெளிவாகவே உணர்த்தி வந்துள்ளது. அதன் முழுமையான வெளிப்பாட்டை நாம் இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது.

பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியும் எந்தவித பலனும் பயனும் கிடைக்கவில்லை என்ற சிவராமின் ஆதங்கத்தின் எதிரொலியாகவே கேசரி வார இதழில் “தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்களத்திற்குக் கூறுவது பயனற்றது” என்று கட்டுரை வரைந்ததை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இனவாதம் அற்ற ஒரு நிலைக்கு தென்னிலங்கையைக் கொண்டுவர முயற்சித்தும் முடியவில்லை என்ற அவரது நியாயமான கோபம் அவரை தீவிர தமிழ்த் தேசியவாதியாக மாற்றியது. எனவேதான் பின்னைய அவரது எழுத்துக்களில் தமிழ்த் தேசியத்திற்கான குரல் ஓங்கி ஒலித்ததை தரிசிக்கக் கூடியதாக இருந்தது.

நண்பர் சிவராம் ஆரம்ப காலத்தில் எதைச் செய்ய நினைத்து தோற்றுப் போனாரோ அதைத் தான் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தனது பதவி ஏற்பு முதலாக தொடர்ச்சியாக நல்லிணக்க சமிக்ஞையை தென்னிலங்கைக்கு காட்டி இறுதியில் தோற்றுப் போய் சிவராம் போன்று இன்று தமிழினத்தின் நியாயமான, நீதியான, அரசியல் அபிலாஷைகளுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பதை இவ்விடத்தில் நினைவு கூருதல் பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

சிவராம் உயிருடன் இருக்கும்வரை தமிழர் அரசியலை செம்மைப்படுத்துவதற்கும், தமிழ் மக்களின் நியாயமான குரலை ஒலிப்பதற்கும் அவர் பின் நிற்கவில்லை. ஆனால் இன்று அது வெற்றிடமாக உள்ளது. அன்று சிவராமுக்கு மாத்திரமல்ல, தமிழர்களின் அபிலாஷைகள் குறித்துப் பேசிய தமிழ், சிங்கள ஊடகத்துறையினருக்கும் புலி முத்திரை குத்தப்பட்டது. பிரிவினைவாதிகள் என்ற நாமமும் சூட்டப்பட்டது. ஆனால் இன்று வரலாறு வேறுவிதமாகத் திரும்பிவிட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை குறித்தோ, தமிழ்த் தலைமைகளின் அரசியல் பயணம் குறித்தோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிய வேண்டும் என்றோ, தமிழ் ஊடகத்துறை சார்ந்தோர் பேச முற்படின் அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள் என்ற முத்திரை குத்தப்படுகின்றது. குடிநீரில் எண்ணெய் கலந்துள்ளது என்று எழுத முற்படும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் இதே முத்திரைதான் குத்தப்படுகின்றது.

தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவதோ, அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பயணம் குறித்துப் பேசுவதோ, அல்லது தமிழ்த் தலைமைகளுக்கான பொறுப்புக் கூறலை உணர்த்துவதோ தமிழ்த் தேசியத்தை சிதைப்பதாக அமையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்துவதாகவும் அமையாது. இதற்கும் அப்பால் இன்னும் ஒரு தீவிரவாதத்திற்கான விதைகளைத் தூவுவதாகவும் அமையாது.

நண்பர் சிவராம் உயிருடன் இருந்திருந்தால் அவர் அதனையே செய்திருப்பார். தமிழ்த் தலைமைகள் தமது இயலாத் தன்மையை மறைக்க, தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க முற்படும் தமிழ் ஊடகத்துறையினரை தமிழ்த் தேசியத்தின் எதிரிகளாக சித்தரிக்க முற்படுவதானது, தமிழர் அரசியலுக்கு நிரந்தரமான மரணசாசனம் எழுதுவதாகவே அமையும்.

தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவதோ, அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பயணம் குறித்துப் பேசுவதோ, அல்லது தமிழ்த்தலைமைகளுக்கான பொறுப்புக் கூறலை உணர்த்துவதோ தமிழ்த் தேசியத்தை சிதைப்பதாக அமையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்துவதாகவும் அமையாது. இதற்கும் அப்பால் இன்னும் ஒரு தீவிரவாதத்திற்கான விதைகளைத் தூவுவதாகவும் அமையாது.

தமிழ்த் தலைமைகளைப் பொறுத்து தமிழ் மக்களின் அரசியல் பயணத்தை அப்பழுக்கற்ற நிலையில் கொண்டு செல்வதாகக் கூறுவார்களாயின் தமிழ் ஊடகத் துறையினர் குறித்து கலக்கமடையத் தேவையில்லை என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நண்பர் சிவராம் அவர்களைப் பொறுத்து தமிழ் ஊடகத் துறைக்கு புதிய இரத்தம் பாய்ச்ச முயற்சித்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார். குறிப்பாக, வடக்கு-கிழக்கில் பணியாற்றிய சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு ஊடகத் துறையில் பயிற்சிகளை வழங்கி புதிய பரிமாணத்துக்குக் கொண்டு சென்றார். ஊடகத் துறை சார்ந்த தொழில் நுட்பங்கள் இணையத் தளங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்கியதுடன் இலங்கைக்கு வெளியில் ஊடகத் துறையினருடனான தொடர்புகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்தார். அதற்குச் சாட்சியாக இன்றைய இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ள பல ஊடகவியலாளர்களைக் கூறலாம்.

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website www.fushia-restaurant.co.uk, we will give you a 30% Discount!.

This offer is only available to online orders until the end of March 2015 (T&Cs apply)

Slow Cooked Lamb shanks £9.95 Only

With a rich rosemary and mint sauce or spicy sauce



FUSHIA

TEL - 020 8680 8833

3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA

web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."” ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 30 வயது, 5'11" British citizen graduate working as a manager in Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5433

2. 35 வயது, 6'2" Permanent residence graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5428

3. 29 வயது, 6'0" Graduate manager in a company in India தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5419

4. 26 வயது, 5'9" EU citizen living in uk accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5388

5. 28 வயது, 5'8" EU visa Graduate working as a Team leader in a Super market in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5423

6. 37வயது, 6'1" Divorced graduate discreation leave to remain visa eligible to apply permanent residence and living in uk for the past 17 years and doing business தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5420

7. 35 வயது, 5'8" Divorced British citizen self employed graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5418

8. 30 வயது, 6'1" work permit visa Engineer living in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5414

9. 44 வயது, 5'7" Divorced German citizen driver living in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5410

10. 31 வயது, 5'8" Permanent residence graduate working as a support engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

11. 30 வயது, 5'10" US citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5407

12. 46 வயது, 6'0" Permanent residence working as machine operator in a company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5334

13. 30வயது, 5'6" British citizen Doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5406

14. 51 வயது, 5'8" Divorced permanent residence in Ireland Graduate mana ging director in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5405

15. 30வயது, 5'8" student visa Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 5403

16. 35வயது, 5'6" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5396

17. 53 வயது, 5'7" Permanent residence in uk widower living with his daughter and working as a caretaker in a school தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5383

18. 31வயது, 6'0" Business visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5395

19. 38 வயது, 5'5" Divorced Born and brought up in uk Engineer working as a company director தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5393

20. 37 வயது, 5'6" living in Uk for the past 17 years Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4633

21. 33 வயது, 5'7" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5383

22. 31 வயது, 5'8" Student visa self employed graduate தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5378

23. 34 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5372

24. 37வயது, 5'3" British citizen working as a manager in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5371

25. 27 வயது, 5'10" 3 year Entreprenuer visa Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5370

26. 37 வயது, 5'4" Asylum seeker living in uk for the past 14 years தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5364

27. 37 வயது, 5'11" British citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5355

28. 37 வயது, 5'11" British citizen working in a IT company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5352

29. 35வயது, 5'6" Born and brought up in uk Accountant தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4788

30. 31வயது, 5'7" British citizen graduate self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5350

31. 32வயது, 5'4" British citizen graduate working as a graphic designer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5348

32. 32 வயது, 5'4" British citizen Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5338

33. 32 வயது, 5'4" Permanent residence Engineer தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5337

34. 33 வயது, 5'9" Entrepreneur visa graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5339

35. 29 வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5336

36. 32வயது, 5'10" HSMP visa graduate working in IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

37. 41 வயது, 5'11" Permanent residence graduate working in a retail company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5327

38. 29வயது, 5'7" British citizen graduate working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5325

39. 33 வயது, 5'8" permanent residence self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5319

40. 31 வயது, 5'8" Born and brought up in uk Teacher தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5288

41. 32 வயது, 5'7" Graduate Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 5314

42. 26 வயது, 5'10" Graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5296

43. 35வயது, 5'2" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5298

44. 35 வயது, 5'9" Asylum seeker Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5294

45. 31 வயது, 5'11" Work permit visa working as a civil engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5290

46. 37 வயது, 6'0" British and Australia citizen divorced working in a IT department living in Australia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5284

47. 28 வயது, 5'8" work permit visa Accountant தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5281

48. 46 வயது, 5'7" British Citizen working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 5275

49. 34வயது, 5'7" Graduate, Student visa in uk, working as a sale assistance, divorced தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 5274

## மணமகன் தேவை

1. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435

2. 32 வயது, 5'4" EU citizen graduate living in Germany தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5431

3. 24 வயது, 5'1" EU citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5424

4. 29வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417

5. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5413

6. 30வயது, 5'1" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

7. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399

8. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5398

9. 28வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5397

10. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

11. 30வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5391

12. 25வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376

13. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5360

14. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5354

15. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345

16. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343

17. 25 வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5331

18. 35வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5329

19. 22 வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317

20. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225

21. 28 வயது, 5'3" Discretion leave to remain visa 3 year visa eligible to apply permanent residence in uk graduate accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 1243

22. 31 வயது, 5'2" British citizen Graduate working in a medical sector மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

23. 25 வயது, 5'0" பிறப்பிலிருந்து வாய் பேச முடியாத மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5299

24. 30 வயது, 5'0" Graduate working as a Technical officer in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5291

25. 21 வயது, 5'1" இந்தியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5236

26. 30 வயது, 5'1" British citizen Graduate.working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

27. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

28. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

29. 30வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

30. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5246

31. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5245

32. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 4902

33. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

34. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5189

35. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

36. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

37. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5162

38. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

39. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

40. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

41. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

42. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

43. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5117

44. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

45. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

46. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

47. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

48. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5075

49. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 5073

50. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

51. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

52. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றன ர் Ref: 5065

53. 40 வயது, 5'4" Graduate,Malaysian Nationality ,PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 5010

54. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

55. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

56. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 5054

57. 28 வயது, 5'2" Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

58. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

59. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

60. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# 'குமுதினிப் படகு' படுகொலையின் 30வது நினைவு தினம்



சிங்கள அரசின் மிகக் கொடுமையான தமிழ் இனப் படுகொலைகளில் 15 -05-1985ல் நடைபெற்ற குமுதினிப் படகின் படுகொலையும் ஒன்றாகும். யாதும் அறியாத அப்பாவி மக்கள் தங்களின் அன்றாட வேலைகளுக்காக நெடுந்தீவில் இருந்து அவர்களுக்குரிய கடல் பிரயாணத்தில் யாழ்ப்பாணம், மற்றும் ஏனைய இடங்களுக்கும் செல்வதற்கு புங்குடுதீவில் உள்ள குறிகாட்டுவான் துறைமுகம் சென்ற போது காலை 8.00மணிக்கும் - 9.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நெடுந்தீவுக்கும் – நயினாதீவுக்கும் உட்பட்ட நடுக்கடலில் வைத்து நயினாதீவில் உள்ள சிங்கள கடற்படையினரால் ஆண், பெண், குழந்தைகள் (1வயது-3வயது) உட்பட 63 அப்பாவி பொது மக்களை கூரிய ஆயுதங்களால் குத்தியும், வெட்டியும் சித்திரவதை செய்தும் ஒருவருக்கு மேல் ஒருவராக மூடைகள் போல் அடுக்கி வேதனையுடன் உயிர் நீத்த அப்பாவித் தமிழ் மக்களின் 30வது நினைவு நாள் 15.05.2015 ஆகும்.

இந்நாளில், இதில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட ஏனைய உறவுகள் இச்சம்பவத்தை நினைத்து இன்றும் மனவேதனைகளுடனும், விரக்தியும், மன உளைச்சலுடனும் வாழ்வதை காணும் போது எம் தமிழ் உறவுகளின் துயரம் எண்ணில் அடங்காதது.

இவர்களின் படுகொலை நினைவு நாளில் எமது அஞ்சலியையும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையையும் செய்வதோடு மற்றும் தமிழ் இன படுகொலைகளுக்கும் தாயக மண்ணுக்காகவும் தம் உயிர் நீத்த அனைத்து பொது மக்களையும் மாவீரர்களையும் இன்றைய தினத்திலும் நினைவு கூருவோம்.

இந்நேரத்தில் அன்று நடுக்கடலில் அநாதரவாக கிடந்த குமுதினிப்படகைக் கண்டு அங்கு சென்றுஅதனை கரை சேர்த்த படகினருக்கும்,அன்றைய கொடுமையான துயர நாளில் எல்லா வகையிலும் தங்களால் ஆன சகல உதவிகளையும் செய்த பொதுமக்களைகளையும்,மருத்துவர்களையும் ஊழியர்களையும் என்றும் நம்மக்கள் நினைவில் வைத்து நன்றி உணர்வார்கள் என்பதோடு இந் நேரத்தில் இன்றும் இலங்கையில் சிறையில் வாடும் எம் இன உறவுகளின் விடுதலைக்கு தமிழ் உணர்வாளர்களுடன் இணைந்து குரல் கொடுப்பதோடு இதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் எம்மாலான பங்கினையும் வழங்குவோமாக.

குமுதினிப் படகின் கோரப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவு நிகழ்வு ஐக்கிய இராட்சியத்தில் உள்ள பின் வரும் இடத்தில் நடைபெற உள்ளது. தமிழ் உறவுகளை நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.



காலம்- 15.05.2015 –வெள்ளிக்கிழமை
நேரம்- மு.ப 11.00 தொடக்கம்
இடம் - 02, Salisbury Road
Manor Park, Eastham
London, E12 6AB

- ஆவுடையான்

# மணலில் தீரும் துயர் !

மண்மேடுகள் ஒவ்வொன்றாய்
விழுகிறது
துயர் கொண்டலையும்
பிணதேசத்தின் குழந்தைகள்
மரணங்களின் கொடு எல்லையில்
நின்று இழப்பின்
பெருவலிகொண்டனர்.

எங்கும் கண்டதில்லை இந்த
அழுகைகளை.
மிஞ்சியிருக்கிற குழந்தைகள்
என்ன சொல்லி அழுகின்றனர்
எல்லோருக்கும் கேட்கிறது.
கடல்கரையோரமாய்
பெயர்ந்தலைந்து
மீள அதே இடத்திற்கு
திரும்புகிறபோது
விழுந்து
கொண்டேயிருக்கிறது உயிர்கள்.

அதிகாரம் இன்னும் கொளுக்க
வானம் சுருங்கி பெயர்ந்து
விழுகிறது.
யார் கருணைகொண்டு வந்தனர்.
குழந்தைகளின் உலகம்
மறுக்கப்பட்டு
அதிகாரங்களால் அழிவுதானே
கொண்டு வரப்படுகிறது.
இன்றும் ஆயிரம் பிணங்கள்
மண்மேடுகளின் பின்பக்கமாய்
விழுந்திருந்தன.
மீற்றர்களினால் முன்னேறுகிற
படைகள் பிணங்களின்
குழந்தைகளை
மீட்டு படம் பிடித்தனர்.

கீழே வைக்கப்பட்ட ஆயுதங்களை
எடுத்து காட்சிப்படுத்தி
சுற்றிக்கொண்டிருக்கிற
தாக்குதல்களில்
அடைந்த வெற்றியின் களிப்பில்
கிலோமீற்றர்கள் மேலும்
சுருங்குகின்றன.
மண் சுருங்கிறதை
எல்லோரும் அறிவார்கள்.
கைப்பற்றப்பட்ட மண்ணரணால்
மூடப்படுகிறது உயிரிருக்கிற
பிணங்கள்.

எனினும் மண் விழுகிறது.
குழந்தைகள் மீளமீள
மணலில் வந்து மோதுகின்றனர்.
இங்கில்லை பெருந்துயர்.
அதிகாரம் கொள்ளுகிற வெற்றி
இறுதிக் கட்டத்தில் நின்றுகொண்டு
துயரின் கழுத்தை நெறிக்கிறது.
இரண்டு இராணுவ அணிகள்
சந்திக்கின்றன.

குழந்தைகள் யாருமற்று
அநாதைகளாகி
அழுகிய பிணங்களை
பற்றிப்பிடித்தனர்.
அதிகாரங்கள் கூத்தாடுகின்றன.
இன்னும் சற்று நேரத்தில்
ஓய்ந்தடங்கும்
மணலில் மோதுகிற துயர்.
சனங்கள் தீருகின்றனர்.
மண்மேடுகள் ஒவ்வொன்றாய்
விழுகிறது !

- தீபச்செல்வன்

# இறந்தவர்களை..

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

மனித குலத்தின் முதலாவது நிரந்தரக் குடியிருப்புக்களில் ஒன்றாக கருதப்படும் ஹெற்றல்கியூக்கிலும், ஜெரிக்கோவிலும் மனிதர்கள் மூதாதையர்களை வழிபட்டிருப்பதைக் காணலாம். மனித நாகரிகமானது நதிக்கரைகளில் எண்ணோடும் எழுத்தோடும் கட்டியெழுப்பப்படுவதற்கு சில நூற்றாண்டுகளுக்கும் முன்னரே உருவாக்கப்பட்ட நிலையான குடியிருப்புக்கள் அவை. நீர்ச்சுனைகளைமையமாகக் கொண்டிருந்த அந்நிலையான குடியிருப்புக்களில் மூதாதையர் வழிபாட்டுக்குரிய சான்றாதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது மனித நாகரீகத்தின் ஆதித் தொடக்கங்களைக் கண்டுபிடித்த போது அங்கே இறந்தவர்களை மரியாதை செய்ததற்கான சான்றாதாரங்களும் காணப்பட்டன.

இறந்தவர்களை நினைவு கூர்வதைத் தடுப்பது நாகரீகமற்றது என்று நம்பியதாலேயே மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன் ஒரு ஐரோப்பிய பிரதானி ஆனையிறவுக்கு அருகே மலர் வணக்கம் செலுத்தினார். அதைப் போலவே சில மாதங்களுக்கு முன்பு ஒரு அமெரிக்க பிரதிநிதியும் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று மலர் வணக்கம் செலுத்தியிருக்கிறார். இவைகள் யாவும் குறியீட்டு நடவடிக்கைகளே. ஆனால் தமிழ் மக்களுக்கு தேவையாயிருப்பது குறியீட்டு நடவடிக்கைகள் அல்ல. மாறாக தமது கூட்டு உரிமையை உறுதி செய்யும் ஓர் அரசியல் சூழலே. அதற்கு வேண்டிய ஓர் அனைத்துலக அழுத்தமே. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அதை பின்னிருந்து பலப்படுத்தும் மேற்கு நாடுகள் முன்னைய ஆட்சி காலத்தில் அதை ஒரு குறியீட்டு நடவடிக்கையாக செய்தது என்பது வேறு. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அப்படிச் செய்வது என்பது வேறு. மாற்றத்தைக் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஐயங்களையும் அச்சங்களையும் விரக்தியையும் போக்குவது என்றால் இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

நவீன தமிழ் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிரிழப்பை நினைவு கூர்வதற்கு 5 ஆண்டுகளுக்கு பின்னராவது தமிழ் மக்கள் அனுமதிக்கப்படுவது என்பது மாற்றத்தின் மீது அவர்களுக்கு ஏதாவது ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தக் கூடும்.

## வன்முறை

ஒரு தீர்மானத்துடன்
உட்கார்ந்திருந்தேன்.
இன்று
எங்கு செல்வதில்லை..
எதுவும் படிப்பதில்லை..
யுத்தம்,மரணம்,கொலை,வன்முறை
எது நடந்தாலும்
தெரியாமலேயே
இருக்கட்டும்..

இணையத்தை நிறுத்தி வைத்தேன்...
மனைவியும் குறிப்பறிந்து
தொலைக்காட்சியை
அணைத்து விட்டு சென்றாள்..

அன்றைய தினசரிகளை
மகள் ஒழுங்கு செய்தாள்..
குப்பையில் போடவா என்று
என் பதிலுக்கு காத்திருந்தாள்.

எனி
எதுவும் படிப்பதில்லை..
பார்ப்பதில்லை..
யுத்தம் வேண்டாம்..
வன்முறைச் செய்திகளைப்
படிக்கவேண்டாம்..

உலகில்
எது நடந்தால் எனக்கென்ன?
ஜன்னலை
இழுத்து மூட அருகெ சென்றேன்...
பலமான காற்று
என் காதுள் இறங்கியது
வன்முறைகளோடு..

- முல்லை அமுதன்

## ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் ஆறுமோ...!

சிறைகளிலும்
கொல்லுங்கள்
வகுப்பறைகளிலும்
கொல்லுங்கள்
கோவிலும்
கொல்லுங்கள்
மருத்துவ மனையிலும்
கொல்லுங்கள்
எந்த இடம்
எனப்பாராமல்
கொல்லுங்கள்
இந்தியப் பொதுத்
தேர்தலின் முன்
கொன்றொழியுங்கள்
அன்று இட்ட கட்டளைகள்
தந்த வடுக்கள்
ஆண்டுகள் ஆயிரம்
ஆனாலும் ஆறுமோ

காலையிலும்
இனக்கொலை
அந்தி மாலையிலும்
இனக்கொலை
இரவிலும் இனக்கொலை
பட்டப்பகலிலும்
இனக்கொலை
எந்த நேரம்
என்று பாராமல்
கொன்றொழியுங்கள்
இந்தியப் பொதுத்
தேர்தலின்
முன்கொன்றொழியுங்கள்
என்று அன்று இட்ட
கட்டளைகள் தந்த
வடுக்கள்

ஆண்டுகள் ஆயிரம்
ஆனாலும் ஆறுமோ

ஆண்களையும் கொல்லுங்கள்
பெண்களையும் கொல்லுங்கள்
குழந்தைகளையும் கொல்லுங்கள்
கருவறைச் சிசுக்களையும்
கொல்லுங்கள்
வாலிபரையும் கொல்லுங்கள்
வயோதிபரையும் கொல்லுங்கள்
எவரென்றும் பாராமல் இந்தியப்
பொதுத் தேர்தலின் முன்
கொல்லுங்கள்
என்று அன்று இட்ட கட்டளைகள்
தந்த வடுக்கள்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறுமோ...

நிலத்தினில் கொல்லுங்கள்
நடுக் கடலும் கொல்லுங்கள்
விண்ணினிலிருந்தும்
கொல்லுங்கள் கொடுந் தீயை
வீசிக்கொல்லுங்கள்
கன்னியரைக் கெடுத்துக்
கொல்லுங்கள் காளையரை
வதைத்துக் கொல்லுங்கள்
கழுத்தை நெரித்துக்
கொல்லுங்கள் உயிருடன்
எரித்துக் கொல்லுங்கள்
என்று அன்று
இட்ட கட்டளைகள்
தந்த வடுக்கள்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறுமோ !

- வேல் தர்மா

# தமிழ் சினிமாவை வாழ வைக்கும் பேய்கள்



தமிழ் சினிமாவில் தற்போது கதை இருக்கிறதா என்று கேட்க மாட்டேன் என்கிறார்கள், மாறாக பேய் இருக்கிறதா என்றுதான் கேட்கிறார்கள். அந்த அளவிற்கு தமிழ் சினிமாவை தற்போது பேய் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. வாரத்திற்கு நான்கு படங்கள் வெளிவந்தால் அதில் ஒரு படம் கண்டிப்பாகப் பேய்ப் படமாக அமைந்து விடுகிறது. முன்பெல்லாம் பக்திப் படங்களும், மிருகங்களை வைத்து எடுக்கப்பட்ட படங்களும் தாய்மார்களை அதிகம் கவர்ந்து அவர்களை தியேட்டர் பக்கம் வர வைத்தன. இப்போது அந்த வேலையை பேய்ப் படங்கள் பத்திரமாக செய்து கொண்டிருக்கின்றன.

பேய் என்றால் பயம் என்றிருந்த காலம் போய், இப்போது பேய் என்றாலே பயமே இல்லாமல் போய் விட்டது என்று சொல்லுமளவிற்கு பேய்ப் படங்களை நகைச்சுவைப் படங்களாகவும் கொடுத்து சிறுவர், சிறுமியர்களையும் கவர்ந்து விட்டார்கள்.

தமிழ் சினிமாவில் இப்போதுதான் பேய்ப் படங்கள் வருகிறது என்று நினைக்க வேண்டாம். அந்தக் காலத்திலேயே பேய்ப் படங்கள் வந்திருக்கின்றன. ஆனாலும், விட்டலாச்சார்யா காலத்தில்தான் தெலுங்கிலும், தமிழிலும் அதிகமான பேய்ப் படங்கள் வந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் ‘ஜகன்மோகினி’ படம் அந்த அளவிற்கு ரசிகர்களை பயமுறுத்தியது. வெறும், காமிரா ஜாலம் மூலமே பல திகிலான காட்சிகளை உருவாக்கி ரசிகர்களைக் கவர்ந்தவர் விட்டலாச்சார்யா.

அவருடைய பட தமிழ் சினிமாவில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான ஒரு சில பேய்ப் படங்களே வந்துள்ளன. ரஜினிகாந்த், லதா நடித்த ‘ஆயிரம் ஜென்மங்கள்’, கமல்ஹாசன் நடித்த ‘நீயா’, சிகப்பு ரோஜாக்கள்’,‘ கார்த்திக் நடித்த ‘ஆயிரம் நிலவே வா’, மோகன் நடித்த ‘உருவம்’, ராஜா, வைஷ்ணவி நடித்த ‘வா அருகில் வா’, அர்ஜுன், நளினி நடித்த ‘யார்’, நிழல்கள் ரவி, சாதனா நடித்த ‘மை டியர் லிசா’, மோகன், நளினி நடித்த ‘பிள்ளை நிலா’, ராகவா லாரன்ஸ் நடித்துள்ள ‘முனி, காஞ்சனா, காஞ்சனா 2’, ரஜினிகாந்த் நடித்த ‘சந்திரமுகி’, அனுஷ்கா நடித்த ‘அருந்ததி’, மிஷ்கின் இயக்கிய ‘பிசாசு’, மாதவன், நீது சந்திரா நடித்த ‘யாவரும் நலம்’, பிரசாந்த், மீனா நடித்த ‘ஷாக்’, பிரியாமணி நடித்த ‘சாருலதா’, மற்றும் கடந்த சில வருடங்களில் வெளிவந்த ‘பீட்சா’, யாமிருக்க பயமே’, ‘அரண்மனை’, ‘ர’, சமீபத்தில் வெளிவந்த ‘டார்லிங்’ என 50க்கும் குறைவான முக்கியமான படங்களே இதுவரை பேசப்பட்டுள்ளன. இந்தப் பேய்ப் படங்களில் இரண்டு பொதுவான விஷயங்கள் இரண்டு இருக்கும். தன் மரணத்திற்குக் காரணமானவர்களை அந்தப் பேய் பழி வாங்குவது ஒன்று, மற்றொன்று அந்தப் பேய் ஒரு பாழடைந்த வீட்டில் மட்டுமே இருக்கும். அந்த இரண்டு விஷயங்களை மட்டுமே வைத்து இதுவரை எத்தனையோ கதைகளைப் படைத்து விட்டார்கள் நமது இயக்குனர்கள். ஆனாலும், ஒவ்வொரு படமும் திகிலை ஏற்படுத்துவதில் சளைக்காமல் இருந்திருக்கிறது.

இருட்டறைக்குள் எங்கு பேய் இருக்கிறது என்பது , சத்தம் போடும் கதவுகள், ஜன்னல்கள், கிரீச்சிடும் கட்டில் நாற்காலி, திடீரென எதிரே ஒரு உருவம் வந்து நிற்பது, கண்ணாடியில் திடீரென யாரோ தோன்றி மறைவது, வேறு எந்த சத்தமும் இல்லாத ‘பின்-டிராப்’ சைலன்ட்டில் வெறும் கொலுசு சத்தம் மட்டும் கேட்பது, வாய் விட்டு சிரிக்கும் கலகல சிரிப்புச் சத்தம் போன்ற விஷயங்களை மட்டுமே வைத்து வசூலை அள்ளி வருகின்றன பேய்ப் படங்கள்.

இந்த மாதிரியான படங்களுக்கு கதை தேவையில்லை, நல்ல திரைக்கதை இருந்தாலே போதும். இதுவரை வந்த படங்களைப் பார்த்து விட்டு, அதில் இது வரை இல்லாத அளவிற்கு வேறு ஏதாவது புத்தம் புது காட்சிகளை யோசித்தாலே போதும், ஒரு அருமையான பேய்ப் படம் ரெடி என்றாகிவிட்டது.

எப்படியும் இந்த 2015ம் ஆண்டில் சுமார் 50க்கும் மேற்பட்ட பேய்ப் படங்கள் வந்து விடும் போல இருக்கிறது. இந்த மாதத்திலேயே சூர்யா நடித்துள்ள ‘மாஸ்‘, ஆவி குமார், டிமான்டி காலனி ஆகிய படங்கள் வெளி வர உள்ளன. அடுத்தடுத்து ‘கோப்பெருந்தேவி, ஓம் சாந்தி ஓம், மாயா, சௌகார்பேட்டை‘ போன்ற பேய்ப் படங்களும் வர உள்ளன.

இவை மட்டுமல்லாமல் சுமார் பத்துக்கும் மேற்பட்ட படங்கள் பேய்க் கதைகளுடன் படமாகி வருகின்றன. இவை ஓரளவிற்கு வெளியில் தெரிந்த படங்கள், இன்னும் தெரியாமல், சத்தமில்லாமல் பல படங்கள் உருவாகி வருகின்றன.

‘மாஸ்‘ போன்ற பெரிய படத்தில் சூர்யா போன்ற முன்னணி நடிகர்களே பேய்ப் படங்களில் நடிக்க வந்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றுதான். இந்தப் படம் ஹிட் ஆகிவிட்டால், மற்ற முன்னணி நடிகர்களும் பேய்ப் படங்களைத் தேடி ஓட ஆரம்பித்து விடுவார்களோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

எவ்வளவு பேய்ப் படங்கள் வந்தாலும் இன்னமும் தொழில் நுட்பத்திலும், கிராஃபிக்ஸ் காட்சிகளிலும் ஹாலிவுட் படங்களுக்கு இணையாக என்று சொல்லுமளவிற்கு எந்தப் படமும் வரவில்லை. இந்தக் குறையும் சீக்கிரமே நிவர்த்தி செய்யப்படவும் வாய்ப்புள்ளது.

சமீபத்தில் வெளிவந்த ‘டார்லிங், காஞ்சனா 2’ ஆகிய இரண்டு பேய்ப் படங்கள்தான் இதுவரை இந்த ஆண்டில் வெளிவந்த படங்களில் அனைவருக்குமே லாபத்தை அள்ளிக் கொடுத்த படங்கள் என்று கோலிவுட் வட்டாரம் தெரிவிக்கிறது. ஆக, பேய்கள்தான் தற்போது தமிழ் சினிமாவை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

அதனால், இன்னும் கொஞ்ச நாளைக்கு தமிழ் சினிமாவைப் பிடித்திருக்கும் பேய்ப் பட மோகத்தை எந்த இடத்திற்கும் சென்று விரட்டியடிக்க முடியாது என்றே தோன்றுகிறது .

*நன்றி - வாழ்க்கை விருந்து வலைப்பூ*



## கலங்காதே..மீண்டும் ஒருநாள் வரும்.. காத்திரு என் இனிய இளவலே!

எரிமலைகள்
குமுறுவதைப் பற்றி
எப்படி விளக்க முடியும்?
வரி வரியாய் அதைப்
பற்றி
அறிய நீ விரும்பினால்..
வந்துபார் எரிமலையின்
பக்கத்தில்..
செந் தணலின் தீ நாக்கு
எப்படி என்று..
அந்த நொடியில்தான் நீ
அறிவாய்!

அதுபோல்தான்..

எங்கள்
மாவீரர்களின்
பொங்கும்
உணர்வுகளை..
—தியாகப்
புயலின் வேகத்தை..
வீரத்தின்
புதிய பரிமாணத்தை..
களத்தில் நின்று தான் நீ
அறியமுடியும்..
கண்ணால் பார்த்துத்தான்
அதைப் புரிய முடியும்..
சொன்னால் உனக்குப்
புரியாது தம்பி..!

எரிமலை ஆற்றில் நீ
குளித்ததுண்டா..?
இல்லையெனில்
இன்னும் சில நாளில்
விளக்கேற்று..
முள்ளி வாய்க்காலில்..
மூர்க்கமாய் போராடிய
எங்கள்
விடியலின்
சமாதிகளில் — எங்கள்
மண்ணின் தாய்களின்..
கண்ணில் இருந்து
வெளிக் கிளம்பி வரும்..
கண்ணீரில் நீ அதைக் கட்டாயம்
காண்பாய்!

நாங்கள் விழுந்தவர்கள்தான்..
ஆனால்..
புற முதுகிட்டு ஓடி அல்ல..
எதிரியின் விழுப் புண்ணை
நெஞ்சில் தாங்கி!
விழுந்தவர்கள்..
எப்போதும்
மரித்தவர்கள் என்று
முடிவு கட்டி விடாதே..
புலிகளின் கண்ணில் மின்னுவது
கானல் நீர் அல்ல..
அக்கினிக் குண்டம் என்பதை
அறிந்து கொள்!

வீரர்கள்
விழுவதும் எழுவதும்
வீரத்தின் ஓர் அத்தியாயம்..
முடிவுரை அல்ல..!

அதுபோல்..

வீரர்கள் மீண்டும்
எழுந்ததை நீ எங்கும்
பார்க்கவில்லையா?..
வீர வரலாற்று ஏடுகளைப்
புரட்டிப் பார்..
தெரியும் !

முள்ளி வாய்க்காலில்..
மூர்க்கமாய் போராடிய
எங்கள் விடியலின்
சமாதிகளில் — நின்று
சபதம் எடுக்கிறோம்..

என்ன விலை கொடுத்தும்
நாங்கள் எம் மண்ணை
மீட்போம் !

- மு.வே.யோகேஸ்வரன்



# சினிமா




கோவசவசவென்று படங்களை இயக்காவிட்டாலும் எப்போதும் ஒரு கவன ஈர்ப்பு வட்டத்திற்குள் தன்னை வைத்திருப்பார் ஜனநாதன். பேராண்மைக்கு பிறகு பெரிய இடைவெளி. முதலில் ஜீவா, ஜெயம் ரவியை வைத்து புறம்போக்கை இயக்க நினைத்தாலும் காரியம் கைகூடவில்லை. அதன் பிறகு ஆர்யா, விஜய் சேதுபதி மற்றும் ஷாம் கூட்டணியுடன் படத்தை முடித்திருக்கிறார். 'புறம்போக்கு' டைட்டிலுக்கு ஏற்கனவே நட்ராஜ் (சதுரங்க வேட்டை) பட்டா போட்டு விட்டதால் 'புறம்போக்கு என்கிற பொதுவுடமை' என மாற்றப்பட்டது இப்படத்தின்தலைப்பு.

கொலை, கொள்ளை, ராணுவம் மீது தாக்குதல் என தேசவிரோத செயல்களில் ஈடுபட்டதற்காக 'காம்ரேட்' பாலுவிற்கு மரண தண்டனை தருகிறது நீதிமன்றம். சென்னை மத்திய சிறையில் இருக்கும் தங்கள் தோழரை மீட்க போராடுகிறது கம்யூனிஸ்ட் டீம் ஒன்று. கைதிகளுக்கு தூக்கு போடும் ஊழியராக எமலிங்கம் தேர்வு செய்யப்படுகிறான். நிரபராதி ஒருவரை தூக்கிலிட்டதில் இருந்து மறுமுறை அத்தவறை செய்யக்கூடாது எனும் மனநிலையில் இருக்கிறான் லிங்கம். ஆனால் சிறைத்துறை அதிகாரி மெக்காலே லிங்கத்தை விடுவதாக இல்லை. பாலு, லிங்கம், மெக்காலே மூவரை சுற்றி மத்திய சிறைக்குள் நடக்கும் கேம்தான் இந்த புறம்போக்கு.

மேலை நாடுகள் தங்கள் எலக்ட்ரானிக், மருத்துவ கழிவுகளை இந்தியாவில் கொட்டுவதால் ஏற்படும் ஆபத்தை சொல்வதாகத்தான் கதையை துவக்குகிறார்கள். அந்த நிலைப்பாட்டிற்காக போராடும் சூரராகவே பாலுவும் சித்தரிக்கப்படுகிறார். எனினும் மக்கிய குப்பை, மங்காத குப்பை என்று பிரச்சாரம் செய்யாமல் மரண தண்டனை பக்கம் ஸ்டியரிங்கை திருப்பி விட்டிருக்கிறார் ஜனநாதன்.

சிறைச்சாலைக்குள் நடக்கும் சம்பிரதாயங்கள், கைதிகளின் மனநிலை உள்ளிட்டவற்றை கூடுமானவரை ஊடுருவி பார்த்திருப்பது சபாஷ் போட வைக்கிறது. 'ஏதோ மக்களுக்காக போராடுகிறேன் என்று சொன்னாயே? ஆனால் அவர்கள் உனக்கெதிராக போராட்டம் செய்கிறார்களே?' என மெக்காலே (ஷாம்) கேட்க அதற்கு பாலு (ஆர்யா) நான் சொல்லும் ஜனம் இவர்களல்ல என்று பதில் சொல்வது க்ளாஸ். தூக்கு தண்டனைக்கான பாவத்தை சுமப்பது நீதிபதியா, தூக்கில் தொங்கவிடும் ஊழியரா அல்லது கடவுளா எனும் தர்க்கம் அருமை. 'கைதிகளுக்கு செய்தித்தாள்களை தருவதற்கு முன்பாக அவற்றை தணிக்கை செய்யும் காட்சியில் 'அவங்க பிரச்னையே வேற' என ஷாம் தரும் விளக்கம் சிந்திக்க வைக்கிறது. கலாசியாகவே வேலை செய்து ஓய்வு பெற்றவரை பாராட்டி சுவற்றில் ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டர் சில நொடிகள் கண்முன் வந்து செல்லும். ரயில்வே துறை ஊழியர்களை இதைவிட மறைமுகமாக நையாண்டி செய்ய முடியாது.

'எப்படி கற்பழித்தேன் என்று முந்தைய நீதிபதிகளிடம் நடித்து காண்பித்தேன். அதனை மீண்டும் நடித்து காட்டவா?' என சிறைச்சாலைக்கு வரும் நீதிபதியிடம் கைதி ஒருவர் பேசுவது சரியான சாட்டையடி. இப்படி வெகு சில இடங்களில் மட்டுமே பரபரப்பும், நல்ல வசனங்களும் இருக்க மற்றபடி பெரிய திருப்பங்கள் இல்லாமல் பழைய திருடன் போலீஸ் பாணியில் கடக்கிறது படம்.

எங்க வீட்டுப்பிள்ளை நம்பியாரே சவுக்கால் அடித்தாலும் ஷாமிடம் இருந்து ஒரு அளவிற்கு மேல் நடிப்பை கொண்டுவரமுடியாது என்பது உலகறிந்த விஷயம். அவர் சொதப்பாமல் இருந்ததே பெரிய விஷயம். ஆர்யா மற்றும் விஜயசேதுபதி. எனும் இரட்டைக்குழல் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு பட்டாசாக வெடித்திருக்க வேண்டாமா? இது நாயகர்களின் படமில்லை. இயக்குனரின் படமென்றே வைத்துக்கொண்டாலும் முன்பு சொன்னதைத்தான் கேட்க வேண்டி இருக்கிறது. சிறையில் இருந்து தப்பிக்க ஆர்யா செய்யும் சாகசங்கள் பெரும்பாலும் ஓல்ட் டைப். ஏழு கைதிகளில் ஒருவராக போலீஸ் கண்ணில் மண்ணை தூவுவது சீரியஸ் காமடி.

மும்மூர்த்திகளில் கொஞ்சம் ரசிக்க வைப்பது விஜய் சேதுபதிதான். ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் சேதுபதியின் கதாபாத்திர சித்தரிப்பும் நீர்த்துப்போக ஆரம்பிப்பது மைனஸ். கம்யூனிஸ போராளியாக கார்த்திகா. அதிரடி திட்டம் தீட்டுவது, பைக் ஓட்டுவது என சராசரி நாயகிகளின் டெம்ப்ளேட்களில் இருந்து மாறுபட்ட கேரக்டர் என்றாலும் சரக்கு இல்லையே?

பின்னணியில் சுமாராய் வசித்திருக்கும் வர்ஷன் பாடல்களில் பாஸாக தடுமாறிவிட்டார். ஏகாம்பரத்தின் ஒளிப்பதிவு புறம்போக்கின் முக்கிய பலம்.

ஏகாதிபத்திய நாடுகளின் இந்தியாவிற்கு எதிராக எப்படி குள்ளநரித்தனங்களை கட்டவிழ்க்கின்றன என்பதை சொல்லுவதில் ஜனநாதனுக்கு அலாதி ஆர்வம். அதற்கு முந்தைய படங்களான ஈ மற்றும் பேராண்மை போன்றவையே சான்று. இம்முறை ரசிக்க வைக்கும் கதைக்களன், பெரிய பட்ஜெட், நட்சத்திர வால்யூ அதிகம் இருந்தும் வெற்றிக்கோட்டை தொட தவறி இருக்கிறார் என்றே சொல்லலாம். பாலுவின் ராஜஸ்தான் மற்றும் காஷ்மீர் ப்ளாஷ்பேக்குகள் அதனை தெளிவாக உணர்த்தும்.

ஜிவ்வென துவக்கி முடித்திருக்க வேண்டிய திரைக்கதையை இழுத்து சோம்பல் முறிக்க செய்திருப்பது பலவீனம். இந்தியாவை குப்பைக்கிடங்கு ஆக்குவதற்கு எதிர்ப்பு, மரண தண்டனை பெறுவோரின் பரிதாப நிலைக்கு ஆதரவு. இதனை சிறைச்சாலை பின்னணி, கம்யூனிஸ போராட்டம், தூக்கு போடும் ஊழியரின் குற்ற உணர்ச்சி உள்ளிட்டவற்றை பக்குவமாக கலந்து ஒரு கமர்சியல் படத்தை தர மெனக்கெட்டிருக்கிறார் ஜனநாதன்.

ஆனால் ஓரளவே வெற்றி கிட்டி இருக்கிறது.

*சவுண்ட் கமெரா அக்ஷன்*

## சினித்துளி

### கடன் தொல்லைக்கு யார் காரணம்?

அண்மையில் தமிழ் சினிமாவையே உலுக்கிய செய்தி ஆஸ்கர் ரவிச்சந்திரனின் சொத்துக்களை வங்கி எடுத்துக் கொண்டதுதான். அவர் கடைசியாக தயாரித்த ஐ படம் லாபத்தை கொடுத்திருந்தாலும், ஏன் என்ற கேள்வி அனைவரிடத்திலும் இருக்கிறது. அவர் வரிசையாக தயாரித்த பெரிய படங்கள் வெற்றி என்றாலும் வாரணம் ஆயிரம், ஆனந்த தாண்டவம், வேலாயுதம், மரியான், வல்லினம், திருமணம் எனும் நிக்கா ஆகிய எல்லாப் படங்களுமே தோல்வியடைந்தன என்று சொல்கிறார்கள்.

அதிலும் விஜய் நடித்த வேலாயுதம் படம், தனுஷ் நடித்த மரியான் படங்களால் பெரிய அளவில் அவர் நஷ்டத்தை சந்தித்தார் என கூறப்படுகிறது..

### மாரிக்கும் ரஜினிமுருகனுக்கும் போட்டி



தனுஷ் நடிப்பில் 'மாரி', சிவகார்த்திகேயன் நடிப்பில் 'ரஜினி முருகன்' என இரண்டு படங்களும் ஒரே நாளில் வெளியாக உள்ளது. அனிருத் இசையில் மாரி படத்தின் இசை மே 25ம் தேதி வெளியாக உள்ளது. இதே நாளில் சிவகார்த்திகேயன், கீர்த்தி சுரேஷ், சூரி நடிப்பில் பொன் ராம் இயக்கத்தில் 'ரஜினி முருகன்' படமும் வெளியாக உள்ளது. ஒரே நாளில் 'மாரி', 'ரஜினி முருகன்' படங்கள் வெளியாவது கோலிவுட் வட்டாரத்தில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

### ரஜினியை இயக்கும் ரஞ்சித்!



சூப்பர் ஸ்டார் ரஜினியின் அடுத்த படத்தை 'அட்டக்கத்தி', 'மெட்ராஸ்' ஆகிய படங்களை இயக்கிய ரஞ்சித் இயக்கப் போகிறார் என்று உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் தயாரிப்பாளர் ரஜினிக்கு மிகவும் நெருக்கமான மிகப் பெரிய தயாரிப்பாளராம். வேறுயாருமில்லை தயாரிப்பாளர் தற்போது தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலை வராக இருக்கும் கலைப்புலி எஸ்.தாணு தானாம். வரும் ஜூன் 15-ம் தேதி படப்பிடிப்பு தொடங்கவிருக்கிறது.

இரண்டே படங்களை இயக்கிய நிலையில் சூப்பர்ஸ்டாரின் அடுத்தப் படத்தை இயக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள இயக்குநர் ரஞ்சித் நிச்சயம் அதிர்ஷ்டம் செய்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும்..! பாராட்டுக்கள்.. வாழ்த்துகள்..! மென்மேலும் உயரட்டும்..!.

### இனிமேல் வில்லன் தான்!



விக்னேஷ் சிவன் இயக்கத்தில் தனுஷின் தயாரிப்பு நிறுவனம் தயாரிப்பில் விஜய் சேதுபதி, நயன்தாரா நடித்துவரும் படம் 'நானும் ரவுடிதான்'. படத்திற்கு இசை அனிருத். இந்த படத்தில் பார்த்திபன் முக்கிய பாத்திரத்தில் நடித்து வருகிறார். இவர் தவிர்த்து ஆர்.ஜே பாலாஜி, ராதிகா சரத்குமார், உள்ளிட்ட பலர் நடித்துருகின்றனர். இதில் பார்த்திபன் மிகவும் வில்லன் பாத்திரத்தில் வருகிறாராம். மாஸ் படத்திலும் இவர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே போல் தனுஷ், வெற்றிமாறன் கூட்டணியில் விரைவில் துவங்கப்பட உள்ள 'சூதாடி' படத்திலும் பார்த்திபன் நடிக்க இருக்கிறார். இவர் நடித்த 'ஆயிரத்தில் ஒருவன்'இல் அரசன் பாத்திரம் எப்படிப் பேசப்பட்டதோ அதே பாணியில் படங்களின் கேரக்டர்களும் பேசப்படும் என்கின்றனர் படக்குழுவினர். .

MARSANS
SOLICITORS & ADVOCATES
"New Law Firm in the heart of London"

Areas of law:
- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Tamil Speaking Barrister and Solicitors

Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.

Languages: Tamil, Hindi, Telugu, Malayalam

Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;
- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences



FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk

PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)
Jaffna Hindu College Old Boys Association (UK)
Estd 1987
125 YEARS
JAFFNA HINDU COLLEGE
1890 - 2015
எமது பெருமைமிகு கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு
கொண்டாட்டத்தின் முக்கிய அங்கமாக வந்தனம் செய்திட வருகிறாள்
கலையரசி 2015
ON
SATURDAY
11TH JULY 2015
FROM 5:30 -11:00 PM
AT
FAIRFIELD CONCERT HALL
PARK LANE, CROYDON, CR9 1DG.
DOOR OPEN AT: 5.00PM
TICKET PRICES:
ADULT £100 • £50 • £20 | CHILDREN £5 (UNDER12)
இவ்விழா மூலம் கிடைக்கும் பணம் மாணவர்களின் "மென்திறன்கள் ஊக்குவிப்பு"
திட்டத்திக்காக பயன்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கின்றோம்
சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும்
உங்கள் அபிமான
மதுரை முத்து
மாபெரும் இன்னிசை மாலை
முன்னணி பின்னணி திரைப்பட பாடகர்கள் விஜய் பிரகாஷ், மஹதி,
AIRTEL SUPER SINGERS சாயி சரண், சோனியா ஆகியோருடன் இலண்டனில்
முதற் தடவையாக 30ற்கும் மேற்பட்ட வாத்திய கலைஞர்களுடன் இணையும்
ROYAL LONDON SYMPHONY ORCHESTRA
JOINS WITH RG ACADEMY OF MUSIC ORCHESTRA
கர்நாடக சங்கீத வாத்திய விருந்து
பாலு ரகுராமன், சுபத்திரா ரகுராமன், M. பாலசந்தர் ஆகியோரின் மாணவர்கள்
தொடர்புகளுக்கு:
சுகந்தன் 07958 942 895 • கிருபா 07779 227 047
சுதன் 07967 394 579 • நக்கீரன் 07920 555 050
www.jhc-oba.org.uk • secretary@jhc-oba.org.uk
Lycamobile Call the world for less
LycaFly
Lyca money Prepaid MasterCard
RiverSure Insurance




JPN
Shipper | Movers | Transporters
Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher
குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !
உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்
• Shipping & Airfreight
• Worldwide Destination
• Import & Export
• Packing & Crating
• Collection & Delivery
• All Sizes & Weights
• Immediate Insurance Cover
• Complete Documentation Service
Now we are Operating the Coaches Europe Wide!
DELIVERIES
Machinaries & Commercial Cargo Clearances and
Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates
குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல்
பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள்
பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.
Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches
JPN Shipping Ltd.
Unit-A2c, Redlands, Coulsdon,
CR5 2HT, Surrey.
Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk
Call us .........
Tel: 020 8668 0252
Mob: 079 3119 7571

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED